★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 நவம்பர் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 270 | Tuesday 15, November, 2022 | 20 பக்கங்கள் | 50/-

MOBILE
TALK TEXT DATA
BOOSTER 529
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
ஆகியவற்றை BOOST செய்யுங்கள்
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு
1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு
1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
மேலதிக டேட்டாவையும் செயற்படுத்திடலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (வரிகள் உள்ளடக்கப்பட்ட கட்டணங்கள்)
TRC/M/PRO/22/03
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

## எமது தேசத்தின் உண்மையான தேசிய வளம் இளம் தலைமுறையினரே!

# இளைஞர், யுவதிகளின் சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கிய "பட்ஜட்"



## 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி ரணில் உரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எமது தேசத்தின் உண்மையான தேசிய வளம் எமது இளம் தலைமுறையினரே. இவர்களுக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக இதுவரையில் நாம் செய்துள்ளதை பற்றி நாம் திருப்தியடைய முடியுமா? இளம் தலைமுறையினரைப் பாதுகாக்கும் முகமாக, நாம் முறையான பங்கொன்றை வகித்து இருப்போமாயின், இன்று அவர்கள் நாட்டை விட்டுச்செல்வதற்கு ஒருபோதும் வரிசையில் நின்றிருக்கமாட்டார்களென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இன்று இவ்விளைஞர் யுவதிகள் சிறந்த எதிர்காலத்தையே எதிர்பார்க்கின்றனர். சுபிட்சமிக்க நாடொன்றையே எதிர்பார்க்கின்றனர். எதிர்ப்பு ஊர்வலங்கள், போராட்டங்கள், பணிப்பகிஷ்கரிப்பு போன்ற மரபுசார்ந்த அரசியல் வழிமுறைகளைத் தாண்டிய புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தி, புதிய முறைமையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று பார்வையாளர் கலரியை நோக்கும் போதுகுறிப்பிடத்தக்களவு இளைஞர் யுவதிகள் வருகை தந்திருப்பது தென்படுகின்றது. சுபிட்சமிக்க எதிர்காலத்தையும், உயர்ந்த சமூகத்தையும் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதையுமே அவர்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். நாம் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவது இவ் இளைஞர் யுவதிகளுக்காகவேதான். அவர்களின் எதிர்காலத்திற்காகவேதான். சுதந்திரம் பெற்று 75 ஆண்டுளாக தேசிய வளங்களைப் பாதுகாப்பது பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். தேசிய வளங்களை பாதுகாப்பதற்கு போராட்டம் நடத்துகின்றோம், சண்டையிடுகின்றோம். உண்மையாகச் சொல்லப்போனால், நாம் எமது தேசிய வளங்களை பாதுகாக்கின்றோமா? உண்மையான தேசிய வளங்களுக்கென எதிர்காலமொன்றை உருவாக்கியுள்ளோமா? என்று நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

**2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு;**

- எதிர்வரும் 10 வருடங்களில் உயர் திறமை வாய்ந்த சர்வதேச ரீதியில் போட்டித்தன்மை கொண்ட தொழிலாளர் படையை உருவாக்குதல்....
- மேற்கு, வட மேற்கு, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை உள்ளிட்ட பிரதேசங்களில் புதிய பொருளாதார வலயங்கள்
- மூன்று புதிய சமுத்திர சுற்றுலா ஊக்குவிப்பு வலயங்கள்
- உயர்தரத்தில் திறமைச் சித்தியடைந்த 75 மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர் பல்கலைக்கழகங்களுக்கான புலமைப்பரிசில்கள்
- திறமையாக சித்தியடைந்த 75 பட்டதாரிகளுக்கு முதுமாணி பட்டத்திற்கான வெளிநாட்டு புலமைப் பரிசில்கள்
- ருஹுனு, பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களில் முதுமாணி வைத்திய பட்டப்படிப்பு வசதிகள்
- செஸ்வரி மூன்று வருட காலத்தில் படிப்படியாக நீக்கம்
- துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி 4 வருடங்களில் படிப்படியாக நீக்கப்படும்
- ஆயுதப்படை ஆளணியினருக்கு 18 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெறுவதற்கான அனுமதி

06

## பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உள்ளது

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது ஆளும் கட்சியின் பொறுப்பு மட்டுமன்றி எதிர்க்கட்சி உட்பட அனைவருக்கும் அந்த தார்மீக பொறுப்பு உள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தில் வைத்து வரவு செலவு திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராமப் பகுதி இளைஞர்களை பொருளாதார உற்பத்தியில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கும் திட்டம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

06

## வரிகள் எதுவும் அதிகரிக்கப்படாத அருமையான வரவு செலவு திட்டம்

### அநாவசிய போராட்டங்களை கைவிட சபையில் ஹரின் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டுக்குத் தேவையான நீண்ட கால திட்டங்களை ஜனாதிபதி இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்வைத்துள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள இந்த வரவு செலவு திட்டத்தின் ஊடாக வரிகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை என தெரிவித்த அவர், கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நாடு இருந்த நிலையிலிருந்து தற்போது நாடு அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு

06

## 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்;

## பார்வையாளர் கலரியில் 450 மாணவ தலைவர்களுக்கு அனுமதி

### வழமையான சம்பிரதாயத்தை மாற்றியமைத்த அதிகாரிகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று சபையில் சமர்ப்பித்து விசேட உரை நிகழ்த்தினார்.

சுமார் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் அவரது வரவு செலவுத் திட்ட உரை அமைந்திருந்தது.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் 01.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காக கூடியது.

வழக்கமாக வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது பொது மக்கள் களரி மூடப்பட்டு அரச அதிகாரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவது

06

## மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படவில்லை

### த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்பி கவலை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டமானது தோட்ட தொழிலாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர பாமர மக்கள் தொடர்பிலான அலட்சியப்போக்கு எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளதென கொழும்பு மாவட்ட எம்பியும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது, உலக வங்கி, ஐநா நிறுவனமான

06

## ஜனாதிபதியின் இல்லத்தினுள் புக முயற்சி;

## கொழும்பில் ஹிருணிக்கா உட்பட பதினைந்து பேர் கைது

### ஐ.நா அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிற்குள் பலவந்தமாக பிரவேசிக்க முயற்சித்ததாக தெரிவித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர் கறுவாத்தோட்டம் பொலிஸாரினால்

06

## மகளிர் றக்பி அணியின் தலைவி கொரியாவில் மாயம்

### நாடு திரும்பவிருந்த நிலையில் காணாமல்போனார்

சர்வதேச றக்பி சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக தென்கொரியாவுக்குச் சென்றிருந்த இலங்கை மகளிர் றக்பி அணியின் தலைவி துலானி பல்லேன்கொந்தகே காணாமல் போயுள்ளார்.

7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான ஏசியன் றக்பி செவன்ஸ் தொடரின் 2 ஆவது கட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கையின் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் தென் கொரியாவுக்குச் சென்றிருந்தன.

இப்போட்டிகளின் பின்னர் இலங்கை அணி தென்கொரியாவின் இன்சின் நகரிலிருந்து நேற்று முற்பகல் இலங்கைக்கு வரவிருந்தது. இந்நிலையில் இலங்கை மகளிர் அணியின் தலைவி துலானி பல்லேன்கொந்தகே காணாமல்

06

## தனுஷ்கவை பிணையில் விடுவிக்க இரண்டாவது மனு



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவிற்கு பிணை பெற்றுக் கொள்வதற்காக இரண்டாவது பிணை விண்ணப்பம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி, டிசம்பர் 8 ஆம் திகதி நியூ சவுத் வேல்ஸ் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# 74 ஆவது அகவையில் பேராயர் மல்கம் ரஞ்சித்



இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இன்று தனது 74 ஆவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார். இலங்கையின் முதல் கர்தினாலாகவிருந்த தோமஸ் கூரேயின் மறைவுக்கு பின்னர் 22 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது கர்தினாலாக தெரிவு செய்யப்பட்டவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

இவர் குருநாகல் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டொன் வில்லியம், மேரி வினிஃப்ரீடா தம்பதியினருக்கு ஒரே மகனாகப் பொரளை புனித அலோசியஸ் குருமடம் புகுந்தார்.

1966_1970 ஆம் ஆண்டுகளில் கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியலும் இறையியலும் பயின்றார். இதனையடுத்து மேற்படிப்புக்காக ரோம் நகருக்கு அனுப்பப்பட்டார். ரோமிலிருந்து ரோம் திருத்தந்தை அர்பன் பல்கலைக்கழகத்தில் இறையியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

உரோமில் படிப்பை முடித்த பின்னர் இலங்கை திரும்பிய மல்கம் ரஞ்சித் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பங்குகளில் மறைபணி ஆற்றினார். 1983 இல் மறைபரப்பு நிறுவனங்களின் தேசிய இயக்குநராக நியமிக்கப்பட்டார். இரத்தினபுரி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக 1995 நவம்பர் 2ஆம் திகதி மல்கம் ரஞ்சித் பொறுப்பேற்றார். 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் பேரருட்திரு.

மல்கம் ரஞ்சித்தை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக நியமனம் செய்தார்.

## வியட்நாம் கடலில் மீட்கப்பட்ட

# இலங்கையர்களுக்கு மனிதாபிமான உதவி

### புலம்பெயர்ந்தோர் அமைப்பு ஏற்பாடு



வியட்நாம் கடற்பரப்பில் மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு சர்வதேச புலம் பெயர்ந்தோர் அமைப்பு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

வியட்நாமிலுள்ள முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தாமாக முன்வந்து இலங்கைக்கு செல்ல விருப்பம் தெரிவித்தால், அதற்கான உதவிகளை வழங்க தயாராக இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற மியான்மரின் மீன்பிடிப் படகு கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் கடற்பரப்பில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கரை ஒதுங்கியது. இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக படகில் இருந்த ஒருவர் இலங்கை கடற்படைக்கு அறிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, வியட்நாம் சிங்கப்பூர் மற்றும் மலேசியா அரசாங்கங்களை தொடர்புகொண்டு குறித்த படகு தொடர்பான தகவல்களை இலங்கை பரிமாறிக்கொண்டது. இதனையடுத்து, குறித்த படகுக்கு அருகில் பயணித்த ஜப்பானிய கப்பல் மூலம் இலங்கையர்கள் மீட்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## SLPP மாற்றுக்குழு நால்வர் சஜித்துடன் இணைவு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து பாராளுமன்றம் தெரிவாகி அதன் பின் அக்கட்சியிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுதந்திரமாக செயற்பட்டு வந்த நால்வர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்றைய தினம் இணைந்து கொண்டுள்ளனர்.

அநுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி, ஜயரத்ன ஹேரத் மற்றும் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே ஆகிய நால்வரே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். குருநகரில் 40 Kg கஞ்சா மீட்பு

### இளைஞன் ஒருவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் நேற்று திங்கட்கிழமை 40 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து படகு ஒன்றில் குருநகர் கடற்கரை பகுதிக்கு கஞ்சா கடத்தி வரப்பட்ட நிலையில், நேற்றைய தினம் கடற்படையினரின் சோதனை நடவடிக்கையின் மூலம் கஞ்சா மீட்கப்பட்டது. கஞ்சாவை கடத்தி வந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரையும் கைது செய்துள்ள கடற்படையினர், கஞ்சாவையும் குறித்த இளைஞனையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# மக்களின் எதிர்பார்ப்புக்கு எந்த பதிலும் கிடையாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எந்தவித பதிலும் கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

மக்கள் நிவாரணங்களை எதிர்பார்த்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் அதற்கான திட்டங்கள் எதுவும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. அந்த வகையில் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இதில் எவ்வித பதிலும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முப்படை வீரர்களுக்கு இன்று முதல் பொது மன்னிப்பு

### டிசம்பர் 31ஆம் திகதி வரை காலக்கெடு



விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத முப்படை உறுப்பினர்கள் சட்டரீதியாக சேவையில் இருந்து விலகுவதற்கான பொது மன்னிப்பு காலம் இன்று ஆரம்பமாகிறது.

இதன்படி இன்று (15) முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காதவர்களுக்கு பொது மன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களிடமிருந்து ஏதேனும் தொகை செலுத்த வேண்டியது இருப்பின் சட்டரீதியாக வெளியேறும் முன் அத்தொகையை செலுத்த வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## இரா. சம்பந்தன் தலைமையில்

# தமிழ் கட்சிகளிடையே இன்று முக்கிய சந்திப்பு



தமிழ் கட்சிகளுக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று மாலை 5.30க்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் குறித்த சந்திப்பானது, கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த சந்திப்புக்கு அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 300 சதொச கடைகளுக்கு மதுபான உரிமம் வழங்கல்

### கலால் திணைக்களம் ஏற்பாடு

நாடு முழுவதும் உள்ள 300 சதொச கடைகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்க, கலால் திணைக்களம் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இந்நிலையில் அனைத்து சதொச நிறுவனங்களுக்கும் உடனடியாக மதுபான உரிமங்களைப் பெறுவதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் சில சதொச வர்த்தக நிறுவனங்கள் அடிப்படை நியமங்களுக்கு இணங்கவில்லை என்பதனால் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

விதிகளுக்கு இணங்காத சில சதொச நிறுவனங்களுக்கு இந்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுக்கும் போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் தேவையான அனுமதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும், சதொச கடைகளில் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கலால் திணைக்களம் இதுவரை சுமார் 6,000 மதுபான உரிமங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத் ஏற்பாட்டில் மீலாத் விழா

**(பேருவளை விசேட நிருபர்)**

### 41வது வருட பூர்த்தி விழாவில் முக்கிய பிரமுகர்கள் கௌரவிப்பு

பேருவளை, சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத் ஏற்பாட்டிலான முப்பெரும் விழா இம்மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம் ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் அனுசரணையுடன் வருடாந்தம் நடாத்தி வரும் சீனன்கோட்டை குர்ஆன் மத்ரஸாக்களுக்கிடையிலான சன்மார்க்க போட்டிகளுடனான மீலாதுன் நபி விழா மற்றும் சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை), சீனன் கோட்டை ஆரம்பபாடசாலை மற்றும் கல்லூரிகளில் இருந்து தேசிய பரீட்சைகளில் திறமை சித்தி பெற்றவர்கள், தேசிய ரீதியில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த மற்றும் பல்கலைக்கழகம் தெரிவான சீனன்கோட்டை மாணவ, மாணவிகள் இவ் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்தோடு சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம். எம்.எம். சிஹாப் ஹாஜியார், உப தலைவர் ஏ.ஆர்.எம். ஸுலைமான் ஹாஜியார், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஆகியோரும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பரிசளிப்பு விழா நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தலைவருமான அல்ஹாஜ் மர்ஜான் பளீல், சவுதி அரேபிய தூதரகத் தலைமை அதிகாரி கலாநிதி அஸ் ஸெய்யித் காலித் அல் மக்கி ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், புத்தளம் விருதோடை அஸீஸிய்யா அரபுக் கல்லூரி ஸ்தாபகர் சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா,

பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் அல்ஹாஜ் பௌஸான் அன்வர், தரீக்காக்கள் உயர் கவுன்சில் தலைவர் அஸ் ஸெய்யித் நகீப் அலவி மௌலானா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் இக்ராம் (அல் பாஸி) சிறப்புச் பேச்சாளராகவும் கலந்து கொள்வர்.

# லேக்ஹவுஸ் யசீர் மும்தாஸின் மாமனார் காலமானார்



**(அஷ்ரப் ஏ சமத்)**

லேக் ஹவுஸ் விளம்பரப்பகுதியில் கடமையாற்றும் யசீர் மும்தாஸின் மாமனார் சுல்தான் அப்துல் காதர் (வயது 78) நேற்று முன்தினம் (13) இரவு ரத்மலானையிலுள்ள தனது வீட்டில் காலமானார். இவர் பாத்திமா யஸ்மினின் கணவரும், பாத்திமா பர்வின் யசீர் மும்தாஸ் (முகாமையாளா' மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம்), லண்டனில் வசிக்கும் அஹமட் காமிலின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஜனாசா நேற்று (14.) களுபோவில ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் அஸர் தொழுகையின் பின் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## வரவு செலவு திட்டத்தின் மூலம்

# ஒன்றரை ரில்லியனை அரசு வரி வருமானமாக பெற எதிர்பார்ப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒன்றரை ரில்லியனை அரசாங்கம் வரி வருமானமாக பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க எம்பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மீதான உரை தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பரிந்துரையை ஜனாதிபதி இந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் முன்வைக்கவில்லை.2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒன்றரை ரில்லியன் வரி வருமானத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஏதேனும் நிவாரணம் கிடைக்குமா என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இந்த வரவு செலவுத் திட்டம் மக்களை புறக்கணிக்கும் வகையில் காணப்படுகிறது. பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு குறைந்தபட்ச நிவாரணம் வழங்கும் எவ்வித பரிந்துரைகளும் வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.மாறாக வரி அதிகரிப்பை மாத்திரம் வரவு செலவுத் திட்டம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

பொருளாதார ரீதியில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுக்கும் நடைமுறை திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை

மறுபுறம் இலாபம் பெறும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி அரச வருமானத்தை குறுகிய காலத்தில் ஈட்டிக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு

# ஒரு வருடத்தில் மட்டும் 1,800 முறைப்பாடுகள்




இந்த வருடத்தில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு 1,800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் மேற்படி ஆணைக்குழுவிற்கு 1,861 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதுதொடர்பில் 620 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதற்கு மேலதிகமாக சொத்துக்கள் தொடர்பான ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் 64 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த ஆணைக்குழு, கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் சுமார் 50 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. முறைப்பாடுகள் தொடர்பில் நிறுவன மட்டத்தில் 72 அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதுடன் மேலும் 328 முறைப்பாடுகள் மேலதிக விசாரணைகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் இருந்து இலஞ்ச சட்டத்துடன் தொடர்பில்லாத 719 முறைப்பாடுகளின் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# வரவு செலவு திட்டத்தில் மக்களுக்கு எதிர்பார்த்த தீர்வு இல்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி தமது திட்டத்தை தெரிவித்துள்ளார் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக குறிப்பிடுவதற்கு எதுவும் கிடையாது. கூட்ட வேண்டிய அனைத்தையும் ஏற்கனவே கூட்டியுள்ள நிலையில் தற்போது இந்த வரவு செலவுத் திட்டத்தில் முக்கியமானது என எதையும் குறிப்பிட முடியாது. நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய நெருக்கடியை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்கான ஜனாதிபதியின் திட்டமாக மட்டுமே இது அமைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் 2023















# குளியாப்பிட்டி நகர சபை

## புதிய பொது சந்தை கடைத் தொகுதியின் வர்த்தகத் தளங்களை குத்தகைக்கு விடல்

**2023 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 30 ஆண்டுகளுக்காக குளியாப்பிட்டி நகர சபை வசமுள்ள புதிய பொது சந்தை கடைத் தொகுதியின் கீழுள்ள வர்த்தகத் தளங்களை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற வர்த்தகர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**



| வரிசை இல. | மாடி | வர்த்தக வகை |
|---|---|---|
| 01 | தரைத் தளம் | 21 கடை அறை |
| 02 | முதலாம் மாடி | 17 கடை அறை |
| 03 | இரண்டாம் மாடி | 02 பாரிய அளவான பொது வர்த்தகத் தளம் (புடவை வர்த்தகம்/ பெஷன் கடைகள்) |
| 04 | மூன்றாம் மாடி | 01 3D திரையரங்கு, 01 9D திரையரங்கு, அழகு நிலையம், 02 Large commercial Area 01, Large commercial Area 08, உணவகங்களுடன் (Food court), 01 விழா மண்டபம்/ மாநாட்டு அரங்கு |
| 05 | நான்காம் மாடி | 03 உணவகங்களுடன் (Food court), 01 Game Zone, 01 Rentable space, 01 உடற்பயிற்சி நிலையம், 01 Commercial Area, Digital Screen வசதிகள் |
| 06 | மேல் மாடி | 02 திறந்த வெளியுடனான உணவகங்கள், (Bar Area, Restaurant, Food Court, Kitchen) |

**புதிய பொது சந்தை கடைத் தொகுதியை குத்தகைக்கு விட எதிர்பார்த்திருக்கும் வர்த்தக தளங்கள் தொடர்பில் அனைத்து விபரங்களும் அடங்கிய பெறுகை ஆவணத்தை ரூபா 1000 கட்டணத்தை செலுத்தி குளியாப்பிட்டி நகர சபை தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.**

I. **விலைமனு விண்ணப்பப் படிவத்தை வெளியிடல்:** 2022.11.16 தொடக்கம் 2022.12.08 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை
II. **அறவிடப்படும் கட்டணம்:** பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத ரூபா 1000 விண்ணப்பக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை முறி
III. **விலைமனு விண்ணப்பங்களை ஏற்பது:** 2022.11.17 தொடக்கம் 2022.12.09 வரை வார நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 02.00 வரை
IV. **விலைமனு விண்ணப்பம் திறப்பது:** 2022.12.09 அன்று பி.ப. 02.30 (விண்ணப்பதாரர் அல்லது அவர்தம் எழுத்துமூல அதிகாரம் பெற்ற நபர் ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.)
V. **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு தொகை:** குறைந்தபட்ச விலைமனு தொகை அல்லது அதற்கு மேற்பட்ட விலைமனுத் தொகையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, குறைந்தபட்ச விலைமனுத் தொகைக்கு குறைவான விலைமனுக்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
VI. **விலைமனு தொடர்பான விபரம்:** அலுவலக நேரங்களில் வருவாய் மேம்பாட்டு அதிகாரி மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (தொ.பே.இல.: 037-4947798/ 037-4947853) இணையதளம்: www.kuliyapitiya.uc.gov.lk

**விலைமனு தொடர்பான இறுதி முடிவு குளியாப்பிட்டி நகர சபையின் பொதுக் குழு வசமானதாகும்.**

**எம்.எம். லக்ஷ்மன் அதிகாரி,**
தலைவர், நகர சபை, குளியாப்பிட்டி
2022.11.09
அலுவலகம்: 037-2281275/ 037-4947798, தொலைநகல்: 037-2281114
மின்னஞ்சல்:- kuliyauc@gmail.com இணையதளம்:- www.kuliyapitiya.uc.gov.lk

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 19

**குறள் தரும் சிந்தனை**

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்

உறுதிவாய்ந்த வீரர்களை அதிகம் உடையதாக இருந்தாலும் தலைமை தாங்கும் தலைவர்கள் இல்லாவிட்டால் அந்தப் படை நிலைத்து நிற்க முடியாது.

# மக்கள் நலன் சார்ந்த வரவுசெலவுத் திட்டம்

இலங்கையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சுதந்திர இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் இவ்வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையின் விளைவாக இவ்வருடத்தின் தொடக்கத்தில் ஆரம்பமான பொருளாதார நெருக்கடி கடந்த மே, ஜூன், ஜூலை மாதங்களாகும் போது தீவிர நிலையை அடைந்திருந்தது. இந்த சூழலில் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்குடன் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கலானார். இதன் பயனாகத் தீவிர பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இதேவேளை இந்நாட்டின் 75 வது சுதந்திர தினப் பவள விழாவும் 2023 ஆம் ஆண்டில் கொண்டாடப்படவிருக்கின்றது. இவ்வாறு முக்கியத்துவம் மிக்க காலப்பகுதியில் தான் இவ்வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழலில் நாட்டின் அனைத்து தரப்பினரையும், துறைகளையும் கவனத்தில் கொண்டதாக இவ்வரவு செலவுத்திட்டம் அமைந்திருப்பது விஷேட அம்சமாகும்.

நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதையும் வளமான வாழ்வை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதையும் இலக்காகக் கொண்டுள்ள இவ்வரவு செலவுத்திட்டம், 2048 இல் அபிவிருத்தி அடைந்த தேசமாக நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேவையான அடித்தளத்தைக் கொண்டிருக்கின்றது. 21 ஆம் நூற்றாண்டின் புதிய உலகுக்கு ஏற்ப இவ்வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இந்நாட்டின் குழந்தைகளது நலன்களை முன்னிலைப்படுத்தி போஷாக்கு மேம்பாட்டுக்கான விஷேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கபட உள்ளது. இதன் நிமித்தம் ஐநூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் சமுர்த்தி, முதியோர், விஷேட தேவையுடையோர், சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவை மேலும் நான்கு மாதங்களுக்கு அதிகரித்து வழங்கவும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, வட மேல், மேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் அடங்கலாக பல இடங்களிலும் பொருளாதார வலயங்களை அமைப்பதற்கான முன்னொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளன. அத்தோடு புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும். இதன் பயனாக இளைஞர்களின் வேலையின்மைக்கும் தீர்வு கிடைக்கப்பெறும். அதேநேரம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக தேசத்தைக் கட்டியெழுப்ப இவ்வாறான பொருளாதார வலயங்கள் பாரிய பங்களிப்பை நல்கும். இதன் பயனாக நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டி வருவதிலும் இவ்வலயங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கும்.

மேலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை கல்வியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்புவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கிராமிய பாடசாலைகளின் அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்தவும், ஆயிரம் இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு இலவச இணைய வசதியை பெற்றுக் கொடுக்கவும் முன்மொழியப்பட்டுள்ளன.

அத்தோடு கல்வித்துறையை அடிப்படையாகக் கொண்ட பல ஊக்குவிப்பு திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடத்தை ஆரம்பித்தல், யாழ்ப்பாணம், பேராதனை மற்றும் றுஹுணு ஆகிய பல்கலைக்கழகங்களின் மருத்துவ பின்படிப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல திட்டங்களும் அடங்கியுள்ளன. அத்தோடு காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகமும் இங்கு அமைக்கப்படுவதற்கான திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாயப் பொருளாதாரத்தை பாரம்பரியமாகக் கொண்டுள்ள இந்நாட்டில் 10 விவசாய தொழில்முயற்சி கிராமங்களும் அமைக்கப்பட உள்ளன. அத்தோடு அறுவடைக்கு பின்னரான சேதங்களைக் குறைப்பதற்கான திட்டத்தின் கீழ் களஞ்சிய வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இதேவேளை, சூரிய சக்தி படல்களையும் இலத்திரனியல் மோட்டார் கார்களையும் உள்நாட்டில் உற்பத்தி செய்ய வசதி அளிக்கப்பட உள்ளதோடு 2023 இல் சமய வழிபாட்டுதலங்களுக்கு அரச அனுசரணையில் சூரிய சக்தி படல்கள் பெற்றுக்கொடுக்கப்பட உள்ளன.

இவ்வாறு நாட்டின் அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்தியதாக அமைந்திருக்கும் இவ்வரவு செலவுதிட்டம் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியையும் பொருளாதார செழுமையையும் இலக்காகக் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# சமூகத்திலிருந்து போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கு இளவயதினர் பாடுபட வேண்டும்!

மனித குலத்திற்கு ஆபத்தாக எழுந்துள்ள பாரிய பிரச்சினை போதைப்பொருள் ஆகும். பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையானது மனித சமூகத்தை வீழ்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் ஒரு உலகளாவிய பிரச்சினையாக காணப்படுகிறது.

இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் இதுவும் ஒன்றாகும். பொழுதுபோக்குக்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சுகத்திற்காகவும் பயன்படுத்தப்படும் இப்போதைப்பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பது மட்டுமல்லாமல், உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகின்றன.மேலும் சமூகத்தில் பல சீர்கேடுகளையும் தோற்றுவிக்கின்றது.

இந்நிலையில் போதைப் பொருள் பாவனை தடுப்பில் இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைவது அறிமுகமில்லாத நண்பர்களுடன் பழகுதல், வீட்டிற்கு வெளியே அதிக நேரங்களை செலவிடல் போன்றனவாகும். தற்கால இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவதற்கு பிரதான காரணங்களாக தோழர்களின் ஊக்குவிப்பு, ஏமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமை போன்றன உள்ளன.

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை சீரழிகின்றது. சமூக அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர் தொடர்புகள் எல்லாவற்றிலும் பாதிப்புகள் ஏற்பட்டு விடுகின்றது. இதன் மூலம் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோர் மாறும் நிலை ஏற்படுகிறது.

போதைப்பொருள் பாவனை தடுப்பில் இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. போதைப்பொருள் பாவனை தடுப்பில் இளைஞர்கள் தங்களை அர்ப்பணிப்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது. இளைஞர்கள் முதலில் தாங்கள் போதைப்பொருள் பாவனை தொடர்பான எந்த விடயத்திலும் ஈடுபட மாட்டோம் என திடசங்கற்பம் பூண வேண்டும்.



போதைப்பொருள் பாவனை என்றால் என்ன? போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆபத்துக்கள் எவை? இவற்றையெல்லாம் ஏனைய இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கு ஆலோசனையாக கூறுதல் வேண்டும்.

பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்குச் சென்று வழிகாட்டல் கருத்தரங்குகள், ஆலோசனைகள் போன்றவற்றை மாணவர்கள் மத்தியில் வழங்குவதன் மூலம் போதைப்பொருள் பாவனையினை தடுக்க முடியும். மேலும் போதைப்பொருட்களினால் ஏற்படும் தீங்குகளை கூறி விழிப்புணர்வு செய்வதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கலாம்.

சமூக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 'போதைப்பொருள் சார்ந்த தீங்குகள்' எனும் தலைப்பில் மேடை நாடகங்களை நடத்துதல், சுவரொட்டிகளை ஒட்டுதல், போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் தீங்கை விபரித்து துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் போன்ற சமூக சேவைகளில் இளைஞர்கள் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் தமது சமூகத்திடையே போதைப் பொருள் பாவனையை அகற்றி விட முடியும். போதைப்பொருளுக்கு எதிரான சட்டதிட்டங்களை கடுமையாக்குவதும் போதைப்பொருட்களை ஒழிப்பதற்கான வழியாகும். பெற்றோர் தமது பிள்ளைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என அறிந்து கொண்டால் அவர்களை முற்றிலும் ஒதுக்கி விடாமல் அவர்களை அரவணைத்து, போதைப்பழக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளை எடுத்து கூறி அவர்களை அப்பழக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வெளிக்கொண்டு வர வேண்டும். மேலும் மறுவாழ்வு நிலையங்களூடாக முறையான சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலமும் போதையிலிருந்து மீண்டுவர முடியும்.

அந்தவகையில் ஒவ்வொரு இளைஞனும் தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் போதைப்பொருள் பாவனையின் கெடுதியில் இருந்து பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும். மனிதகுலத்தின் ஆரோக்கியத்தையும், வளர்ச்சியையும் பேணுவதற்கு முற்றிலும் போதைப்பொருள் பாவனையை தடுத்து எதிர்கால உலகின் சவால்களை வெற்றிக்கொள்ளும் ஆரோக்கியமான சமூகமாக மாற இளவயதினர் பாடுபட வேண்டும்.

ஏ.எம்.அஜாத்கான்
BA (Hons) Special in Geography (R) SEUSL

# சுற்றுலாத்துறை ஊடாக அடுத்த வருடத்தில் 2.5 பில். டொலர் வருமானமீட்டும் திட்டம்

இலங்கை சுற்றுலாத்துறையானது எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டுவதையும், 2024 ஆம் ஆண்டின் தொழில்துறை வருமானத்தில் 3. 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டுவதையும் இலக்காகக் கொண்டிருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ WTM எக்ஸ்போவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

"இந்த இலக்கை அடைய ஒரு சிறப்பு சர்வதேச பொதுமக்கள் தொடர்பு பிரசாரத்தை நாங்கள் தொடங்குவோம். மேலும், சுற்றுலாத்துறையின் பல்வேறு பகுதிகளை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில், நாடு முழுவதும் 40 சிறப்பு சுற்றுலா வலயங்களை இலங்கை அமைக்கவுள்ளது" என்றும் அமைச்சர் கூறினார்.



**சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சிஎன்என், பிபிசி உட்பட மற்றும் பல நிறுவனங்களுடன் உயர்மட்ட நேர்காணல்களில் கலந்து கொண்டார். இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பிரிவின் தலைவர் பௌரு சாலக கஜபாகுவுடன் அமைச்சர் காணப்படுகின்றார்.**

"இத்திட்டமானது தொழில்துறையின் பொருளாதார நன்மைகளை கிராமப் புறங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும். சுற்றுலாப் பயணிகள் வானில் இருந்து விலங்குகளைப் பார்க்கும் தனித்துவமான வாய்ப்பை வழங்கும் வகையில், யால தேசிய பூங்காவில் முதன்முறையாக 'பலூனிங்' அறிமுகப்படுத்தப்படும்" என்றும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தச் சேவையானது எதிர்வரும் ஜனவரி 2023 முதல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இத்திட்டமானது மற்றைய தேசிய பூங்காக்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

SHIRAJIV SIRIMANE from London
Rebuild your hospitality business with intelligent business solutions from
SLTMOBITEL ENTERPRISE
Call 0112389389

கேளிக்கை நிலையங்கள் மூடப்படுகின்ற நேரத்தை அதிகாலை 2.30 மணி வரை நீடித்து இரவு பொழுது போக்கை ஊக்குவிக்கும் அதே வேளையில், சர்வதேச பங்களிப்புடன் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் கொழும்பில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

FIFA உலகக் கிண்ண ரசிகர்களுக்கு போட்டிகள் இல்லாத நாட்களில் (சுமார் நான்கு நாட்கள்) அவர்களை கவர்ந்திழுக்கும் திட்டமும் WTM இன் போது தீவிரமாக ஊக்குவிக்கப்படுகிறது. நாங்கள் இதற்காக நீர்கொழும்பில் சிறப்பு ஹோட்டல்கள் மற்றும் பகுதிகளை ஒதுக்கீடு செய்துள்ளோம். இதற்காக விமானக் கட்டணம் உட்பட USD 900 பொதியை வழங்கியுள்ளோம்"என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

எக்செல் லண்டனில் கடந்த திங்கட்கிழமை (7) முதல் புதன்கிழமை (9) வரை நடைபெற்ற உலகின் இரண்டாவது பெரிய சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துக் கூட்டமான உலக சுற்றுலா சந்தையில் ஏறக்குறைய 60 பயணத்துறை நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# லக்கம் தமிழ் மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம்



ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான மஸ்கெலியா லக்கம் தமிழ் மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி. வியானிரோஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு ((IMHO)) மற்றும் இரட்ணம் அறக்கட்டளை நிறுவன முழுமையான நிதியொதிக்கீட்டில் இந்த திறன் வகுப்பறையானது மாணவர்களின் பயன்பாட்டுக்காக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதியாக ஹற்றன் கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி எ.சத்தியேந்திரா, மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஜி.செண்பகவள்ளி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவகுமார், மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர்கள், ஐஆர்மு நிறுவன திட்ட பணிப்பாளர் திரு கந்தையா விக்னேஸ்வரன் மற்றும் IMHO நிறுவன உத்தியோகத்தர்கள், ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த திறன் வகுப்பறையூடாக லக்கம் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி பயில்கின்ற 550 மாணவர்கள் மட்டுமன்றி, அயல் பாடசாலை மாணவர்களும் பயன்பெற முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் தனது பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தினமாக இன்றைய தினத்தினை தாம் கருதுவதாகவும், மாணவர்களின் நவீன கற்றல் தேவைக்காக இந்த உதவியை வழங்கியது மிகவும் போற்றத்தக்கது என்றும் தெரிவித்தார்.

சில மாணவர்கள் இவ்வாறான திறன் வகுப்பறையை இன்றைய நவீன கணினிமயமான கற்கைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதாகவும், இவ்வாறான திறன் வகுப்பறையினை தமது பாடசாலைக்கு வழங்கியமைக்காக IMHO மற்றும் இரட்ணம் அறக்கட்டளை அமைப்புகளுக்கு பாடசாலை சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் நன்றியினை தெரிவிப்பதாகவும், இத்திறன் பலகையினை பயன்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை பாடசாலைக்கு பெற்றுத் தருவதற்கு மாணவர்கள் முயற்சிக்க வேண்டுமெனவும் அதிபர் தெரிவித்தார்.

எச்.எச்.விக்கிரமசிங்க

# தேசியமட்டப் போட்டியில் பதக்கம் வென்ற மருதமுனை அல்ஹம்றா வித்தியாலய மாணவி

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா ஜஸ்னா முகம்மது வலீத் தேசிய மட்ட பேச்சுப் போட்டி பிரிவு_4 இல் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

கொழும்பு,பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டியின் போதே இவர் வெண்கலப் பதக்கத்தைப் தனதாக்கிக் கொண்டார்.



இந்த பரிசளிப்பு நிகழ்வில் ஓய்வு பெற்ற உதவி பரீட்சை ஆணையாளர் ஜிபோல் அன்ரனி, கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகள் பணிப்பாளரும், தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளருமான எஸ்.முரளீதரன், மருதமுனை அல்ஹம்றா வித்தியாலய அதிபர் ஐ.உபைதுல்லா அகியோரும் கலந்து கொண்டு மாணவி பாத்திமா ஜஸ்னா முகம்மது வலீதிற்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர். இம்மாணவி கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மாணவி கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாம் தரத்துக்கான சமூக விஞ்ஞான வினா விடைப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் மருதமுனையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.வலீத், அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறின்தாஜ் தம்பதியின் புதல்வியாவார். இம்மாணவி தேசிய மட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றதையிட்டு பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லா பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அத்துடன் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் மற்றும் பெற்றோரும் பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துள்ளனர்.

பி.எம்.எம்.ஏ.காதர்
(மருதமுனை தினகரன் நிருபர்)

# கல்வி, இலக்கியத்துறைகளில் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள லெனின் மதிவானம் மறைவு



பிரபல எழுத்தாளரும் கல்வியியலாளருமான லெனின் மதிவானம் சுகவீனம் காரணமாக தனது 51 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார். அன்னாரின் மறைவானது இலங்கையின் இலக்கிய மற்றும் கல்வித்துறைக்கு மாத்திரமன்றி, மலையக தமிழ் சமூகத்துக்கு பேரிழப்பாகுமென்று கல்வித்துறை சாரந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராகப் பணியாற்றியவர் லெனின் மதிவானம். அவர் நாடறிந்த பிரபல எழுத்தாளராவார். கல்வி மற்றும் இலக்கியத்துறையில் லெனின் மதிவானம் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் கல்விச் சமூகத்தில் தனக்கென பெரும் மாணவர் குழாமொன்றை அவர் கொண்டுள்ளார்.

மலையக இலக்கியத் துறையில் தமக்கென தனியிடம் கொண்ட எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் அவர் பணியாற்றி வந்தார். அவர் சில வருடங்களாக சுகவீனமடைந்திருந்தார்.

மலையகத்தின் ஹற்றன் காசல்ரீயை பிறப்பிடமாகக் கொண்டவர் லெனின் மதிவானம். ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார். அவரிடம் கற்றுத் தேர்ந்த மாணவர்கள் ஏராளம். இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக அவர் விளங்கினார். காசல்ரீயை பிறப்பிடமாகக் கொண்ட அவர், ஆசிரியராக தொழிலைத் தொடங்கியிருந்தார். வெளிவாரியாகவே இளநிலை, முதுநிலைப் பட்டங்களைப் பெற்றதோடு ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அவர் திடீர் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தார். அதன் பின்னர் அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

## மலையகத்தில் பூத்த மாபெரும் படைப்பாளி

எழுத்தாளர், கல்விமான், மார்க்சியவாதி என அறியப்பட்ட லெனின் மதிவானம், மலையகத்தின் முக்கிய ஆளுமைகளில் ஒருவராக மதிக்கப்படுகின்றார். அவரின் மறைவுச் செய்தி தமிழ் புத்திஜீவிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மலையகம் பெரும் கல்வியியலாளரையும் இலக்கியவாதியையும் இழந்துள்ளதாக அவர்கள் பதிவிட்டுள்ளனர். இலங்கையின் அதிகமான பத்திரிகைகளில் பெறுமதியான ஆக்கங்களை லெனின் மதிவானன் எழுதியுள்ளார். இணையத்தளங்களிலும் அவரது கனதியான ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அவர் கடந்த சில வருடங்களாக பொதுநிகழ்வுகளில் பங்கேற்கவில்லை. உடல் நிலை சீரற்றுப் போன காரணத்தினாலேயே அவர் ஒதுங்கியிருந்தார்.

அவரது இழப்பால் குடும்பத்தவர், உறவினர்கள், நண்பர்கள் , கலை, இலக்கிய ஆர்வலர்கள் துயரில் மூழ்கியுள்ளனர்.

லெனின் மதிவானம் படைத்துள்ள நூல்களில் சில வருமாறு:

பின் நவீனத்துவ சூழலில் வாசிப்பு தொடர்பான கருத்தாடல், பாரதியியலுக்கும் கல்வியியலுக்குமான ஒரு புதிய பங்களிப்பு, கவிஞர் இ. முருகையன் காய்ந்து கனிந்து அமைதியாக நின்ற பெருமரம், ஈழத்து இலக்கிய செல்நெறியில் முற்போக்குச் சிறுகதைகளின் சுவடுகள், ஈழத்தமிழ் இலக்கிய ஆளுமைகள் பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன், சோஷலிசத்திற்கான பாதை பற்றி பேராசிரியர் கைலாசபதி, பாலைவனத்தில் ஒரு பசுந்தரை,ஜூலியஸ் பூசிக்கின் 'தூக்கு மேடைக்குறிப்பு', இலங்கையின் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் ஒரு சமூகவியல் நோக்கு, சாருமதி என்றொரு மானுடன், மலேசியத் தமிழரும் இனத்துவ முரண்பாடுகளும்_ சமகாலச் சமூகப் பார்வைகள்

இவை போன்ற ஏராளமான நூல்களை அவர் படைத்துள்ளார். லெனின் மதிவானம் மறைவு மாபெரும் இழப்பாகும்.

# அதிகரிக்கும் மக்கள் தொகையினால் திண்டாடப் போகின்றதா உலகம்?

உலகில் மக்கள் தொகை அதிகரித்துச் செல்கிறது. இன்று உலக மக்கள் தொகை 800 கோடியாகிறது என ஐ.நா.வின் புதிய மக்கள் தொகை மதிப்பீட்டில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் அரைவாசிக்கு மேல் இந்தியா, பாகிஸ்தான், காங்கோ, எகிப்து, எதியோப்பியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தான்சானியா, ஆகிய 8 நாடுகளிலேயே உள்ளனர் என்றும் ஐ.நா.அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையானது 700 கோடியிலிருந்து 800 கோடியாவதற்கு 12 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், 800 கோடியிலிருந்து 900 கோடியாவதற்கு 15 ஆண்டுகள் ஆகுமெனவும் அதாவது 2037 இல் உலக மக்கள் தொகை 900 கோடியெனவும் ஐ.நா. வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக சனத் தொகையில் சீனா(144 கோடி), இந்தியா(139 கோடி), ஐக்கிய அமெரிக்கா(33 கோடி), இந்தோனேஷியா(27 கோடி), பாகிஸ்தான்(22 கோடி), பிரேசில்(21 கோடி), நைஜீரியா(21 கோடி), பங்களாதேஷ்(16 கோடி), ரஷ்யா(14 கோடி), மெக்ஸிகோ(13 கோடி) ஆகிய நாடுகளே அதிக சனத்தொகையை கொண்டுள்ளன. உலக சனத்தொகைப் பட்டியலில் இலங்கை(2 கோடி) 58 ஆவது இடத்தில் உள்ளது.

உலக சனத்தொகை வளர்ச்சியானது வளர்ந்து வரும் நாடுகளில் மிக மிக வேகமாக இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். உலக சனத்தொகை வருடமொன்றுக்கு 80 மில்லியன் தொகையினால் அதிகரித்து வருகின்றது. நாள் ஒன்றுக்கு பிறப்புக்களால் 2,18,900 சனத்தொகை அதிகரிக்கின்றது.




இறப்பு வீதத்தைவிட பிறப்பு வீதம் அதிகமாக காணப்படுவதே சனத்தொகைப் பெருக்கத்திற்கான காரணம் எனலாம். நவீன காலத்தில் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றம் பெருமளவுக்கு இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது.

பதின்ம வயதிலே குழந்தையைப் பெற்றுக் கொள்வதில் ஆபிரிக்க நாட்டுப் பெண்கள் இன்று முன்னிலையில் இருப்பதனால் அங்கு வேகமாக சனத்தொகை அதிகரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன.

உலக சனத்தொகை மாநாடுகள் புகாரெஸ்ட் (1974), மெக்ஸிகோ (1984), கெய்ரோ (1994) நகரங்களில் கூடின. இருந்தபோதிலும் உலக சனத்தொகை பற்றிய காத்திரமான உணர்வு 1987 இல் தான் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் உலக சனத்தொகை 500 கோடியை தாண்டியது.

## 800 கோடியாக உயர்ந்தது சனத்தொகை

அதிகப்படியான மக்கள் தொகையால் சமூக, பொருளாதார சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. காடுகளின் பரப்பு குறைந்து வருகின்றது. கிராம மக்கள் பிழைப்புக்காக நகரத்தை நோக்கி நகர்கிறார்கள். அங்கே வீடுகள் பெருகி சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது. குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்றன. பூமியின் கொள்ளளவை விஞ்சிய உலக சனத்தொகை அதிகரிப்பானது ஆபத்தான விளைவுகளையே உருவாக்கும் என்பதால் உலக சனத்தொகை வளர்ச்சி வீதத்தை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலை உள்ளது என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

மக்கள் தொகைப் பெருக்கத்தின் பாதிப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தி அடையாத நாடுகளிலே அதிகமாக காணப்படுகின்றது. காரணம் உலக வளத்தில் 80 சதவீதத்தை வைத்திருக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளான செல்வந்த நாடுகளில் உள்ள மக்கள் தொகை வெறும் 20 சதவீதம்தான். மாறாக, 20 சதவீத வளத்தைக் கொண்டிருக்கும் அபிவிருத்தி அடையாத நாடுகளான வறிய நாடுகளில் உள்ள மக்கள் தொகையோ 80 சதவீதமாகும்.

இன்று உலக சனத்தொகையில் சுமாராக அரைவாசி மக்கள் 25 வயதை அடையாதவர்களாக இருப்பதனால் குறுகிய காலத்தில் சனத்தொகையை கட்டுப்படுத்துவது என்பது மிகக் கடினமான விடயமாக இருக்கும் என்பது பல ஆய்வாளர்களினதும் கருத்தாக இருக்கின்றது.

இன்று உலகில் 925 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். வருடத்திற்கு 25 மில்லியன் குழந்தைகள் உலகில் பட்டினியால் இறக்கின்றன. போஷாக்கின்மையால் 170 மில்லியன் குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுகின்றன. சனத்தொகை அதிகரிக்கும் நிலையில் பட்டினி இறப்புக்களும் வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பதும் குழந்தைகள் வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்படுவதும் உலகில் பட்டினி அதிகரிப்பும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அறியப்பட்ட வளங்களை கணக்கில் எடுத்தால் உலக மக்கள் தொகை மிகையாக (Over Population) கருதப்படுகிறது. எதிர்காலத்தில் மனிதனின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இயற்கையின் இரகசியங்கள், முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட்டு புதிய வளங்கள் கண்டறியப்படுமானால் இருக்கும் இந்த மக்கள் தொகை குறைவானதாக (Under Population) கருதப்படும் நிலை தோன்றக்கூடும்.

கலாபூஷணம் பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# தொட்டவத்தை அல்பஹ்ரியா பாடசாலையில் வசதி குன்றிய மாணவர்களுக்கு காலை ஆகாரம்

பள்ளிவாசல்களின் பரிபாலன அமைப்புகள் வெறுமனே நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் மாத்திரம் இழுபறிப்பட்டுக் கொண்டு பெறுமதியான காலத்தை வீணடிக்காது சமூகத்துக்கு அவசியமான பயனுள்ள ஏதேனும் ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை முறையாக திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்வதே கிராமங்களுக்கு பள்ளிவாசல் நிர்வாகம் செய்யும் சிறந்த சேவையாகும் என்று தொட்டவத்தை பள்ளிவாசல்களின் தர்மகர்த்தா எம்.ஏ.எம்.ரிஸ்வான் தெரிவித்தார்.





"பள்ளிவாசல் நிர்வாகங்கள் தமது பிரதேசப் பாடசாலைகள் மற்றும் பிள்ளைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தல் வேண்டும். நாட்டின் தற்போதையபொருளாதாரசூழ்நிலையை கருத்தில் கொண்டு மாணவர்களின் போசாக்கு நிலை தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். குடும்பங்களின் வறுமை, பொருளாதார நெருக்கடி காரணமாக காலை ஆகாரமின்றி பாடசாலைக்கு மாணவர்கள் வருகின்றனர். இந்தப் பிள்ளைகளை இனம் கண்டு எம்மாலான உதவி,ஒத்தாசைகளை வழங்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கான காலை உணவு அன்பளிப்பு வேலைத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே தர்மகர்த்தா ரிஸ்வான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாணந்துறை தொட்டவத்தை பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாவின் யோசனையின் பிரகாரம். அல்பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இலவச காலை உணவு வழங்கும் வேலைத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான காலை உணவு வேலைத் திட்டம் அனைத்து அரச பாடசாலைகளுக்கும் கிடைப்பதில்லை. "பிள்ளைகளின் பசி,பட்டினி சம்பந்தமாக கவனம் செலுத்துவது மக்களின் கடமையாகும். எமது ஒரு நேர உணவையும் , தியாகத்தையும் வறுமைக்கோட்டில் உள்ள பிள்ளைகளுக்காக தானம் செய்ய முடிந்தவர்கள் முன்வர வேண்டும். இது ஒரு உன்னதமான புண்ணியமிகு கருமமாகும்" எனத் தெரிவித்த பள்ளிவாசல்கள் நிர்வாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சில்மி சஹீல், ஆரம்ப கட்டமாக இருநூறு மாணவர்களுக்கு காலைநேர போசாக்கு உணவு வழங்கல் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும், இதுபோன்ற திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு அனைத்து வறிய பிள்ளைகளும் பயனடைய வேண்டும் என்பதே எமது அபிலாசையாகும்" எனவும் தெரிவித்தார்.



கல்லூரி அதிபர் எம். ஐ.எம்.ரிஸான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலன சங்க தலைவர் எம்.எம்.எம்.இம்தியாஸ் தலைமையிலான நிர்வாக குழுவினரும், முஸாப் ஹலீம் ஆசிரியர் மற்றும் எம்.ஜீ.எம். பிஷ்ரான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# சுப்ரீம்ஹெல்த் அன்லிமிடெட் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள HNB அஷ்யூரன்ஸ்

இலங்கையில் முன்னணி ஆயுள் காப்பீட்டுச் சேவை வழங்குநரான HNB அஷ்யூரன்ஸ் PLC (HNBA) சமீபத்தில் தங்களது அனைத்தையும் உள்ளடக்கிய மருத்துவ காப்பீட்டுத் திட்டமான சுப்ரீம்ஹெல்த் அன்லிமிடெட் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இந்த விரிவான சுகாதாரக் காப்பீடானது, தனிநபர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், வாழ்க்கைத் துணையின் பெற்றோர்களுக்கும் மிகச் சிறந்த சுகாதாரக் காப்பீட்டை வழங்குகின்ற பல விசேட அனுகூலங்களை உள்ளடக்கியுள்ளது.

HNBA இன் புதிய காப்பீடான சுப்ரீம்ஹெல்த் அன்லிமிடெட் திட்டமானது வாடிக்கையாளர்களுக்கு வாழ்க்கையில் ஏற்படுகின்ற எதிர்பாராத சூழ்நிலைகளின் போது உறுதியான பாதுகாப்புடன் சேர்த்து தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மன அமைதியை வழங்கும் வகையில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சிகிச்சை பெறும் வகையில் பல சிறப்பம்சங்களுடன் கூடிய சிறந்த சுகாதாரப் பராமரிப்புப் பாதுகாப்பை வழங்குகிறது.



லசித விமலரத்ன
(பிரதம நிறைவேற்று அதிகாரி)



தினேஷ் உடவத்த
(பிரதம தொழில்நுட்ப அதிகாரி)



நளின் சுபசிங்க
(தலைமை காப்பீட்டு கணிப்பாளர்)

இந்தக் காப்புறுதித் திட்டம் குறித்து HNBA இன் பிரதம நிறைவேற்று அதிகாரி லசித விமலரத்ன கருத்துத் தெரிவிக்கும் போது, "சமீப காலத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு ஏற்பட்ட மருத்துவ தேவையைக் கருத்தில் கொண்டு சுகாதார காப்பீடு அவசியம் என்று நான் நம்புகிறேன். அப்போது தான் வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு நீங்கள் முன்கூட்டியே தயாராக இருக்க முடியும்.

தங்கள் உடல்நலம் மற்றும் நிதி நலன்களைப் பாதுகாப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கு எங்கள் சுப்ரீம்ஹெல்த் அன்லிமிடெட் ஒரு சிறந்த தேர்வாக இருக்கும்" என்றார்.

HNBA இன் பிரதம தொழில்நுட்ப அதிகாரியான தினேஷ் உடவத்த கருத்துத் தெரிவிக்கையில், "புதிய சுப்ரீம் ஹெல்த் அன்லிமிடெட் காப்பீடானது, தற்போதைய சந்தை போக்குகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பெரிய முயற்சி ஆகும். இதன் காரணமாக, குறிப்பாக மருத்துவச் செலவுகள் பலருக்கு கவலையை ஏற்படுத்தும் இந்தக் காலகட்டத்தில் கம்பனி அதன் போட்டித்தன்மையை தக்க வைத்துக் கொள்ள இந்தக் காப்பீட்டுத் திட்டமானது OPD காப்பீடு, ஆயுர்வேத சிகிச்சை காப்பீடு, மருத்துவமனை அறை, உணவு மற்றும் ICU வார்ட் ஆகியவற்றின் செலவு மீளளிப்பு காப்பீடு ஆகியவற்றை துணை வரம்புகள் ஏதும் இல்லாமல் வழங்குகிறது. அத்தோடு, காப்புறுதிதாரருக்கு கண்பார்வை, மகப்பேறு மற்றும் பல் பராமரிப்புக்கான செலவுகளை ஈடுசெய்யும் கட்டாயமற்ற காப்பீடுகளும் வழங்கப்படும்" என்றார்.

HNBA இன் தலைமை காப்பீட்டு கணிப்பாளரான நளின் சுபசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "HNBA நெகிழ்வான மற்றும் புதுமையான தயாரிப்புகளை வழங்க உறுதிபூண்டுள்ளதுடன், சுப்ரீம்ஹெல்த் அன்லிமிடெட் திட்டமானது, சுகாதாரக் காப்பீட்டுத் துறையில் முன்னணியில் திகழும் என்பதுடன் வாடிக்கையாளருக்கு உடல்நலம் தொடர்பான தேவைகளையும் எளிதாக்கும்" எனக் குறிப்பிட்டார்.

சுப்ரீம் ஹெல்த் அன்லிமிடெட்டின் பலன்களைப் பெற, 1301 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக HNBA ஐத் தொடர்பு கொள்ளுமாறு அல்லது www.hnbassurance.com ஐப் பார்வையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக மட்டக்களப்பில் விரைவில் நிகழ்வுகள்

மட்டக்களப்பு விசேட நிருபர்



'முரண்பாட்டு நிலைமாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடு' எனும் தொனிப்பொருளின் கீழ் பொருத்தமான சிவில் சமூக முயற்சிகளின் ஊடாக மோதல் நிலைகளில் மாற்றங்களையும் மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் நோக்கோடு மட்டக்களப்பில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் துணை இணைப்பாளர் அப்துல் ஹமீத்தின் ஏற்பாட்டில், மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிமன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கும் விளக்கமளிக்கும் செயலமர்வு, மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியிலுள்ள கோப் இன் விடுதியில் நேற்று (13) முன்தினம் நடைபெற்றபோதே, அவர் இதனைக் கூறினார்.

இதனடிப்படையில் இளைஞர், யுவதிகளை வலுவூட்டும் செயலமர்வொன்று மட்டக்களப்பு சர்வோதயத்தில் இம்மாதம் 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மேலும், இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதால், அவர்களின் எதிர்காலம் பலத்த சவாலுக்குள்ளாகியுள்ளதுடன், சமூகத்தில் பல்வேறுபட்ட குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் நோக்குடன் கொக்கட்டிச்சோலையில் இம்மாதம் 26ஆம் திகதி போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமை மற்றும் அதைக் கட்டுப்படுத்த முயலும்போது ஏற்படும் சவால்களும் அச்சவால்களை எதிர்கொள்ளும் முறைகள் பற்றியும் தெளிவூட்டப்படவுள்ளன. இது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம் இடம்பெறவுள்ளதுடன், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதேவேளை, இலங்கை தேசிய சமாதானப் பேரவை, மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழு என்பன இணைந்து அகிம்சை மற்றும் மனித உரிமையை மதித்து சமாதானக் கலாசாரத்தை உருவாக்கி இனப்பிரச்சினைக்கு நீண்டகால நடைமுறைத் தீர்வைக் காண்பது பற்றிய கருத்தரங்கு கல்லடி கிறீக் காடன் ஹோட்டலில் இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம், மொனராகலை, பதுளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மும்மதத் தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் உட்பட 100 பேர் கலந்து கொள்ளவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# கூட்டமைப்புக்கு அதிகாரம் வழங்கப்பட்டு தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்

## இரா.சாணக்கியன் தெரிவிப்பு

வெல்லாவெளி தினகரன் நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.



வடக்கு மக்களின் பிரச்சினைக்கு எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் ஜனாதிபதி தீர்வு வழங்குவதாக தீர்மானித்தாலும், வடக்கு மட்டுமல்லாமல் வடகிழக்கு இணைந்த மக்களுக்கும் தமிழர்களுக்கும் தீர்க்கமான முடிவை வழங்கி தமிழர்களை இந்நாட்டுக்குரிய பிரஜையாக முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் 9A சித்தி பெற்ற, க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களையும் சமூக சேவையாளர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 12ஆம் திகதி பெரியகல்லாறு மண்டபத்தில் நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றியபோது,

"எமது சமூகத்தில் உள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டும். அவ்வாறே வீதிகள், பாதைகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும். கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டு தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்" என்றார்.

"இதேவேளை, வடக்கு, கிழக்கில் என்றும் இல்லாதவாறு போதைப்பொருள் மலிந்து காணப்படுவதுடன், இளைய சமூகத்தினர் போதைப்பொருளை நுகர்ந்து பாரிய சமூகப் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

சமூகத்தில் இருக்கின்ற விளையாட்டுக்கழகங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்டவைகள் பொதுமக்களுடன் ஒன்றிணைந்து போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்கு போதியளவு விழிப்புணர்வூட்ட வேண்டும். இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கின் நிலைமை இன்னும் மோசமாக காணப்படும்" என்றார்.

# பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு யுனிசெப் உதவி

காரைதீவு குறூப் நிருபர்



பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களினால் கற்றலில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையோடு முன்னெடுக்கப்படவுள்ளதாக, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

யுனிசெப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான தரவுகள், கிழக்கு மாகாணக் கல்வி வலயங்களில் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதற்கான தகவல்களை உடனடியாக அனுப்புமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.நிமலரஞ்சன், மின்னஞ்சல் ஊடாக கோரியுள்ளார்.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய, நீண்டகால வரவின்மை உடைய, பெற்றோரை இழந்த, வறுமை கோட்டுக்கு கீழுள்ள மாணவர்கள், பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மாணவர்கள் இந்நடவடிக்கையின்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரம்; அபராதம் விதிப்பு

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் உழவு இயந்திர உரிமையாளருக்கு எதிராக 50,000 ரூபா அபராதம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை அஸ்ரப் நகரில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றிய உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (14) ஆஜர்படுத்திய போதே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.உழவு இயந்திர உரிமையாளர் அபராதம் செலுத்திய பின்னர், உழவு இயந்திரம் விடுவிக்கப்பட்டது.

# மத்தியஸ்தசபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு காத்தான்குடியில் நேற்று ஆரம்பம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிலுள்ள மத்தியஸ்த சபை மத்தியஸ்தர்களுக்கான 'மத்தியஸ்த நுட்பம் மற்றும் தந்திரோபாயங்கள்' எனும் தலைப்பிலான ஐந்து நாள் பயிற்சி செயலமர்வு நேற்று(14) காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயஸ்ரீதர் இந்தச் செயலமர்வை ஆரம்பித்து வைத்ததுடன், நீதியமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழுவின் மத்தியஸ்த சபை உறுப்பினர்களை பயிற்றுவிக்கும் திட்டத்தின் கீழ் இந்த பயிற்சி செயலமர்வு நடைபெறுகிறது.

இந்த செயலமர்வில், காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிலுள்ள 55 பேர் கலந்து கொண்டுள்ளதாக, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் மத்தியஸ்தர்களை பயிற்றுவிக்கும் பயிற்றுனர் எம்.ஐ. எம்.ஆஸாத் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வு நிறைவின்போது எழுத்து மூலமான பரீட்சை இடம்பெற்று அதன் மூலம் மத்தியஸ்த ஆணைக்குழு மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

# கந்தளாயில் அடைமழைக்கு மத்தியிலும் பெரும்போக செய்கை



கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெரும்போக வேளாண்மை செய்கை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கந்தளாய், மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் உள்ளிட்ட இடங்களில் பெரும்போக வேளாண்மைச் செய்கை முன்னெடுக்கப்படுகின்றது.

கந்தளாய் குளத்தின் நீரை பயன்படுத்தி 16 ஆயிரத்து 800 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றன.

அடை மழை என்றும் பாராமல் வரம்பு கட்டுதல், விதைத்தல் போன்ற நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெறுவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# சம்மாந்துறை செந்நெல் சாஹிராவில் கணித ஆய்வுகூடம்

காரைதீவு குறூப் நிருபர்



கல்வி அமைச்சின் GEMP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சம்மாந்துறை செந்நெல் சாஹிரா கல்லூரியில் கணித ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு வருகிறது .

இதற்கென 2 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாடியாக அமையவுள்ள இந்த ஆய்வுகூடத்தில், முதல் மாடிக்காக இந்த இரண்டு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் .எம் .எம் .அமீர் இதற்கான அடிக்கல்லை அண்மையில் நட்டு வைத்தார்.

## இளைஞர் யுவதிகளின் சுபிட்சமான...

- ஸ்ரீலங்கன், டெலிகொம், ஹில்டன், வோட்டர்ஸ் ஏஜ், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஆகியவை மீள்கட்டமைக்கப்படும்.
- கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு இணையதள வசதி
- நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுவதற்கான பொருளாதார மேம்பாட்டு ஆணைக் குழு
- சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கான பல வேலைத் திட்டங்கள்
- வெளிநாட்டு வர்த்தக மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு பூரண அதிகாரம் உள்ள மையப்படுத்தப்பட்ட நிறுவனம்
- 2024 மார்ச் முதலாம் திகதியிலிருந்து அனைத்து அரசு கொடுப்பனவுகளும்
- மின்னஞ்சல் முறையின் ஊடாக செயற்படுத்தல்..
- உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பல வேலை திட்டங்கள்
- நுண்கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையை தாபித்தல்
- சிறுவர் போஷாக்கை அதிகரிப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள்
- சூரிய சக்தி மற்றும் மின்சார மோட்டார் கார்களை உள்ளூரில் தயாரிப்பதற்கான வசதிகளை மேம்படுத்தல்..
- மத தலங்களுக்கு அரசு உதவியுடன் சூரிய சக்தி மின்சாரம்
- இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறான புதிய பொருளாதாரம்
- ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டி தன்மையை கொண்ட பொருளாதார முறை

## கொழும்பில் ஹிருணிக்கா...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணித் தலைவி ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட கொழும்பில் வீதி நாடகத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கொழும்பில் நேற்று ஐ.நா. காரியாலயத்திற்கு முன்பாக ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதனை ஹிருணிக்கா பிரேமச்சந்திர உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ே மகளிர் அணியினர் முன்னெடுத்தனர்.

இதில் பெண்கள் செம்மஞ்சள் நிற உடை மற்றும் செம்மஞ்சள் நிற பட்டி தலையில் அணிந்து, செம்மஞ்சள் நிற கொடிகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மக்களின் எதிர்பார்ப்பு...

உலக உணவு திட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றால், உணவின்மை மற்றும் வறுமை ஆகிய விடயங்களில் இலங்கையிலேயே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரிவினராக பெருந்தோட்ட மக்கள் மற்றும் மாநகர பாமர மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த பின்தங்கிய பிரிவினருக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டங்களை ஜனாதிபதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.

உடனடியாக நிவாரண திட்டங்கள் இல்லாவிட்டாலும் கூட, இம்மக்களின் இக்குறைபாடுகள் பற்றி தான் அறிந்துள்ளேன் என்பதை ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டு கூறி இருக்க வேண்டும். அப்படியாயின், இந்த நலிவடைந்த மக்களை அது ஓரளவு சாந்தப்படுத்தி இருக்கும். தமது பிரச்சினைகள் பற்றி ஆளுகின்ற அரசு அறிந்து வைத்துள்ளது என்பதை அறிந்து மக்கள் சற்று நம்பிக்கை அடைந்து இருப்பார்கள். தீர்வுகள் தாமதமாகி வரும் என ஆறுதல் அடைந்து இருப்பார்கள்.

ஆனால், உயிருள்ள உழைக்கும் மக்களை மறந்து விட்டு, தோட்டங்களில் உள்ள காணிகளை பற்றி பேசி, பயிரிடப்படாத காணிகளை, புதிய முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு செலவு திட்ட உரையில் கூறியுள்ளார். நமது மக்களுக்கு பயிரிடப்படாத காணிகள் தருவதாக எனக்கு பாராளுமன்றத்தில் தந்த வாக்குறுதியை அவர் மறந்து விட்டார். அப்போது அவர் பிரதமர்.

இப்போது ஜனாதிபதி. ஆனால், நாம் மறக்கவில்லை. நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை துன்பப்படும் நமது மக்களை, இந்த அலட்சியம் கொல்லாமல் கொல்கிறது என்றார்.

## மகளிர் றக்பி அணியின்...

போயுள்ளார். இது தொடர்பில் கொரிய றக்பி சங்கத்தின் ஊடாக கொரிய பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்...

அது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இளைஞர்களை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் அதிகம் பேசப்பட்டது எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதேபோன்று விவசாய உற்பத்தி பொருளாதாரத்தில் இளைஞர்களை பங்கேற்க செய்வது தொடர்பிலும் பேசப்பட்டது. எனினும் அதை நடைமுறைப்படுத்துவது கஷ்டமான காரியமாக இருந்தது.

அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் மகாவலி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம்,வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் கீழ் உள்ள காணிகளை மீட்டெடுத்து இளைஞர்களுக்கு விவசாய உற்பத்திக்கு வாய்ப்பு அளிப்பது தொடர்பில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது வரவேற்கத்தக்கது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வரிகள் எதுவும் அதிகரிக்கப்படாத...

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக எந்தவிதமான வரிகளும் அதிகரிக்கப்படவில்லை. நாட்டிற்கு தேவையான நீண்டகால திட்டங்களையே ஜனாதிபதி இதன் ஊடாக முன்வைத்துள்ளார்.

மூன்று மாதங்களுக்க முன்னர் நாடு எப்படி இருந்தது? எரிபொருள், எரிவாயுவை பெற்றுக்கொள்ள காணப்பட்ட வரிசைகள் இப்போது இருக்கின்றனவா? என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. மக்கள் இதனைப் புரிந்துகொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை.

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றி கொள்ள வேண்டியது அவசியமாகும்.அதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும். அனைத்துக்கும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தாமல் சரியான காரணங்களுக்காக மட்டும் வீதியில் இறங்கி போராடினால் தவறில்லை. குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் வருகையை தடுக்கும் வகையில் வீதியில் இறங்கி போராடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டுக்கான கொள்கைகளை வகுப்பதற்கான நீண்டகால திட்டங்களையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார் என்பதை சகலரும் உணர்ந்து பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பார்வையாளர் களரியில்...

வழக்கம்.

ஆனால் இம்முறை முதல் தடவையாக குறிப்பிட்ட சில பாடசாலைகளை சேர்ந்த 450 பாடசாலை மாணவத் தலைவர்கள் நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்ட உரையை அவதானிப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதேபோன்று வழக்கத்திற்கு மாறாக சபாநாயகர் களரியிலும் வெளிநாடுகளின் தூதுவர்கள்,இராஜதந்திரிகள் என 40 ற்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்திருந்தனர்.

வழக்கமாக வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றுவதற்காக நிதியமைச்சர் சபைக்குள் வருகை தரும் போது கையில் வரவு செலவுத் திட்ட உரை அடங்கிய பெட்டியை அல்லது கோப்பினை கொண்டு வருவர். ஆனால் தற்போதைய நிதியமைச்சரான ரணில் விக்கிரமசிங்க தனது வரவு செலவுத் திட்ட உரை அடங்கிய சில தாள்களையே கையில் கொண்டு வந்தார்.

அரச தரப்பினரின் வரவேற்புடன் அமைச்சர்கள் புடைசூழ சபைக்குள் வந்த நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்கான தனது வரவு செலவுத் திட்ட உரையை பிற்பகல் 01.35 மணிக்கு ஆரம்பித்து 1 மணிநேரமும்15 நிமிடங்களும் உரையாற்றி 2.50 ற்கு நிறைவு செய்தார்.

வரவு செலவுத் திட்ட உரை இடம்பெற்ற போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்,தமிழ் தேசிய மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஷ்வரன், ஈ.பி.டி.பியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சபைக்கு வருகை தராத நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன வரவு செலவுத் திட்ட உரை ஆரம்பமாகி 40 நிமிடங்களுக்கு பின்னரும் அதே போன்று சில அமைச்சர்களும் சபைக்கு தாமதமாகவே வருகை தந்தனர்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின் போது எதிர்க்கட்சி தரப்பினரின் ஆசனங்கள் மட்டுமன்றி, ஆளும் தரப்பிலும் பல ஆசனங்கள் பலவும் வெறிச்சோடிக் கிடந்தன. நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சில உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்ட உரையின் போது இடை நடுவில் எழுந்து சென்ற போதும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சமல்ராஜபக்ஷ போன்றவர்கள் இறுதி வரை அமர்ந்திருந்து உரையை செவிமெடுத்தனர்.

வரவு செலவுத் திட்ட உரையை நிறைவு செய்யும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளின் தூதுவர்கள்,இராஜதந்திரிகள் மற்றும் அரச அதிகாரிகள்,ஊடகவியலாளர்களை தேநீர் உபசாரத்தில் பங்கேற்றுமாறு நிதியமைச்சர் அழைப்பு விடுப்பது வழக்கம்.ஆனால் இம்முறை தேநீர் உபசாரம் இரத்து செய்யப்பட்டதால், நிதியமைச்சரால் அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

**ஹேகார்ப் பி.எல்.சி. PLC (PQ 59) மற்றும் ஹேகார்ப் வல்யூ எடட் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (PV 86095) நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு**

ஹேகார்ப் பி.எல்.சி. (கம்பனி இல. PQ59), ஹேகார்ப் வல்யூ எடட் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட (கம்பனி இல. PV86095) ஆகிய இரண்டும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் (“அதிகாரச்சட்டம்”) 242ஆம் பிரிவிற்கு இணங்க ஒரே நிறுவனமாகக் ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன என்பது அதிகாரச்சட்டத்தின் 244(3)ஆம் பிரிவுக்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது

ஒருங்கிணைக்கப்பட நிறுவனத்தின் பெயர் ஹேகார்ப் பி.எல்.சி.. என்பதாக இருக்கும். கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட நிறுவனமாகிய ஹேகார்ப் பி.எல்.சி.யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்படும் நிறுவனமொன்றின் ஏவரேனுமொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்கியவர், அல்லது ஒருங்கிணைக்கப்படும் ஒரு நிறுவனம் கடப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரு நபர், ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் வழமையான வேலை நேரங்களில் பார்வையிட முடியும்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2022 நவம்பர் 15

ஹேகார்ப் பி.எல்.சி. PLC (PQ 59) மற்றும் ஹேகார்ப் வல்யூ எடட் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் சபைகளின் கட்டளைப்படி,

# afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.08.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.11.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

## தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**25.11.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

# கேள்வி அறிவித்தல்

**ஆதார வைத்தியசாலை**
**கரவனல்ல**
**கிரிஹல 2023/24 ஆம் ஆண்டு**

கரவனல்ல ஆதார வைத்தியசாலையின் பால் நிலையத்தை 2023/24 ஆம் ஆண்டுக்காக நடத்திச் செல்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு கோரல் வழங்கல்: 2022.11.15ஆம் திகதி தொடக்கம் 2022.12.05ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கணக்குப் பிரிவில்,

**விலைமனு திறப்பது:**
2022.12.06ஆம் திகதி மு.ப.10.30க்கு கணக்காளர் அறையில்,

**மீளளிக்கப்படாத படிவக் கட்டணம்:**
ரூபா 500.00

**விலைமனு பிணை:** ரூபா 10000.00

**குறைந்தபட்ச கட்டணம்:** ரூபா 20000.00

**மேலதிக விபரங்களுக்கு:**
0362266261 மூலம் கேட்டறிந்து கொள்ள முடியும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை – கரவனல்ல**

Repeat Your Ad For Better Offers

# மரண அறிவித்தல்



**தோற்றம் 26.01.1945 மறைவு 11.11.2022**

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பத்திரிகை முகவரும் வடமாகாண லேக் ஹவுஸ் பத்திரிகை முகவர்களுக்கு செய்தித்தாள்கள் உள்ளக விநியோக ஒப்பந்ததாரருமான பழனியாண்டி செல்வராஜ் அவர்களின் அன்புத் தாயார் பழனியாண்டி பெரியம்மா 11.11.2022 அன்று இறைவனடி அடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோமயன்குளம் இல்லத்தில் 14.11.2022 (திங்கட்கிழமை) இடம் பெற்று தட்சனை குளம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**விற்பனை பிரிவு - லேக்ஹவுஸ்**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

# கொழும்பு மாநகர சபை

**மாநகர பொறியியலாளர் திணைக்களம்**
**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரிவு**

## 2023 ஆம் ஆண்டிற்காக வீடு/தனியார் வடிகாலமைப்பு இணைப்புக்களுக்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

வீடு/தனியார் வடிகாலமைப்பு இணைப்புக்களை நிர்மாணிப்பதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்காக அனுபவமுள்ள கம்பனிகள்/தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களில் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு ரூபா 50,000,000.00க்கு குறைவானதாகும்

விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு அவர்களின் அனுபவம், இயலுமை மற்றும் இப்பணியை நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் உபகரணங்களின் இருப்புநிலை ஆகியவற்றிற்கமைவாக பின்வரும் வகுதிகளில் தரப்படுத்தப்படுவார்கள்.

1. பிரிவு “D” – சாக்கடை மற்றும்/அல்லது மழை நீர் ஆகிய உரித்தான துறைகளில் CIDA உடன் சி-8 மற்றும் மேற்பட்ட தரத்திலமைந்த 2,000,000 ரூபாவிலிருந்து 5,000,000 ரூபா வரையுமான ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தக்காரர்கள்.
2. பிரிவு “C” – சாக்கடை மற்றும்/அல்லது மழை நீர் ஆகிய உரித்தான துறைகளில் CIDA உடன் சி9 மற்றும் மேற்பட்ட தரத்திலமைந்த 1,000,000 ரூபாவிலிருந்து 2,000,000 ரூபா வரையுமான ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தக்காரர்கள்.
3. பிரிவு “B” – சாக்கடை மற்றும்/அல்லது மழை நீர் ஆகிய உரித்தான துறைகளில் CIDA உடன் சி-10 மற்றும் மேற்பட்ட தரத்திலமைந்த 4,000,000 ரூபாவிலிருந்து 1,000,000 ரூபா வரையுமான ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தக்காரர்கள்.
4. பிரிவு “A” – சாக்கடை மற்றும்/மழை நீர் ஆகிய உரித்தான துறைகளில் 400,000 ரூபாவிற்கு குறைவான ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தக்காரர்கள்.

**குறிப்பு:** வீடு/தனியார் இணைப்புக்களுக்காக எந்தவொரு ஒப்பந்தத்தையும் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தத்திற்கும் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக திணைக்கள மதிப்பீட்டின் 5% ஐ கொமாச இற்கு வரவு வைத்தல் வேண்டும்.
விண்ணப்ப படிவங்கள் இரு முறைமைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

1. **www.colombo.mc.gov.lk** என்ற கொமாச இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல். மீளளிக்கப்படாத விண்ணப்ப கட்டணமாக 1000 ரூபா + வெட் வரி ஆகியவற்றை பின்வரும் முறைமையினால் செலுத்தப்படலாம்.
   அ) மக்கள் வங்கி, நகர மண்டப கிளையிலுள்ள 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்திற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வரவு வைத்தல் அல்லது
   ஆ) வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு மாநகர எல்லைகளிலுள்ள பின்வரும் மாநகர சபை இடப்பரப்புகளிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்களில் செலுத்துதல்.
   - நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு-10 அல்லது
   - வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருளப்பொன, கொழும்பு-06.

   விண்ணப்ப படிவத்துடன் பற்றுச்சீட்டு/ துண்டை இணைத்தல் கட்டாயமானதாகும்.
2. கொழும்பு-10, மாளிகாகந்த, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரிவின் பணக்கொடுப்பனவு கருமபீடங்களில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத விண்ணப்ப கட்டணமாக 1000 ரூபா + வெட் வரி ஆகியவற்றை செலுத்திய பின்னர் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2022.12.14 ஆம் திகதியன்று வரையும் வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் மாளிகாகந்த, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரிவிலிருந்து கையேற்கலாம்.
   விண்ணப்பபடிவமானது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது அல்லது **2022.11.14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு முன்னர் மாத்திரமே வழங்கப்படும்.**

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் சான்று பகரும் ஆவணங்களுடன் ‘‘பொறியியல் பணிப்பாளர் (நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு), நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு 2022.12.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

இலகுவாக அடையாளம் காண்பதற்காக தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Registration of Contractors for Drainage Connections – 2023” என குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பத்திற்கு சான்று பகரும் அனைத்து சான்றிதழ்கள்/ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் உண்மையான பிரதிகள் நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், அவற்றை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பிற்கான பொறியியல் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-2674809.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

The Housewives' companion Classifieds on Daily News

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## வழங்கல் பிரிவு - மத்திய சமையலறை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்களை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. | அரிசி (முழுமையாக கல் மற்றும் மணல் நீக்கப்பட்டவை) |
| 02. | கருவாடு வகைகள் |
| 03. | மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், கஜு விதைகள் மற்றும் கஜு துண்டுகள் |
| 04. | தேங்காய்கள், தேங்காய் பால்/ கிறீம் |
| 05. | முட்டைகள் |
| 06. | பலசரக்குப் பொருட்கள் மற்றும் தானியங்கள் |
| 07. | வாழைப்பழம் |
| 08. | வெள்ளைச் சீனி |
| 09. | தேயிலை/ கோப்பித் தூள் |
| 10. | சூழலுக்கிசைவான உணவு சுற்றும் பொலித்தின் தாள்கள் மற்றும் (குறோசறி பைகள் - 7" x 10" மற்றும் 9" x 12") |
| 11. | தேங்காய் எண்ணெய் |
| 12. | கோழியிறைச்சி, மீன் |
| 13. | பிஸ்கட்கள் |
| 14. | பால்மா |
| 15. | கட்டிப்பால் |
| 16. | ஜேம் |
| 17. | மாஜரின் |
| 18. | எரி வாயு (L.P. Gas) |
| 19. | உணவு பொதிசெய்யும் பெட்டிகள் (காட்போட்) |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்படி 01 முதல் 20 வரையான பொருட்களுக்காக பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000.00 மற்றும் வெட் வரி என்பவற்றைச் செலுத்தியதன் பின் 2022-11-30ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தையில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. வழங்கல்களுக்காக பொதுவாக பதிவு செய்துகொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. முறையாக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள் மற்றும் துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்படும்.
05. சகல விண்ணப்பப் படிவங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்’’ எனக் குறிப்பிட்டு, பிரதான பொறியியலாளர் (வழங்கல்), வழங்கப் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு 2022-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் மேற்படி முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு இந்த விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

# 2022-11-14ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் திருத்தம் பற்றிய அறிவித்தல்

வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் திரப்பனே பண்ணையில் நிர்மாணிக்கப்படவுள்ள முட்டை அடைக்காப்பகத்திற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் ‘‘விதைகள்’’ எனும் பதம் ‘‘முட்டை’’ எனத் திருத்தப்படல் வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம், அநுராதபுரம்.**

திகதி 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4938
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,256,000.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 9 8 4 3 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,700,188.00

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1393
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,732,740.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 5 9 7 6 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,679,274.80

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 968
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,937,780.00
வெற்றி இலக்கினம் O வெற்றி இலக்கங்கள் 10 27 41 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,932,622.00

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 247
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,438,060.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 04 22 30 61
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,851,903.40

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3180
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,664,240.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 13 22 60 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,067,281.20

**Mega POWER மெகா பவர்** கோடி 28+
சீட்டிழுப்பு இலக்கம் 1286
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,564,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 280,355,046.00
ஆங்கில எழுத்து G சுப்பர் நம்பர் 04 வெற்றி எண்கள் 25 41 54 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

**மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு**
**வடக்கு மாகாண சபை**

# பெறுகை அறிவித்தல்

## 2022/2023ம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல் பெறுகை இல: NP/06/03/Cleaning Service/2023/2024

தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக்குழு அவர்களினால் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்குட்பட்ட காரியாலயங்களுக்கான 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி தொடக்கம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்புச் சேவையை (Cleaning Service) பின்வரும் மாவட்டங்களில் வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சுத்திகரிப்புச் சேவை வழங்கவேண்டிய மாவட்டம் | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 12 |
| 02 | வவுனியா | 04 |
| 03 | கிளிநொச்சி | 02 |
| 04 | மன்னார் | 03 |
| 05 | முல்லைத்தீவு | 02 |
| | **மொத்தம்** | **23** |

1) சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் பதிவு செய்யப்பட்ட தலைமைக் காரியாலயம் அல்லது பதிவு செய்யப்பட்ட கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் சேவையை வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3) தகுதி வாய்ந்த பெறுகைதாரர் கறுப்புப்பட்டியலில் இடப்பட்ட ஓர் நேவை வழங்குநராக இருத்தல் ஆகாது.
4) சேவை வழங்குநர்கள் பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை இல 04, புரூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அலுவலகத்தில் 15.11.2022 தொடக்கம் 05.12.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000.00 ஐ காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5) பெறுகை ஆவணங்கள் 06.12.2022 ம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு “தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக் குழு, மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், இல 04,புரூடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்’’ என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6) சகல கேள்விகளுடனும் ரூபா 115,000/- பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
7) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**திருமதி. ரூபினி வரதலிங்கம்**
**தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்,**
**04, புரூடி லேன்**
**அரியாலை**
**யாழ்ப்பாணம்.**

**திகதி : 15.11.2022**

# 138ஆவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கும்

# ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி



அதிபர் ஏ.கே.ரி அதஹான்



பாடசாலை ஆசிரியர் குழாம்

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பாடசாலைகள் "ஹைறாக" அமைதல் வேண்டுமென பிரார்த்தித்து, 1884 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் திகதி சனிக்கிழமை அஸர் தொழுகைக்குப்பின்னர் தோற்றுவிக்கப்பட்ட இலங்கையின் முதல் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையான ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் வரலாற்றினை இன்றைய தினகரன் நாளிதழில் பிரசுரிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"அல் மத்ரசதுல் கைரிய்யதுல் இஸ்லாமிய்யா" என்ற நாமம் சூட்டி மகிழ்ந்தார் ஒராபி பாஷா. மார்க்க ரீதியான பிளவுகள் காணப்பட்ட அக்காலத்தில் சமூகம் ஒன்றிணைவதற்கு முக்கிய நிகழ்வாக இப்பாடசாலையின் தோற்றம் காணப்பட்டது.

புதியதோர் வரலாறு படைக்க தயாரான அந்த கல்விக்கூடத்திற்கு ஆங்கிலேயர் வழங்கிய பெயர் "எங்கலோ மொஹமதியன் ஸ்கூல் ".இலங்கை முஸ்லிம் பாடசாலைகளில் "மொஹமதியன்" (முஹம்மத் நபியை பின்பற்றுவோர்) என்ற பெயர் கொண்டு அன்றைய காலத்தில் அழைக்கப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் பாடசாலை இதுவேயாகும்.

1900ஆம் ஆண்டு துருக்கிய சாம்ராஜ்யத்தின் இலங்கைக்கான தூதுவரினால் இப்பாடசாலைக்காக புதிய கட்டடமொன்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டட நிர்மாணப்பணிகளுக்காக நிதி வசதிகளை மர்ஹூம்களான நூர்டீன் ஹாஜியார், அஹமட் லெப்பை மரிக்கார் ஆலிம், நைனா மரிக்கார், அப்துல் கரீம், மஹ்மூத் ஹாஜியார் ஆகியோர் கொடுத்துதவ முன்வந்தனர். அவர்களின் உயர் நோக்கத்தில் உருவான அந்தக்கட்டடம் 1901 இல் பூர்த்தியாக்கப்பட்டது.

1901ஆம் ஆண்டு இப்பாடசாலையின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத வருடம். அதாவது, துருக்கிய சாம்ராஜ்யத்தின் கலீபாவான இரண்டாம் சுல்தான் அப்துல் ஹமீத் அவர்களின் ஆட்சிக்காலத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டதோடு பாடசாலையின் புதிய நாமமாக "அல் மத்ரஸதுல் ஹமீதியா" என மாற்றப்பட்டது. இஸ்லாமிய கிலாபத்துடன் நெருங்கிய உறவைப் பறைசாற்றும் ஒரே இலங்கைப் பாடசாலையாக 'அல் மத்ரஸதுல் ஹமீதியா' வரலாறு படைத்தது.

முன்னாள் நீதியரசரும் சமூக ஆர்வலருமான நீதிபதி என்.சி. அக்பர் அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உதவும் முகமாக சிலோன் முஸ்லிம் எடியுகேஷனல் சொசைட்டி லிமிடட் என்ற நிறுவனத்தை ஸ்தாபித்தார் .

இந்நிறுவனத்தின் முதல் பாடசாலையாக ஒரு பாடசாலை பழைய சோனகத் தெருவில் 1919ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுகின்றது. பாடசாலை வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு 'Hussiniya English Boys School' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1921ஆம் ஆண்டு அல் மத்ரஸதுல் ஹமீதியா என்ற பெயர் 'Hameediah English Boys School' என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேற்கத்திய மருத்துவம் கற்ற இலங்கையின் முதல் முஸ்லிம் டாக்டரான கலீல் அவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையில் கோலாகலமாக நடைபெற்றது. 1930 களில் ஒரு மதில் சுவரால் பிரிக்கப்பட்டு இரண்டு கட்டிடங்களில் செவ்வனே இயங்கி வந்த இரு பாடசாலைகளும் கல்வியுடன் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மிளிர்ந்தன.

1950 களில் மல்யுத்தம் மற்றும் கால்பந்தாட்டம் பயிற்சிகள் முன்னாள் பிரதி அதிபர் அப்துல் ரசாத் ஆசிரியரின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன .

1957ஆம் ஆண்டு இப்பாடசாலையில் கால்பந்தாட்ட வரலாற்றின் பொன்னான வருடம் என்றால் மிகையாகாது. இந்நிகழ்வின் பின்னர் இப்பாடசாலை வெற்றி வாகை சூடாத கால்பந்தாட்டபோட்டிகள் இல்லை எனலாம். இலங்கையில் பாடசாலை கால்பந்தாட்ட வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய பல வெற்றிவாகைகளை இப்பாடசாலை தன்னகத்தே கொண்டுள்ளது.

1961 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் புதிய சீர்திருத்தத்திற்கு அமைய முகாமைத்துவ பாடசாலைகளாக 'பிரைவேட் மேனேஜ்மென்ட் ஸ்கூல்' என இயங்கி வந்த ஹமீதியா இங்கிலீஷ் பாய்ஸ் ஸ்கூல், ஹுசைனியா இங்கிலீஷ் பாய்ஸ் ஸ்கூல் ஆகிய இரு பாடசாலைகளும் அரசினால் உள்வாங்கப்படுகின்றன. அப்போதைய கல்வி அமைச்சர் மர்ஹூம் தேசமானிய டாக்டர் பதியுதீன் மஹ்மூத் கொழும்பு வாழ் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி முன்னேற்றமடைய வேண்டுமானால் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு பெரிய பாடசாலை மத்திய கொழும்பில் அமைய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். தூரநோக்கோடு செயற்பட்ட அவர், ஹமீதியா இங்கிலீஷ் பாய்ஸ் ஸ்கூல் மற்றும் ஹுஸைனியா இங்கிலீஷ் பாய்ஸ் ஸ்கூல் ஆகிய இரு பாடசாலைகளையும் 1963ஆம் ஆண்டு ஒரே பாடசாலையாக இணைத்து ஹமீத் அல் ஹுசைனி மகா வித்தியாலயம் என பெயர் சூட்டினார் .

1973 ஆம் ஆண்டு ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியின் பழைய மாணவர் லாஹிர் உலக சாதனையை நிலைநாட்டினார். இந்தியாவின் மும்பை நகரில் நடைபெற்ற அமைச்சர் உலக பில்லியட் சாம்பியன் போட்டியில் இந்திய வீரரை தோற்கடித்த தாய் நாட்டிற்கு பெருமை சேர்த்தார்

இலங்கை கல்வி வரலாற்றுப்பக்கங்களில் மறைக்க முடியாத நாமமாகத் திகழும் ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி 1996 ஆம் ஆண்டு ஜுலை 26 ஆம் திகதி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

கல்வி அமைச்சின் வகைப்படுத்தலுக்கு ஏற்ப இக்கல்லூரி 1AB தர பாடசாலையாகும். மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு முஸ்லிம் ஆண்கள் தேசிய பாடசாலையும் இதுவாகும். தற்போது 2150 மாணவர்கள் தரம் ஒன்று முதல் பதின்மூன்று வரை கற்றலை மேற்கொள்கின்றனர். தமிழ் ,சிங்கள மொழி மூலம் கற்றல் கற்பித்தல் நடைபெறும் இப்பாடசாலையில்

உயர் தரப்பிரிவில் வர்த்தகம் ,கணிதம், விஞ்ஞானம், கலை போன்ற பிரிவுகளைக்கொண்டது. அதிபர், ஆரம்ப பிரிவு பிரதி அதிபர் அடங்களாக 100 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றார்கள்.

பௌதீக வளப்பற்றாக்குறைகளை நிவர்த்திக்க தேவையான கட்டிட வசதி,போக்குவரத்திற்கான வாகன வசதி, தொழிநுட்ப ரீதியாக மாணவர்களை அறிவை விருத்திசெய்து முன்னேற்றத்தக்க கணனி, ஸ்மார்ட்போர்ட் போன்ற தேவைகளுடன் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் பூங்கா ,உயர்தர மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகளின் தேவை ஆகியவற்றுடன் ஆளணி பற்றாக்குறைகளாக தேசிய பாடசாலைக்கென தகைமை மிக்க அதிபர், பிரதி அதிபர்கள் இருவரின் தேவையும் ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் போன்ற மனிதவள பற்றாக்குறைகளுடன் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்ற பெருமையுடன் 138 வது ஆண்டில் வெற்றிநடை போடுகிறது எமது கல்லூரி.

கால்பந்து, கராத்தே, குத்துச்சண்டை, கரம் மற்றும் மெய்வள்ளுனர் போட்டிகள் முதலிய விளையாட்டுகளில் மாணவர்கள் ஈடுபாடு கொண்டிருப்பதோடு பெட்மிட்டன், கிரிக்கெட் கரம் மற்றும் செஸ் ஆகிய விளையாட்டு செயற்பாடுகள் பாடசாலை நிர்வாகத்தால் அறிமுகம் செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றன. இவை தவிர மாணவர்கள், சாரணர் அணி, இலவல் படையணி, மேற்கத்திய பேண்ட் வாத்திய குழு, மாணவத் தலைவர் குழு ஆகிய பல தலைமைத்துவத்துடன் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர். பாடசாலையின் அதிபராக ஏ.கே.ரி. அதஹான் கடமையாற்றுவதுடன் விளையாட்டுக்கு பிரசித்தி பெற்ற இப்பாடசாலையின் பிஓஜியாக எம். சி.ஹஸீர் கடமையாற்றி வருகிறார்.

இக்கல்லூரியானது தன்னை சிறந்த ஆசிரியர் தானா என சுயமதிப்பீடு செய்து கொள்ளும் சிறந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம், குழு எண்பது, பழைய மாணவத் தலைவர்கள் குழு உட்பட நலன்விரும்பிகள் அனைவரையும் கொண்ட சகோதரத்துவம் நிரம்பிய இதமான தென்றல் வீசும் பூஞ்சோலையாகும்.

பாடசாலையில் உள்ள வளங்களைக் கொண்டு உச்சபயனை அடைதல் என்பதற்கிணங்க தொழிநுட்ப பிரிவு மிகக் காத்திரமாக இயங்கி வருவதுடன் அதன் பொறுப்பாசிரியர் எம்.எம்.நிப்ராஸ் அவர்கள், மாணவர்கள் எதிர்கால தொழிநுட்ப உலகை எதிர்கொள்ளக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபெற வழிகாட்டுவதுடன் பல போட்டி நிகழ்ச்சிகளில் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழ் இலக்கிய மன்றம் பொறுப்பாசிரியர்கள் கலைநிகழ்ச்சிகளில் ஆர்வமுள்ள மாணவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்த தவறுவதில்லை. இஸ்லாமிய மரபு வழக்காறுகளை பின்பற்றுகின்ற பாடசாலையில் விமர்சனங்களுக்கு மத்தியிலும் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் இலக்கிய விழாவினை வருடாவருடம் நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை என்ற நிறுவனமானது சமூகப் பங்களிப்பு இல்லாமல் சாத்தியமற்றது என்பதற்கிணங்க பாடசாலை அபிவிருத்திக்குழு அயராது தங்களது பங்களிப்புகளை வழங்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

தற்போது எமது நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி எமது மாணவர்களை பாதித்துவிடக்கூடாது என்பதில் பாடசாலை நிருவாகம் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக இனங்காணப்பட்ட 200 மாணவர்களுக்கு காலை உணவளிக்கும் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி தனது 138 வது வருடத்தை கொண்டாடும் இக்கல்லூரி எதிர்காலத்தில் கல்வியில் சாதனைகளைப் படைத்து முத்திரை பதிக்கும் என்பது வெள்ளிடைமலை.



முகாமைத்துவக்குழு



உதைபந்தாட்டக்குழு (U16)



மாணவத் தலைவர்கள்



பழைய மாணவர் சங்கம்



கராத்தே குழு



உதைபந்தாட்டக் குழு (u18)



தகவல் தொழில்நுட்பப்பிரிவு



பேண்ட் வாத்தியக்குழு



சாரணர் குழு

தகவல் உதவி:
சிராஜுல் அனாம் (ப.மா)
படங்கள் உதவி:
எம். எம்.நிப்ராஸ்
தொகுப்பு:
ஷாமிலா செரீப்,
பாடசாலை ஊடகப்பிரிவு

# 'எதை விதைத்தோமோ அதையே அறுவடை செய்வோம்'

**பொதுக்காலத்தின் இறுதி வாரம் தரும் சிந்தனை**



கத்தோலிக்கத் திருச்சபையானது பொதுக் காலத்தின் 33 ஆம் ஞாயிறை இவ்வாரம் சிறப்பித்தது. பொதுக்காலத்தின் இறுதி வாரத்திற்குள் நாம் கால் பதித்திருக்கின்றோம்.

உலக முடிவில் என்ன நிகழும் நாம் எந்தளவுக்கு உறுதியுடன் இருக்க வேண்டும் செயல்களின் அடிப்படையில் நாமே தீர்மானித்திக்கொள்ள முடியும். இவ்வுலகில் வாழ்ந்தபோது நாம் எதை விதைத்தோமோஅதையேஅறுவடைசெய்வோம் என்பதை கடந்த ஞாயிறு முதல் வாசகம் நமக்குத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இதோ! சூளையைப்போல் எரியும் நலம் தரும் மருந்து இருக்கும். சிறிய இறைவாக்கினரான மலாக்கி நூலின் இறுதியில் 'ஆண்டவரின் நாள்' என்ற தலைப்பில் இந்த இறைவார்த்தைகள் கூறப்பட்டுள்ளன.

இதில் இருவகையான மனிதர்கள் எடுத்துக்காட்டப்படுகிறார்கள். முதல்



என்பதை கடந்த ஞாயிறு வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

'இறுதி' என்ற வார்த்தை முடிவு என்றும் அர்த்தம் தருகிறது. பிறப்பில் தொடங்கும் நமது வாழ்க்கை இறப்பில் முடிவடைகிறது. நமது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் நம்மை அறியாமலேயே நாம் கடந்து வந்த பாதை நம் கண்முன் வந்துபோகும். பல நேரங்களில் நமது இறப்பிற்குப் பின்பு நமக்கு என்ன கிடைக்கும் என்பதை நாம் செய்த அந்த நாள் வருகின்றது. அப்போது ஆணவக்காரர், கொடுமை செய்வோர் அனைவரும் அதனுள் போடப்பட்ட சருகாவர்; வரப்போகும் அந்த நாள் அவர்களுடைய வேரையோ, கிளையையோ விட்டுவைக்காது; முற்றிலும் சுட்டெரித்துவிடும்," என்கிறார் படைகளின் ஆண்டவர்.

"ஆனால் என் பெயருக்கு அஞ்சி நடக்கின்ற உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான். அவனுடைய இறக்கைகளில் வரும் நீதியின் கதிரவனின் ஒளியைப் பெற்று நிலைத்த நீடித்த வாழ்விற்குள் செல்வர். இதுவே அவர்களுக்கு நலம்தரும் மருந்தாக அமைகிறது.

**அருட்பணி செல்வராஜ் சூசை மாணிக்கம் ...**

வகையினர் ஆணவக்காரர், கொடுமை செய்வோர். இவர்கள் அனைவரும் எரியும் சூளையில் சருகாக்கப்படுவர் அல்லது சாம்பலாக்கப்படுவர். இரண்டாம் வகையினர் ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர். இவர்கள் அனை

நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவும் இருவகையான மனிதரை எடுத்துக்காட்டுகின்றார். அதாவது, இயேசுவின் பெயரை வைத்துக்கொண்டு நான்தான் அவர் என்று கூறி மக்களை ஏமாற்றுபவர்களும் அவர் பெயரில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களைத் துன்புறுத்துபவர்களும் துன்ப நேரங்களில் காட்டிக்கொடுக்கும் பெற்றோரும் சகோதரர் சகோதரிகளும் உறவினர்களும் நண்பர்களும் முதல்வகையினர்.

இவர்கள் தரும் துயரங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கை கொண்டவர்களாய் இறுதிவரை உறுதியோடு நிலைத்து நிற்பவர்கள் இரண்டாம் வகையினர்.

அப்படி இயேசுவின் பெயரில் நம்பிக்கை கொண்டு உறுதியோடு நிலைத்து நிற்பவர்கள் துயரங்களின் மத்தியில் தாங்கள் பயணித்தபோதிலும் இறைவனின் உடனிருப்பு என்றும் அவர்களோடு இருக்கும் என்பதை இயேசு அவர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார்.

உங்களைப் பிடித்துத் துன்புறுத்துவார்கள்; தொழுகைக்கூடங்களுக்குக் கொண்டு செல்வார்கள்: சிறையில் அடைப்பார்கள்; என் பெயரின்பொருட்டு அரசரிடமும் ஆளுநரிடமும் இழுத்துச் செல்வார்கள். எனக்குச் சான்று பகர இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும். அப்போது என்ன பதில் அளிப்பது என முன்னதாகவே நீங்கள் கவலைப் பட வேண்டாம். இதை உங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஏனெனில், நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன்; உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும் எதிர்த்துப் பேசவும் முடியாது.




# உண்மைக்கும் நீதிக்கும் சாட்சியாய் வாழ்ந்து மரித்த புனிதப் பெண்கள்

பெற்றோர் பிள்ளைகளை புனிதத்தில் வளர்க்க முடியும். தவறு நிகழும்போது செபத்தால் திருத்தவும் முடியும்.

மனிதனின் மாண்பு அவரின் பிறப்பால் அல்ல மாறாக அவரவரின் செயலே மனிதனை மாண்புடன் வாழத் துணைபுரிகிறது. மனிதமும் புனிதமும் இணையும்போது ஒருவன் மாட்சி பெறுகிறான்.

மனிதனாகப் படைக்கப்பட்ட எல்லோரும் கடவுளை போற்றிப் புகழ்ந்து அவரின் சித்தப்படி வாழவே படைக்கப் பட்டிருக்கிறோம். புனிதர்கள் என்று போற்றப்படும் மனிதர்கள் இறையன்பைச் சுவைத்தவர்கள். எப்பொழுதும் இறைவனோடு இணைந்து அவரின் சித்தப்படி வாழ்ந்து தியாகத்திலும், செபத்திலும் தங்கள் வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டு இயேசுவின் அன்பிற்குச் சாட்சிகளாய் வாழ்ந்தார்கள்.

"நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்" (யோவா 15:7). "நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன். நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்" (யோவா 4:1415) என்று இயேசு கூறியதை தமது வாழ்வாக்கி இறையன்பு பிறரன்பு மிகுந்து வாழ்ந்த இவர்கள் பிறருக்காக இயேசுவிடம் பரிந்து பேசினால் அவர்கள் மன்றாட்டு கேட்கப்படும்.

புனிதர்களின் செபத்தால் அதிசயம், அற்புதம் நடந்து நாம் விசுவாசத்தில் வளர பெரும் துணை புரிகிறது. இயேசுவின் பிறப்பு உலகில் சமாதானத்தை அளித்தது (லூக் 2:13). அதேபோல் புனிதர்கள் பிறப்பால் இறையன்பு பூமியில் அதிகரித்தது. பரிசுத்தமாய் வாழ்ந்து பாவத்தை வெறுத்து வாழ்ந்ததால் இவர்கள் புனிதரானார்கள். "பாவம் செய்வதைவிட சாவதே மேல்" என்றார் புனித டோமினிக் சாவியோ. "ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும், தன் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன ?" (மாற் 8:36) என்ற இயேசுவின் வாக்கின்படி உலக இன்பத்தை வெறுத்து தனது ஆத்மாவை புனிதமாகக் காத்துக்கொண்டு பரிசுத்தமாய் வாழ்ந்தவர்களே புனிதர்கள்.

இயேசுமரி சூசை வாழ்ந்த குடும்பம் திருக்குடும்பம். அங்கு அன்பு, அமைதி, செபம், உறவு மிகுதியாகக் காணப்பட்டன. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்ற வார்த்தை உண்மையிலே அந்தக் குடும்பத்தில் காணப்பட்டது.

எனவே, இயேசு பணிவோடு, பாசத்தோடு கீழ்ப்படிந்து வாழ்ந்தார். அன்பிற்கு ஆணிவேராய் அமைவது பெற்றோரே. எங்கு அன்பு உண்டோ அங்கு அமைதியும் அடக்கமும் உண்டு. எனவே, பெற்றோர் பிள்ளைகளை புனிதத்தில் வளர்க்க முடியும். தவறு நிகழும்போது செபத்தால் திருத்த முடியும்.

மகன் மனம் மாற செபித்த மோனிக்காவின் செபம் கேட்கப்பட்டு தனது மகனை புனிதராகக் கண்டார் புனித மோனிக்கா. மம்மா மார்கிரேட் தனது மகனை பரிசுத்தமாய் வளர்த்ததால் ஜோன்பொஸ்கோ புனிதரானார். புனித அருளானந்தர் தன் நாட்டை விட்டு இந்தியா வந்து வேத



சாட்சியாய் மரித்தார். தன் மகன் இறந்தார் என்ற செய்தி கேட்ட அவரின் தாய் அழாது பட்டாடை அணிந்து மகிழ்ந்தார்.

தன் தாய்மை நிலையில் பாசம் இருந்தாலும் இயேசுவின் சாட்சியாய் வாழ தன் மகனுக்கு துணிவைக் கொடுத்த தாயுள்ளம் தன் மகன் இறையன்பிற்குமஉண்மைக்கும நீதி நேர்மைக்கும் சாட்சியாய் வாழ்ந்து உண்மைக்காக இரத்தம் சிந்தி மரித்ததால் மகிழ்ந்தது.

தன் ஏழு பிள்ளைகளும் விசுவாசத்திற்காய் போராடி மரித்ததை பெசிலிட்டி எனும் தாய் கண்டு அழாது அவர்களை ஊக்குவித்தாள். இவ்வாறு பல பெண்கள் தங்கள் மனதை மாற்றி தம் பிள்ளைகளையும் புனிதராக்கிய புனிதைகள் பலர் உள்ளனர்.

புனித ஹெலினேர் தன் மகனுக்கு தாழ்ச்சியைக் கற்றுக்கொடுத்து சிலுவையின் மகத்துவத்தை உலகறியச் செய்தவர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக புனித அன்னாள்சுவக்கீன். இவர்களின் புனித உறவால் உதித்தவர் அன்னை மரியா. தன்னை ஈன்ற பெற்றோரின் பாசம், பக்தி. தியாகம், செபம் இவையே மாதாவை தியாகத்தின் தாயாக, தாழ்ச்சியின் சிகரமாக மாற்றியது. எல்லாவற்றிற்கும் மேலாக "பெண்களுக்குள் பேறுபெற்ற மரியே' என்று உலகம் போற்றுமளவுக்கு பேறுபெற்றவள். 'பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவரே, நீர் ஆசி பெற்றவர்: என்று எலிசபெத் மரியாளைப் போற்றி மகிழும் அத்தகு பெருமையுடைய மகளை பெற்று வளர்த்த அன்னாள் சுவக்கின் இவர்களின் இல்லற வாழ்வு சிறப்புடையது.

எனவேதான் உலகிற்கே தாயாக அனைவரின் அன்னையாக மரியா போற்றப்படுகிறார். இத்தகு புனிதர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே இறை சித்தத்தை ஏற்று என்றும் எதிலும் இறைவனைப் போற்றி மகிழ்ந்த புனிதப் பெண்கள் ஆவர்.

கன்னிப் பெண்களுள் புனிதர் பலருண்டு. அழகு, அந்தஸ்து, பட்டம், பதவி, சொத்து சுகம் அனைத்தையும் துறந்து ஆண்டவருக்காய் தன் வாழ்வை முழுமையாய் அர்ப்பணித்து இல்லற வாழ்வில் ஈடுபடாது இறைவனுக்காய் வாழ்ந்தவர்களே புனித கன்னிப் பெண்கள்.

இசை வளம் மிக்க செசிலியா அழகு மிக்கவராய் இருந்ததால் பல பாடுகள் பட்ட போதிலும் தன் விசுவாச வாழ்வில் நிலைத்து இரத்தம் சிந்தி புனிதையானார். இவ்வாறே ஆகத்தா, அனஸ்தாசியா, மரிய கொரற்றி, லீமாரோஸ், கேத்தரீன், மார்கிரேட், கிளாரா மேலும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜஸ்டாரூபினா என்ற இரு இளம் பெண்களும் . சிலைகளை வணங்க மறுத்ததால் கொடூர "மரணத்திற்கு உள்ளானார்கள்.

ஸ்பெயின் நாடே போற்றுமளவுக்கு விசுவாசத்தில் உறுதியாய் இருந்து உண்மையான கடவுளையே வழிபட்டு இரத்தம் சிந்தி அவர்கள் மரித்தனர். அது மட்டுமல்லாது இந்திய மண்ணில் பிறந்து தனிமை நோயால் பீடிக்கப்பட்டாலும் இறைப் பற்றுடைய புனித அல்போன்சா துறவியாகி கன்னிப் பெண்ணாக மரித்தார்.

இராணி மரியா மக்கள் நலனுக்காகப் பாடுபட்டு பிறரின் வாழ்வு சிறக்க தன்னுயிரை மாய்த்து இரத்தம் சிந்தி மரித்தார். இவர்களெல்லாம் கற்பில் சிறந்து, கடவுளை நேசித்து உண்மைக்கும், நீதிக்கும் சாட்சியாய் இரத்தம் சிந்தி மரித்த புனிதப் பெண்கள்.

**அருட்சகோதரி ஜோவிட்டா....**

# நம்பிக்கையின் தாயாக அன்னை மரியாள்

ஏன் மரியாள் நம்பிக்கையின் அன்னை என்று அழைக்கப்படுகின்றாள்? என்ற கேள்விக்கு மரியாளுடைய வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான இரண்டு நிகழ்வுகள், நமது மனக்கண்முன் வரக்கூடும்.

ஒன்று வானதூதருடைய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய அறிவிப்பு நிகழ்வு. மற்றொன்று சிலுவையின் அடியில் நிற்கும் வியாகுல அன்னையினுடைய காட்சி. ஒன்று அதிர்ச்சியும் ஆனந்தமும் நிறைந்த நிகழ்வு. மற்றொன்று மனதை உருக்கும் துக்கமும் துயரமும் நிறைந்த நிகழ்வு.

ஒன்று மெசியாவினுடைய மனுவுருவாதல் நிகழ்வு மற்றொன்றுஅந்தஇறைமகனுடைய துயரமான முடிவு. ஒன்று நம்பிக்கையின் தொடக்கம் இன்னொன்றுஅந்தநம்பிக்கைசிதைக்கப்பட்டு மீட்பின் பயணமானது முடிந்துவிட்டதோ என எண்ணத் தோன்றும் ஒரு விபரீதமான முடிவு.

ஒன்று ஒளியின் வருகையை அறிவிக்கும் நிகழ்வு. இன்னொன்று இருளின் ஆட்சிக்கான சான்று. இந்த இரு நிகழ்விலும் மரியாள் அவசரப்படவில்லை. அதிர்ந்து போகவில்லை. அங்கலாய்க்கவில்லை மற்றும் நிலைகுலைந்து போகவுமில்லை.

ஏனென்றால் அவர் இறைவனின் வார்த்தையை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை நம்பி தன்னுடைய மகனுடனான அந்த மீட்பின் பயணத்தைத் தொடங்கினாள். இந்த இரு நிகழ்விலுமே மரியாளை இயக்கியது அவள் இறைவன் மீது வைத்திருந்த ஆழமான நம்பிக்கை.



மனித வாழ்வானது கடினமான மற்றும் கொந்தளிப்பான சூழல்கள் பல சவால்கள் நிறைந்த கடற்பயணத்தைப் போன்றதாகும். இத்தகைய சவாலானதொரு பயணத்தில் நமக்குத் துணையாக நம்பிக்கை தந்து நமது இலக்கை அடைய உதவும் கலங்கரை விளக்கமாக, துருவ நட்சத்திரமாக மற்றும் புதியதொரு விடியலின் வாழ்வின் வருகையை அறிவிக்கும் விடியற்கால நட்சத்திரமாக நமக்கு அன்னை மரியாள் விளங்குகின்றார்,

இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் Lumen Gentium எனப்படும் திருச்சபை பற்றிய ஏடானது ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப் படுத்தப் பெற்றிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவு பெறப்போகும் திருச்சபையின் உருவமும் தொடக்கமுமாய் இருக்கின்றார்; இது போலவே இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை (2பேது.310) பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர்நோக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றார் என்று அன்னை மரியாளைப் பற்றிக் கூறுகின்றது. இக்கருத்தையொட்டியே முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் அதாவது மீட்பளிக்கும் நம்பிக்கை என்னும் தனது திருமடலில் வாழ்க்கை என்பது பெரும்பாலும் இருளும் புயலும் நிறைந்த வரலாற்றுக் கடலில் மேற்கொள்ளப்படும் ஒரு பயணத்தைப் போன்றது. இப்பயணத்தில் நம் வாழ்வின் உண்மையான நட்சத்திரங்கள் நமக்குமுன் நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து சென்றவர்கள் ஆவார்கள். அவர்கள் நம்பிக்கையின் சுடர்கள். நிச்சயமாக இயேசு கிறிஸ்துவே உண்மையான ஒளி மற்றும் வரலாற்றின் அனைத்து இருள் மற்றும் நிழல்களுக்கும் மேலாக பிரகாசமாக எழுந்து ஒளிவீசும் சூரியன். அந்த இயேசுவை நாம் அடைய அவருக்கு மிக அருகில் இருந்து அவருடைய ஒளியால் பிரகாசித்து நம்மையும் அந்த ஒளியை நோக்கி நடத்திச் செல்ல நமக்கு அருகிலுள்ள விளக்குகள் தேவை.

**அருட்தந்தை ஆ.அமல்ராஜ்...**

அப்படிப் பார்க்கையில் மரியாளைவிட வேறு யார் நமக்கு நம்பிக்கையின் நட்சத்திரமாக இருக்க முடியும்? அவருடைய ஆகட்டும் என்ற ஒற்றை வார்த்தையின் வழியாக இவ்வுலகின் கதவைக் கடவுளுக்குத் திறந்தாள்.

இவ்வாறு புதிய உடன்படிக்கையின் பேழை ஆனாள். இதில்தான் கடவுள் மனுவுருவானார். அதன்வழியாக அவர் நம்மில் ஒருவராகி அவருடைய கூடாரத்தை நம்மிடையே அமைத்தார் (யோவா 1;14)" இன்றும் அன்னை மரியாள் நமக்கு நம்பிக்கையின் தாயாக இருக்கின்றார்.

# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

WP KW-6409 Toyota 2012, Car கூடிய விலைக் கோரிக்கைக். வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958 . 069268

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

Toyota Prius Car WP KQ-0997 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069624

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

Nissan Wingroad Wagon WP KD-6590 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069622

**111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

NC KC-8001 Honda City Car அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069664

300-3111 Honda Civic 1998, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 069257

**113 சுசுகி கார்கள் விற்பனைக்கு**

Suzuki Wagon R Car WP CAZ-3739 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069612

**117 வேன்கள் விற்பனைக்கு**

Daihatsu Hijet Van WP HZ-4383 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069618

DFSK Van WP PG-1664 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069625

254-0752 Nissan Homy Van அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069641

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

John Deere Tractor CP RF-1924 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069592

Mahindra Maxximo Truck WP PV-0259 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069631

Micro Loader CP AE-9570 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069735

Piaggio Ape Truck NW PU-2447 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069605

SG LA-7347 Isuzu Truck 2000, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 069258

Tata Ace Ex Truck WP PV-4 028 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069635

Tata Ace HT Truck WP PP-7029 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069628

Tata Yodha Truck UP DAH-2562 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069609

Tata 1615 Dump Truck EP LI-4378 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069602

Toyota Dyna Truck WP HK-1584 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069614

62-6901 Mitsubishi Rosa 1997, Bus கூடிய விலை க் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 069255

**122 மோட்டார் சைக்கிள், திரிவீலர்கள் விற்பனைக்கு**

Bajaj Threewheel CP AAL-9238 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069587

EP BIX-5147 Hero Destini M/ Cycle அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770 10 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069650

Hero HF Deluxe EP BIU-0778 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069599

Honda MD-90 EP BIR-1217 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069598

Piaggio Ape Three-wheel SP YT-3290 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069607

Ranomoto GN125 Bike EP BJC-0054 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069600

Ranomoto Moped EP BIL-5900 அதியுயர் விலைக்கு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 069596

**வாகனங்கள் & இயந்திரங்கள் விலை மனு கோரல்**

| Vehicle No | Make/Model | Yard |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | | |
| WP BHO-1826 | TVS NTORQ | குருநாகலை |
| NW BHF-0624 | TVS SCOOTY PEP | குருநாகலை |
| CP BHX-4182 | HERO MAESTRO EDGE | குருநாகலை |
| CP BHY-9248 | BAJAJ PULSAR 150 DTSI | குருநாகலை |
| NW BEJ-2627 | HONDA PCX | குருநாகலை |
| WP BCF-5303 | HERO PLEASURE | களுத்துறை |
| WP BHX-9868 | YAMAHA RAY-ZR DISC | மாதிவெல |
| WP BHN-9166 | YAMAHA RAY ZR | மாதிவெல |
| WP BIA-6512 | YAMAHA RAY ZR | மாதிவெல |
| WP BID-5758 | YAMAHA RAY ZR | மாதிவெல |
| WP BHX-6346 | SUZUKI BURGMAN | மாதிவெல |
| UP BFG-5135 | HERO GLAMOUR | மொணராகலை |
| SP BIO-9944 | YAMAHA RAY ZR DISC | காலி |
| SP BIB-9643 | TVS NTORQ | காலி |
| EP BGG-3165 | HERO HF DELUXE | மட்டக்களப்பு |
| முச்சக்கரவண்டிகள் | | |
| CP QU-8304 | BAJAJ AUTO AR 4S | குருநாகலை |
| CP YO-6349 | BAJAJ RE 205 | குருநாகலை |
| CP QS-9630 | BAJAJ AUTO AR 4S | குருநாகலை |
| CP YN-9420 | BAJAJ RE 205 | குருநாகலை |
| NC YB-2750 | BAJAJ AUTO AR4S | மாதிவெல |
| NW QU-7045 | BAJAJ AUTO AR 4S | மாதிவெல |
| WP AAK-4331 | BAJAJ RE 205 | மாதிவெல |
| WP QB-4950 | BAJAJ AUTO RE 2 STR | மாதிவெல |
| WP YJ-6033 | BAJAJ RE 205 | மாதிவெல |
| லொறி | | |
| SP LL-8475 | TATA ULTRA 912 | மாதிவெல |
| WP DAF-8757 | MAHINDRA MAXXIMO PLUS | மாதிவெல |
| பஸ் | | |
| 63-0312 | TOYOTA COASTER | மாதிவெல |
| இயந்திரம் | | |
| PRINTING MACHINE | HEIDELBERG MO-S | குருநாகலை |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| தினேஷ் | மாதிவெலி சாலை | 071-0110160 |
| நிபுன ஆகாஷ் | குருநாகலை சாலை | 0772943514 |
| உதயா | காலி சாலை | 0776663389 |
| கஜன் | மட்டக்களப்பு சாலை | 074-0806609 |

மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, லொறி, பஸ் மற்றும் இயந்திரங்களை 2022 நவம்பர் 16ம், 17ம் மற்றும் 18 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து 5.00 மணிவரை பார்வையிடலாம்.

2022 நவம்பர் 18ம் திகதி மாலை 5 மணிக்கு பார்வையிடும் நேரம் முடிவடையும்

2022 நவம்பர் 18ம் திகதி வரை மீளப்பெறமுடியாத ரூ. 300 ஐ செலுத்தி டெண்டர் படிவங்களை வாகன சாலை அல்லது கிளையிலிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மாதிவெல சாலை டெண்டர் படிவங்கள் ஏசிய எசெட் தலைமை அலுவகத்தில் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.
தாமதமாக சமர்பிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC

இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02. தொடர்பு.: 011-7-699000



## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)**

**வியாபார நிருவாகமாணி / வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் – 2020 / 2021**

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் பின்வரும் பட்டப்படிப்புகளுக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 16.12.2022 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

1. வியாபார நிருவாகமாணி (Bachelor of Business Administration)
2. வர்த்தகமாணி (Bachelor of Commerce)

**ஆகக் குறைந்த தகைமைகள்**

01. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் / சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

02. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II)

அல்லது

03. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

அல்லது

04. இலங்கை தொழில்நுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்

அல்லது

05. கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்துடன் CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II அல்லது AAT இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

06. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள்.

**குறிப்பு:** கற்கை நெறி தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். அத்துடன், இக்கற்கை நெறிக்கு குறைந்தபட்சம் 100 மாணவர்கள் ஒவ்வொரு மொழிக்கும் உள்வாங்கப்படுமிடத்து பட்டப்படிப்பானது ஆரம்பிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் முறை – நேர்முகப்பரீட்சை மற்றும் தேர்வுப்பரீட்சை.

**விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை பல்கலைக்கழக இணையதளமான www.seu.ac.lk ல் பெற்றுக்கொள்ள முடியும்.**

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**15.11.2022**


# புரவலர் ஹாஷிம் உமர், யாழ்ப்பாணம் முஸ்லிம்களுடன் கலந்துரையாடல்





யாழ்ப்பாணம், பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் புரவலர் ஹாஷிம் உமர், யாழ் முஸ்லிம்களை சந்தித்து கலந்துரையாடினார்.

பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் BSM. சரபுல் அனாமின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்வில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், யாழ்.எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்கள் சம்மேளன தலைவர் ஏ.எச். ஜமால் முஹிதீன், யாழ். முஸ்லிம் ஒன்றியம் ஏ.எப். ஆரிப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**யானை தாக்கி தொழிலாளி மரணம்**

# வனவளத்துறையின் அலட்சியப் போக்குக்கு செந்தில் தொண்டமான் கடும் கண்டனம்

பூனாகலை அம்பட்டிக்கந்த பகுதியில் தொழிலாளியொருவர் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளமை மிகவும் வருந்தத்தக்கது. இதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இதுதொடர்பில் வனவளத்துறைக்கு பலமுறை அறிவித்தும் போதுமான நடவடிக்கைகளை வனவளத்துறையினர் எடுத்திருக்கவில்லை.

இன்று பசும்பால் கொண்டுசென்ற தொழிலாளியொருவர் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். வனவளத்துறையின் அலட்சியப் போக்கே மரணத்துக்கு காரணம்.



யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வனவளத்துறையினர் இதுவரை போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதற்கான முழுமையான பொறுப்பை வனவளத்துறையினர் ஏற்க வேண்டும். மக்களின் முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தால் தொழிலாளி ஒருவரின் உயிர் பறிபோயிருக்காது. தோட்ட நிர்வாகமும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

வனவளத்துறையின் அலட்சியத்தை வன்மையாக கண்டிப்பதுடன், உடனடியாக இங்குள்ள மக்களின் பாதுகாப்பை கருதிக்கொண்டு யானைகளின் வருகையை கட்டுப்படுத்த உரிய பாதுகாப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் பாரிய போராட்டங்களை செய்வதற்கு இ.தொ.கா தயாராகவுள்ளதாக செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த பெண்ணின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம், வலம்புரி 4 ஆவது மாடியில் நடைபெற்ற தமிழ்சங்கு கலை, இலக்கிய விருது விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த புரவலர் ஹாஷிம் உமர், யாழ் எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பாலுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். இந்நிகழ்வில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் அவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா மீட்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்றைய தினம் திங்கட்கிழமை 40 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து படகொன்றில் குருநகர் கடற்கரை பகுதிக்கு கஞ்சா கடத்தி வரப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கஞ்சா மீட்கப்பட்டது.

கஞ்சாவை கடத்தி வந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனையும், மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# பெயரில் மட்டுமன்றி தனது வாழ்விலும் புரட்சி நிறைந்தவர் லெனின் மதிவானம்

**மு.ம.மா.உறுப்பினர் ஏ.பி சக்திவேல்**

எழுத்தாளரும் கல்வியியலாளருமான லெனின் மதிவானம் மறைவிற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஏ.பி சக்திவேல் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காசல் ரியை பிறப்பிடமாகக் கொண்ட லெனின் மதிவானன் ஆசிரியராகவிருந்து வெளிவாரி மற்றும் இளநிலை, முதுநிலைப் பட்டங்களைப் பெற்றதோடு ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

மலையக தோட்டத் தொழிலாளியின் பிள்ளையான லெனின் மதிவாணன்,பெயரில் மட்டுமல்ல இவர் வாழ்கின்ற காலத்தில் கூட புரட்சிகரமாக வாழ்ந்தவர்.

சமுதாய நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் அவ்வப்போது ஆணித்தனமான கேள்விக்கணைகளை கேட்டுள்ளதுடன், அதற்கான பதில்களையும் வழங்கியுள்ளார் .

ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை தட்டிக் கேட்டுள்ளார். அரசியல், தொழிற்சங்க ரீதியாக பல்வேறு இணக்கப்பாடுகளுக்கும் சமூகத்திற்கு ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்கவும் தனது பேனா முனையாலும் , வாய் மூலமாகவும் பல்வேறு விதத்தில் குரல் எழுப்பியிருக்கின்றார்.

அவர் வாழ்ந்த காலங்களில் இச்சமூகத்திற்கு நிறைய நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று எண்ணி சமூகத்திற்கு உயிர் கொடுத்திருக்கின்றார். இவ்வாறான ஒருவரின் மரண செய்தி கேட்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

மதிவானம், பெயரில் மட்டுமல்ல வாழ்ந்த காலத்திலும் புரட்சிகரமாக வாழ்ந்தவர்.

# வவுனியா நகரசபை பட்ஜட் நிறைவேற்றம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் நேற்று (14) நகரசபையின் வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

இதன்போது வரவு செலவு திட்டம் ஏகமனதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



நயினாதீவு நாகபூஷணி அம்மன் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாவும் மற்றும் இந்துமத குரு பீடாதிபதியுமான அமரர் சிவ ஸ்ரீ சம்புமகேஸ்வர சிவாச்சாரியாரின் வருடாந்த நினைவு தினத்தை முன்னிட்டு மகேஸ்வரலகரி நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. அதன் ஒரு பிரதியை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத துறை தலைவர் மகேஸ்வர பாலகைலாசநாத சர்மாவிடமிருந்து முன்னாள் ஜனாதிபதியின் இந்து விவகார இணைப்பாளர் சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.




# வரவு செலவுத்திட்ட உரை - 2023

# இலங்கை, புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

**கௌரவ** சபாநாயகர் அவர்களே,

கடந்த சில மாதங்களாக நாம் மேற்கொண்ட விடாமுயற்சிகளினதும் கடுமையான நடவடிக்கைகளினதும் விளைவாக பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழும் நம்பிக்கை ஒளிக்கீற்று வீசுகின்றது. நாட்கணக்கில் வரிசைகளில் நின்று, தங்கியிருந்து போராட்டம் செய்த யுகத்தைக் கடந்து, கவலையும் பிரச்சினைகளும் ஓரளவுக்கு நிறைவடைந்துள்ள நிம்மதியான ஒரு யுகத்தை நாம் நெருங்கியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பு பற்றி இந்தியாவுடனும் சீனாவுடனும் நாம் பேச்சுவார்த்தை நடாத்துகின்றோம். இப்பேச்சுவார்த்தைகள் சாதகமான பெறுபேறுகளுக்கு வழிவகுக்கும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக பணவீக்கத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதேபோன்று ரூபாய் வலுவடைந்து வருகின்றது. இந்நிலைமையைத் தொடர்ந்தும் பேணி வருவது எமது எதிர்பார்ப்பாகும். தொடர்ந்தும் இப்படிமுறையின் ஊடாக முன்னோக்கிச் செல்வதன் மூலம் அடுத்த வருடத்துக்குள் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு எங்களால் முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இருப்பினும், அதிலிருந்து திருப்திப்பட எங்களால் முடியாது. நாம் புதிய தொரு பயணத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்து, இதுவரை எமது நாட்டில் காணப்பட்ட பொருளாதார முறையை மாற்றுவதற்காக ஆரம்ப அடிப்படைகளை தயாரிப்பது இடைக்கால வரவுசெலவு முன்மொழிவுகளின் நோக்கமாகும் என்பதை நான் குறிப்பிட்டேன். இன்று சமர்ப்பிக்கின்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவினூடாக நவீன உலகுக்கு பொருத்தமான புதிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்பும் செயன்முறையை ஆரம்பிப்பதாகவும் நான் அதில் குறிப்பிட்டேன்.

சுதந்திரத்தின் பின்னர் 75 வருடங்கள் கடந்து செல்கின்ற சந்தர்ப்பத்தில், எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து எம்மால் திருப்திப்பட முடியுமா? நாம் எங்கே தவறு விட்டோம்? எங்களுக்கு தவறிய இடம் எது?

நான் சுதந்திர இலங்கையில் பிறந்தவன். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து ஒரு வருடத்தின் பின்னர். அவ்வேளையில் ஆசியாவின் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் யப்பானில்தான் இருந்தது. இலங்கையர்களாகிய நாம் இரண்டாம் இடத்தில் இருந்தோம் என்பது யாவரும் அறிந்ததே. இலங்கையின் தனி நபர் வருமானம் ஐ.அ.டொலர் 3,815 ஆனால் யப்பானின் தனிநபர் வருமானம் ஐ.அ.டொலர் 39,285 ஆகும்.

எனது இன்னுமொரு தனிப்பட்ட அனுபவம் எனக்கு நினைவில் வருகின்றது. 1991ஆம் ஆண்டில், நான் கைத்தொழில் அமைச்சர் பதவிவகித்த கால கட்டத்தில் வியட்நாமின் கைத்தொழில் அமைச்சர் இலங்கைக்கு வந்தார். எமது திறந்த பொருளாதார முறை பற்றியும் கைத்தொழில்மயமாக்க உபாயங்கள் பற்றியும் ஆராய வேண்டிய தேவை அவருக்கு இருந்தது. நான் அவருக்கு விளக்கமளித்தேன் . பாரிய கொழும்பு ஆணைக்குழு உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடுவதற்கு அவருக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தேன். 1995 ஆண்டளவில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகளின் அளவு ஐ.அ.டொலர் 2.1 பில்லியனாகும். வியட்நாமின் வெளிநாட்டு ஒதுக்களின் அளவு ஐ.அ.டொலர் 1.3 பில்லியனாகும்.. வியட்நாம் அமைச்சர் எமது முறைமைகளைக் கற்றுக்கொண்டு தனது நாட்டுக்குச் சென்றார். இன்றைய நிலை என்ன? வியட்நாமின் வெளிநாட்டு ஒதுக்கின் அளவு ஐ.அ.டொலர் 109.4 பில்லியனாகும் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கத்தின் அளவு ஐ.அ.டொலர் 3.1 பில்லியனாகும்.

நாம் பின்னோக்கிப் பார்ப்போம். வண்ண வண்ண அரசியல் கண்ணாடிகளை கழட்டி வைத்துவிட்டு பார்ப்போம். நாங்கள் ஏன் தவறு செய்தோம்? நாங்கள் எங்கே தவறு செய்தோம்? எங்களுக்குத் தவறியதா? அப்படியில்லாவிட்டால் நாம் தவறிழைத்துக் கொண்டோமா?

இன்று எமது நாட்டில் வருமானம் பெறுகின்ற பல பிரதான துறைகள் காணப்படுகின்றன. ஒன்று, பெருந்தோட்டப் பொருளாதாரம் அடுத்தது, சுதந்திர வர்த்தக வலயம். ஆடைக் கைத்தொழில், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு. அவற்றை நோக்கும் போது சுதந்திரத்தின் பின்னர் நாட்டுக்கு வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சில பிரதான வழிகளை மாத்திரம் எங்களால் நிர்மாணித்துக் கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது. அதற்கு அப்பால், பாரியளவில் வெளிநாட்டு வருமானங்களை ஈட்டுகின்ற துறைகளை எங்களால் இதுரை நிர்மாணித்துக் கொள்ள முடியாதது ஏன்? இதுவே, நாம் கவனமாக சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயமாகும்.

கடந்த காலங்கள் முழுவதும் நாம் உற்சாகம் அடைந்தது, சந்தோசமடைந்தது எதிர்காலத்திற்குப் பயனளிக்கக் கூடிய விடயங்களுக்காகவா அல்லது அந்தந்த சந்தர்ப்பங்களில் வெளியில் தென்படக்கூடிய விடயங்களுக்காகவா? வெற்றிகரமான தனியார் தொழில்களை தேசியமயப்படுத்தும் போது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இலவசமாக அரிசி வழங்கும்போது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவ்வாறான தீர்மானத்தை எடுத்த அரசாங்கம் தற்காலிகமாக பிரபல்யமடைந்தது.

இதன் காரணமாக, வீதி விளக்கொன்றினைப்பொருத்துவதன்மூலம் நாம் திருப்தியடைந்தோம். ஆனால் மின்னுற்பத்தியை அதிகரிப்பது குறித்து நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்கவில்லை.

உண்மையில், நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்கு அடிப்படையாக இருப்பது பிரபல்யமான தீர்மானங்களா? அவ்வாறின்றி சரியான தீர்மானங்களா? பல சந்தர்ப்பங்களில் எமது நாட்டில் சரியான தீர்மானங்களுக்கு பதிலாக பிரபல்யமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இன்றும்கூட பெரும்பாலானவர்கள் பிரபல்யமான தீர்மானங்களை எடுப்பதற்கே முயற்சிக்கின்றனர்.

இந்தப் பிரபல்யமான தீர்மான சம்பிரதாயத்தின் பிரதிபலனாக அமைந்தது எது? நிவாரணப் பொருளாதாரம், நிவாரண மனோநிலை நாடு பூராவும் குவிந்து கிடக்கின்றது. மக்கள் நிவாரணங்ளைப் பெற்றுக் கொள்வதற்கே பழக்கப்பட்டு உள்ளனர். அரசாங்கம் செயற்படுவதும் மக்களுக்கு முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கல்ல. நிவாரணம் வழங்குவதற்கு மாத்திரமே.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளை நினைவுபடுத்தி ஒரு முறை பின்வருமாறு லீக்வான்யூ குறிப்பிட்டார் “சிங்கப்பூரில் நான் கடினமான ஆனால் சரியான பாதையை பின்பற்றினேன். இலங்கையின் பண்டாரநாயக்க பிரபல்யமான வழியைப் பின்பற்றினார்”.

இந்த பிரபல்யமான பாதையில் நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வதன் மூலம் நாட்டுக்கு எதிர்காலம் கிடையாது. எப்போதும் அடுத்தவர்களுக்கு கடனாளியாகி நிவாரணம் வழங்குவதால் சுபிட்சம் எதுவும் ஏற்படாது. எனவே நாம் தற்போது இந்த நிலைமையிலிருந்து மீளுவோம். எமது சிந்தனை வடிவங்களை மாற்றிக் கொள்வோம்.

அதனால் நாம் புதிதாகச் சிந்திப்போம். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும்பொருட்டு புத்தாக்க மிக்க அணுகுமுறைளை உருவாக்கிக் கொள்வோம்.

## 1. 1977 அணுகுமுறை

**1.1.** ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் 1977 இல் அதுவரை காணப்பட்ட பொருளா தார நோக்கினை மாற்றுவதற்கு சாதகமான நடவடிக்கை ஒன்றை எடுத்தது. தோல்வியடைந்திருந்த மூடிய பொருளாதாரத்திற்குப் பதிலாக மாறுபட்ட வழி ஒன்று தெரிவு செய்யப்பட்டது. சலுகைகள் வழங்குவதற்குப் பதிலாக சந்தர்ப்பத்தை வழங்குகின்ற பொருளாதாரம் ஒன்றை உருவாக்கியது. இலவசமாக அரிசி வழங்குதல் போன்ற எண்ணக்கருக்களை முழுமையாக நீக்கியது. அதற்குப் பதிலாக ஆற்றல்களின் மூலம், திறமைகளின் மூலம் முன்னோக்கிச் செல்லக் கூடிய புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தது. பொருளாதாரம் திறந்து விடப்பட்டது. நாடு செழிப்படைந்தது. வறுமை குறைவடைந்தது. நடுத்தர வகுப்பினர் அதிகரித்தனர்.

**1.2.** இருப்பினும் 1977 இல் உருவாக்கிய பொருளாதார அடிப்படையை வேகமாக முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியவில்லை. சிவில் போராட்டம் போன்ற வெளிவாரி காரணிகளால் அப்பயணம் தடைப்பட்டது. காலத்திற்கு இணங்கியதாக தேவையான மாற்றங்களும் மறுசீரமைப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**1.3.**அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல், வெளிநாட்டு முதலீட்டை அதிகரித்தல் போன்ற பணிகளுக்குப் பதிலாக அரசாங்கத்தின் செலவினம் அதன் எல்லைகளை தாண்டி அதிகரித்தது. நட்டமடைகின்ற அரசாங்கத் தொழில்முயற்சிகளை பராமரிப்பதற்குப் பாரியளவு தொகை செலவிடப்பட்டது. அரசியல் இலாபங்களுக்காக தேவையற்ற செலவினங்களை மேற்கொள்ளப்பட்டது. உலக நாடுகளுக்கு கடனாளியா வதன் மூலம் இது இடம்பெற்றது.

**1.4.** புத்தபெருமான் “சாமஞ்ஞபல சூத்திர”இல் கடன் பெறுவது பற்றி இவ்வாறு போதனை செய்துள்ளார். “நுகர்வுக்காக அன்றி முதலீட்டுக்காகவே கடன் பெறுதல் வேண்டும்.“ இருப்பினும் நாம் என்ன செய்தோம்? உலகில் ஏனைய நாடுகளில் உள்ள மக்கள் சிரமப்பட்டு சம்பாதிக்கின்ற பணத்தைக் கடனாகப்பெற்று அவற்றை எமது நுகர்வுக்காக செலவுசெய்தோம். நாங்கள் நாளுக்கு நாள் சோம்பேறிகளானோம். அனைத்தையும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு மக்கள் பழகிக்கொண்டனர். அனைத்தையும் மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. நாம் சிந்தித்தது எங்களால் நாட்டுக்கு என்ன நடக்கவேண்டும் என்பதைப் பற்றியல்ல. நாட்டிலிருந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டிய விடயங்களைப் பற்றி மாத்திரம் சிந்திக்கின்ற சமூகமொன்று சிறிதுசிறிதாக உருவானது. நாம் செய்தவை எல்லாம் ஏனையோரிடமிருந்து கடன்பெற்று விருந்து உண்டது போன்றதாகும்.

**1.5.** இதனால் 1977 ஆம் ஆண்டின் பொருளாதார அடிப்படையின் திசை முழுமையாக மாற்றமடைந்தது.




## 2. இளம் தலைமுறையினரின் அபிலாசைகள்

**2.1.** சுதந்திரம் பெற்று 75 ஆண்டுளாக தேசிய வளங்களைப் பாதுகாப்பது பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். தேசிய வளங்களை பாதுகாப்பதற்கு போராட்டம் நடத்துகின்றோம் , சண்டையிடுகின்றோம். உண்மையாகச் சொல்லப்போனால், நாம் எமது தேசிய வளங்களை பாதுகாக்கின்றோமா? உண்மையான தேசிய வளங்களுக்கென எதிர்காலமொன்றை உருவாக்கியுள்ளோமா?

**2.2.** எமது தேசத்தின் உண்மையான தேசிய வளம் எமது இளம்தலைமுறையினரே. எமது இளம் தலைமுறையினருக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்காக இதுவரையிலும் நாம் செய்துள்ளதை பற்றி நாம் திருப்தியடைய முடியுமா? இளம்தலைமுறையினரைப் பாதுகாக்கும் முகமாக, நாம் முறையான பங்கொன்றை வகித்து இருப்போமாயின், நாட்டை விட்டுசெல்வதற்கு அவர்கள் ஏன் வரிசைகளில் காத்திருக்கின்றனர்?

**2.3.** தேசிய வளங்கள் என்பது திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் குதங்கள் போன்ற பௌதீக வளங்கள்தான் என அநேகமானோர் எண்ணுகின்றனர். அவ்வாறு நினைத்து அவற்றை பயன்படுத்தாது அவை அழிந்துபோகும் வரை பாதுகாத்து வருகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் எமது 420 அரச நிறுவனங்களையும் தொழில்முயற்சிகளையும் பாராமரித்து வருகின்றோம். இவற்றில் 52 நிறுவனங்கள் மூலம் ஆண்டுதோறும் ரூபா 86 பில்லியன் செலவு ஏற்படுகின்றது. நான் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நிறுவனங்களின் பட்டியலை பாராளுமன்றத்தில் முன்வைக்க எதிர்பார்க்கின்றேன். இந் நிறுவனங்கள் மூலம் பல ஆண்டுகளாக நாடு அனுகூலமடைந்துள்ளதா? அல்லது பிரதிகூலமடைந்துள்ளதா?

**2.4.** தேசிய வளங்கள் எனக் கருதி இந்நிறுவனங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் மீது அவதானம்செலுத்துகின்றபோது, நாட்டின் உண்மையான தேசிய வளங்கள் மீதான எமது அவதானம் இல்லாதுபோயுள்ளது. இளைஞர் யுவதிகளின் எதிர்பார்கைகளும் கரைந்து செல்கின்றது. சிலர் நாட்டை விட்டு செல்கின்றனர்.

**2.5.** இவ்விளைஞர் யுவதிகள் சிறந்த எதிர்காலத்தையே எதிர்பார்க்கின்றனர். சுபிட்சமிக்க நாடொன்றையே எதிர்பார்க்கின்றனர். எதிர்ப்பு ஊர்வலங்கள், போராட்டங்கள், பணிப்பகிஸ்கரிப்பு போன்ற மரபு சார்ந்த அரசியல் வழிமுறைகளைத் தாண்டிய புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தி, புதிய முறைமையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.6.** இன்று பார்வையாளர் கலரியை நோக்கும்போது குறிப்பிடத்தக்களவு இளைஞர் யுவதிகள் வருகைத் தந்திருப்பது தென்படுகின்றது. சுபிட்சமிக்க எதிர்காலத்தையும், உயர்ந்த சமூகத்தையும் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதையுமே அவர்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

2.7.நாம் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவது இவ் இளைஞர் யுவதிகளுக்காகவேதான். அவர்களின் எதிர்காலத்திற்காகவேதான்.

## 3. பொருளாதாரத்தின் புதிய அடிப்படை

**3.1.** 1977 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பொருளாதார அடிப்படை இப்பொழுது உசிதமற்றது. அது தற்காலத்துக்குப் பொருத்தமானதுமல்ல. அது இப்போது முறிவடைந்துள்ளது. எமது நாட்டில் சில காலம் தொழிற்பட்ட மூடிய பொருளாதாரத்தைப் போன்று 1977 இல் உருவாக்கப்பட்ட பொருளாதாரமும் தோல்வியடைந்தது. அதனால் நாம்

**3.2.** தற்காலம் குறித்து புதிதாக சிந்தித்தல் வேண்டும். சுகதபால த சில்வா “மராசாத்” எனும் நாடகத்தில் காட்டுவதைப் போல, தலையணை உறையைப் போன்று புறப்பக்கத்தைத் திருப்பி புதிய கண்ணால் உலகத்தைப் பார்க்க வேண்டும்.

தற்போதைய உலகத்தின் போக்கு வேறுபட்டது. உலகப் பொருளாதார சிந்தனை வேறுபட்டது. உலகப் பொருளாதாரம் நடந்துகொள்கின்ற விதம் வேறுபட்டது. அதனால் அந்த புதிய போக்கிற்கு பொருந்தக் கூடிய விதத்தில் நாம் புதிய பொருளாதார அடிப்படையொன்றைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

**3.3.** அண்மையில் சமூக ஊடக வலையமைப்பின் ஊடாக வாசிக்கக் கிடைத்த இரண்டு ஆக்கங்களின் இரண்டு பகுதிகளை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். காமினி வியாங்கொட என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**3.4.** “நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சக்தி தனது கையிலிருக்கின்றது என பிரச்சினையின் வாலில் பிடித்துக் கொண்டு ஒருவர் சொல்லும்போது கவனமாக இருங்கள். தான் அதிகாரத்துக்கு வந்தவுடன் கள்வர்களையும் ஊழல்காரர்களையும் சிறையில் அடைப்பதாகக் கூறும்போது அது பொய்யாகும். மோசடி மற்றும் வீண் விரயமற்ற நாட்டைத் தான் உருவாக்குவதாகக் கூறுவதும் அவ்வாறானதொரு பொய்யாகும். அந்த விடயங்கள் அனைத்தும் நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாக இருந்த போதிலும் தற்போதைய இலங்கையைக் கட்டியெழுப்பும் பிரச்சினைக்கு அதிலும் பார்க்க சிக்கலான மற்றும் கடினமான வீச்சில் பதில் இருக்கின்றது என்பதை இன்று இல்லாவிட்டாலும் நாளையாவது நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும்”

**3.5.** சின்தன தர்மதாச இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

“இதன் காரணமாக நாம் மீண்டும் சிந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. போராட்டம் இருப்பது எங்களுக்கு வெளியிலல்ல. எங்களுக்கு உள்ளேதான் அது இருக்கின்றது. இந்த பொருளாதாரப் போராட்டத்தை வெற்றி கொள்வதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டி உள்ளது. எம்மால் மீண்டும் மலரச் செய்கின்ற பொருளாதார சக்தியின்மூலம் மாத்திரமே தீவிர வறுமையினால் இன்னல்படுகின்ற மக்களை கட்டியெழுப்ப முடியும். இத்தருணத்தில் உண்மையான மக்கள் பொய் கூறுவதற்கான செயற்பணி அங்குதான் இருக்கின்றது.

**3.6.**அதனால் நாம் இந்த நெருக்கடியின் சிரமத்தையும் சிக்கலான தன்மையையும் புரிந்து கொள்வோம். நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்காக பொருளாதாரத்தை மலரச் செய்கின்ற சக்தியொன்றை உருவாக்கிக் கொள்வோம்.

**3.7.**அந்த சக்தியை உருவாக்கக் கூடிய இலங்கைக்கான பொருளாதாரத்தின் புதிய அடிப்படையைத் தயாரிப்பதற்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் நாம் முயற்சிக்கின்றோம்.

**3.8.**இந்த இடத்தில் நாம் கவனம் செலுத்துகின்ற அடிப்படை விடயங்கள் பற்றி எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

**3.9.**அண்மைக்கால வரலாற்றில் நாம் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக முழு நாடும் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தது. அன்றாடத் தேவைகளை நிர்ணயம் செய்ய முடியவில்லை. தொழில்கள் ஆபத்தில் வீழ்ந்தது. வருமானத்தை இழக்க நேரிட்டது. வியாபாரங்கள் வீழ்ச்சியடைந்தது. இதுவரையில் அந்த சகல சிரமங்களிலிருந்தும் முழுமையாக மீள முடியவில்லை.

**3.10.** நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்பினை மனதில் வைத்துக் கொண்டு மக்கள் இவ்வாறான சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் நாம் அனைவரும் அந்த அர்ப்பணிப்பை மேற்கொண்டோம். நாட்டுக்காக இவ்வாறு அர்ப்பணம் செய்த அதே போன்று அர்ப்பணம் செய்கின்ற சகலருக்கும் நாம் கட்டி எழுப்புகின்ற புதிய பொருளாதாரத்தின் நன்மைகள் நியாயமான முறையில் பகிரப்பட வேண்டும். சகலருக்கும் சமமான வாய்ப்புகள் உருவாக வேண்டும் அது சமூகத்தின் சிறிய குழுவை மாத்திரம் செல்வந்தர்களாக மாற்றுகின்ற பொருளாதார முறை அன்றி ஒட்டுமொத்த சமூகத்தையும் உயர்த்தி வைக்கின்ற பொருளாதார முறை.

**3.11.** இலங்கை குறைந்த வருமானம் பெறும் பொருளாதாரமாக காணப்பட்ட காலத்தில் மக்கள் அனுபவித்த வாழ்க்கைத் தேவைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இருப்பினும் நடுத்தர வருமான பொருளாதாரமாக உயர்த்தப்பட்ட போது வாழ்க்கைமுறையும் இயற்கையாக உயர்ந்து சென்றது. அவ்வாறு நிகழ்வது சாதாரண நிலையாகும். வீட்டிலும் அப்படித்தான். வீட்டின் வருமான மட்டம் அதிகரித்துச் செல்லும்போது, வாழ்க்கைமுறையும் அதிகரிக்கின்றது.

**3.12.** புதிய பொருளாதார அடிப்படையை தயாரிக்கும்போது சமூகம் பழக்கப் பட்டிருக்கின்ற வாழ்க்கை முறை பற்றி நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த வாழ்க்கை முறை மீண்டும் கீழ் மட்டத்திற்கு விழாதவாறு, புதிய பயணத்தை நாம் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

3.13.விசேடமாக உலகத்துடன் தொழில்நுட்ப அடிப்படையில் கையாளுகின்ற தற்போதைய இளைஞர் பரம்பரை நாளுக்கு நாள் தமது வாழ்க்கைமுறை அதிகரித்துச் செல்வதை எதிர்பார்க்கின்றனர். அதனால் புதிய பொருளாதார அடிப்படையின் ஊடாக நாளுக்கு நாள் அதிகரிக்கின்ற வாழ்க்கை முறை ஒன்றை தூண்டுகின்ற வழியினை உருவாக்க வேண்டியுள்ளது.

**3.14.** அதனால் நாம் உருவாக்க வேண்டியது தற்போதைய தனிநபர் வருமானத்திற்கு பொருத்தமான வாழ்க்கை முறை அல்ல. இளைஞர் யுவதிகள் எதிர்பார்க்கின்ற வாழ்க்கை முறைக்கு பொருத்தமான மட்டத்திற்கு தனிநபர் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய முறையாகும்.

**3.15.** இந்த முறைமையில் வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினரை பாதுகாத்துக்கொள்வது பற்றி நாங்கள் முழுமையாக கவனம் செலுத்துகிறோம். அதேபோன்று தற்போது வழங்கப்படுகின்ற இலவச கல்வி மற்றும் சுகாதார சேவைகள் அதேபோன்று ஏனைய நலன்புரிப் பணிகளின் ஊடாக சமூகத்தின் சகல பிரிவினருக்கும் நியாயமான நன்மைகள் கிடைக்கின்றதா என்பதை பற்றி நாம் ஆராய்தல் வேண்டும். அதேபோன்று இந்த சேவைகளை மிகவும் வினைத்திறன் உடையதாக்குதல் வேண்டும். இதற்காக செலவிடுகின்ற வளங்களிலிருந்து அதிகபட்ச நலன்களை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**3.16.**நாம் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றோம் என்பதை மறந்தால் எமக்கு எதிர்காலப் பயணம் கிடையாது. தற்போதைய நிலைமையை நன்றாக புரிந்து கொண்டு எமது எதிர்கால பயணத்தை தயாரித்தல் வேண்டும். அதனால் இந்த நெருக்கடிக்கு மத்தியில் எமது நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் பயனுள்ளதாக நடைமுறைப்படுத்த வேண்டிய விதம் குறித்து விசேட கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

**3.17.** இதற்கு இணையாக தனியார் துறையின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. எமது நாட்டின் தனியார் தொழில் முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 1950 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையிலும் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து இருப்பினும் அவர்களின் தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டதுடன் இலங்கையின் தனியார் தொழில் முயற்சிகள் முழுமையாக வீழ்ச்சி அடைந்தது. 77 ஆம் ஆண்டில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலனாக மீண்டும் தனியார் தொழில் முயற்சிகள் உருவான போதிலும் அவர்களுக்கு தேவையான வசதிகள் உரிய விதத்தில் வழங்கப்படவில்லை.

**3.18**.நாட்டில் பெரும்பாலானவர்கள் தொழில் முயற்சிகளை சிறந்த மனோபாவத்துடன் நோக்கி இருக்கவில்லை. நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குகின்ற தொழில் முயற்சியாளர்கள் வில்லன்களை போல் கருதப்பட்டனர். நாட்டில் தயாரிக்கப்படுகின்ற தொலைக்காட்சி நாடகங்களில் பெரும்பாலானவை கிராமத்தில் உள்ள கடை முதலாளியை சித்தரித்தது வில்லன் கதாபாத்திரம் போலவே ஆகும். கிராமத்தில் உள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களில் இருந்து பாரிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள் வரை எல்லோரும் சுரண்டி வாழ்கின்றவர்களைப் போல கருதக்கூடிய மனோநிலை கட்டி எழுப்பப்பட்டிருந்தது.

**3.19.** நாம் இந்த நிலையை மாற்றுதல் வேண்டும் தனியார் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல் வேண்டும். புதிய தொழில் முயற்சியாளர்கள் உருவாக்குதல் வேண்டும். அவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். அவர்களது பணிகளை மிகவும் உற்பத்தித் திறன் உடையதான விதத்தில் கொள்கை ரீதியான சூழல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

**3.20.** இதற்கு இணையாக தனியார் துறையின் தொழில் முயற்சியாளர்களை முன்னேற்ற வேண்டியுள்ளது. பொருளாதார நடவடிக்கை ஒழுங்குபடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடு, சந்தை தோல்விகளை திருத்திக் கொள்ளுதல் மற்றும் சட்டமும் ஒழுங்கும் ஆகியவற்றை பாதுகாப்பது சம்பந்தமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**3.21.** இவை அனைத்தையும் பின்னணியாகக் கொண்டு நாம் கட்டி எழுப்பப் போகின்ற பொருளாதாரத்தை ‘சமூகப் பாதுகாப்பு திறந்த பொருளாதார முறை’ என வரைவிலக்கணப்படுத்த நான் விரும்புகிறேன்.

**3.22.** இப்புதிய பொருளாதாரத்தில் நாம் மூன்று பிரதான விடயங்களை பற்றி கவனத்தை செலுத்துகிறோம்.

☞ 12

# வரவு செலவுத்திட்ட உரை - 2023

1.ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டிக்குரிய பொருளாதாரம்.

2.சூழல் நட்பான பசுமை மற்றும் நீலப் பொருளாதாரம்.

## 3. டிஜிட்டல் பொருளாதாரம்

**3.23** இவ்வாறான புதிய பொருளாதார அடிப்படை ஒன்றை உருவாக்குவது சவால் மிக்க பணியாகும். வெறுமனே வரி முறையில் மாற்றங்களை செய்வதன் மூலம் மாத்திரம் அவ்வாறான புதிய பொருளாதாரத்தை உருவாக்க முடியாது. புதிய வருமான வழிகளை கண்டறிதல் வேண்டும். புதிய துறைகளை கண்டறிதல் வேண்டும். பாரிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் மீளமைப்பு என்பவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**3.24** நாம் இங்கு விசேடமான இரண்டு விடயங்களை அடிப்படையாக கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம்.

**3.25** முதலாவது பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் மீள்ஒழுங்குபடுத்தல் இரண்டாவது பொருளாதார நவீனமயப்படுத்தல்.

**3.26** துரித பொருளாதார வளர்ச்சி ஒன்றை நாம் அடைந்து கொள்ளுதல் வேண்டும். நாட்டின் ஒட்டுமொத்த வாய்ப்பையும் பயன்படுத்த வேண்டும். இங்கு நாட்டின் வளங்களின் அடிப்படை பற்றி மீளாராய்தல் செய்தல் அதேபோன்று அவற்றை மீளமைப்பதும் முக்கியமானதாகும். கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் சமுத்திர வளங்கள், கைத்தொழில்,வியாபாரம்மற்றும்முதலீடு, பாதுகாப்பு வெளிநாட்டு உறவுகள், போன்ற அனைத்தையும் நவீனமயப் படுத்தபட வேண்டும். நாம் இந்த சமூக பொருளாதார மாற்றத்தை உலகளாவிய நிகழ்வுகளை கவனத்திற்கொண்டு மேற்கொள்ளுதல் வேண்டும். விசேடமாக காலநிலை மாற்றங்கள் குறித்து கூடுதலான கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது.

**3.27** பொருளாதார மாற்றத்திற்கு தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களை நாம் கூடிய விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்போம்.

**3.28** இதன்போது நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்துடனும் அதேபோன்று கைத்தொழில் மற்றும் சமூக தொடர்புத் தொகுதியுடனும் இணைந்திருக்கின்ற பல்வேறு தரப்பினர்களுக்கு இடையில் பொதுவான சமூக உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அத்தியாவசியமான விடயமாகும். சட்டவாக்கத் துறை, நிறைவேற்றுத்துறை, நீதித் துறை, தொழிற்சார் குழுக்கள், ஊடகத்துறை, சமயக் குழுக்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புக்கள் ஆகியவற்றை இதற்காக இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நீண்ட கால சமூக நல்லிணக்கத்தை பேணி வருவதற்கும், துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி மோதலின்றிய பயணிப்பதற்கு இந்த பொது உடன்பாடு மிகவும் முக்கியமானதாகும்.

**3.29** நாம் உருவாக்குகின்ற சமூக சந்தை பொருளாதாரத்தினூடாக, அல்லது சமூக

- ★ பாதுகாப்பு திறந்த பொருளாதாரத்தினூடாக இந்த இலக்குகளை முதலில் அடைந்து
- ★ கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.
- ★ 78 சதவீத பொருளாதார வளர்ச்சி
- ★ சர்வதேச வர்த்தகத்தை மொ.உ. உற்பத்தியின் 100 சதவீதமாக அதிகரித்தல்.
- ★ 20232032 வரை புதிய ஏற்றுமதி ஊடாக ஐ. அ.டொலர் 3 பில்லியன் வருடாந்தம் அதிகரிப்பு
- ★ 10 வருடங்கள் முழுவதும் வருடாந்தம் ஐ. அ.டொலர் 3 பில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடு
- ★ எதிர்வரும் பத்து ஆண்டுகளினுள் உயர்தேர்ச்சிபெற்ற சர்வதேசளவில் போட்டிமிக்க தொழிற்படை யை உருவாக்குதல்

**3.30** இவ்விலக்குகளை அடைந்து கொள்வதற்கு, நாம் போட்டிக்குரிய உயர் செயலாற்றுகையை கொண்ட நவீன பொருளாதாரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தனியார் துறை முன்னிலையான ஏற்றுமதிக்கு சார்பான போட்டிக்குரிய நவீன பொருளாதாரம். அதன் பயணத்தை இந்த வரவுசெலவுதிட்டத்துடன் ஆரம்பிக்கின்றோம். சுதந்திரம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவடைகின்ற 2048 ஆம் ஆண்டு ஆகின்ற போது அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை உருவாக்குவதற்கான புதிய நுழைவிற்கும் முறைமைக்குமான பின்னணி 2023 ஆம் ஆண்டு இவ்வரவுசெலவுதிட்டத்தின் மூலம் தயாராகின்றது.

**3.31** ஆயினும், இவ்வரவுசெலவுதிட்ட முன்மொழிவானது மரபு ரீதியான வரவுசெலவுதிட்ட முன்மொழிவுகளிலிருந்து வேறுபட்டதாகும். நாம் வழக்கமாக கொண்டிருப்பது யாதெனில், வரவு செலவுதிட்ட முன்மொழிவு ஊடாக பொருட்களின் விலையைக் குறைத்தல், சம்பள அதிகரிப்பு, மற்றும் நிவாரணம் போன்றவற்றை பெற்றுக்கொள்வதே ஆகும். உலக நாடுகளிடம் கடன் பெற்றோ அல்லது வெளித்தோற்றத்துக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதாக காட்டிகொள்ளும் வரவுசெலவுதிட்ட முன்மொழிவை முன்வைப்பதற்கு நாங்களும் விரும்புகின்றோம். அவ்வாறான பிரபல்யமிக்க தீர்மானத்தை எடுத்தமையினாலேயே நாம் பாதை தவறிவிட்டோம். தற்போது தவறான பாதையில் சென்று எம்மை தொலைத்து நம்பிக்கை இழக்க முடியாது.

**3.32** வெளிநாடுகளிலிருந்து கடன் பெற்று விருந்து உண்பதற்கு இவ்வரவு செலவுதிட்ட ஊடாக எதிர்பார்க்கவில்லை. இவ்வரவுசெலவுதிட்டம் மூலம் எங்களது சக்தியை கொண்டு நாம் எழுந்து நிற்க கூடிய அடிப்படையொன்றை உருவாக்குகிறது. புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அணுகுமுறையை தோற்றுவிக்கிறது.

**3.33** இவ்வரவுசெலவுதிட்டத்தின் ஊடாக நாம் உருவாக்கின்ற அடிப்படை மீது எதிர்காலத்தை கட்டியெழுப்புவோமானால், 2023 இன் இறுதியளவில் நாம் மீட்சியடைகின்ற பொருளாதார நிலைமையை அனுபவிக்க இயலுமாக இருக்கும். பொருளாதாரத்தின் அத்தகைய பிரதிலாபங்கள் நாட்டில் பெருக்கெடுக்கும்.

**3.34** இங்கு இன்னுமொரு விடயத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாம் கொண்டு வருகின்ற பொருளாதார மறுசீரமைப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வந்த மறுசீரமைப்புக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கப் போவதில்லை. சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்த பொருளாதார மறுசீரமைப்பு பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மாத்திரம் வரையறுக்கப்படுகின்றது.

**3.35** நாம் இந்த மறுசீரமைப்பு மற்றும் மீளமைப்பு என்பவற்றை புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற் கொள்கின்றோம் அது நாட்டின் தேவைப்பாடு ஆகும். நீண்ட காலமாக நாட்டுக்குத் தேவையாக இருந்த ஒரு விடயமாகும்.

**3.36** பெரும்பாலான அரசாங்கங்கள் பிரபல்யம் குறித்து சிந்தித்து நிறைவேற்றாத பணிகள். இது நாம் அந்த பொறுப்புக்களை நாட்டுக்காக நிறைவேற்றுகிறோம்.

**3.37** அவ்வாறாயின், 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுதிட்ட முன்மொழிவுகளை முன்வைக்க தற்போது நான் விளைகின்றேன்.

## 4. பேரண்ட அரசிறைக் கட்டமைப்பு

அ. எமது அரசிறை நிலைநிறுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது அரசா ங்க வருமானத்தை 2021 இன் இறுதியிலுள்ளவாறான மொத்த உள்நாட்டு உற்ப த்தியின் 8.3 சதவீதத்திலிருந்து 2025 இல் ஏறத்தாள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

ஆ. 2025 இல் முதலாந்தர மிகையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2 சதவீதத்திற்குமேல் அடைய அரசாங்கம் இலக்கினைக் கொண்டுள்ளதுடன் அதன் பின்னர் இம் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

இ. அரசாங்கத்துறை படுகடனை 2022 இன் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 110 சதவீதத்திலிருந்து நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 100 சதவீதத்திற்கு மேற்படாதவாறு குறைப்பதற்கு நாம் திட்டமிடுகின்றோம்.

ஈ. பணவீக்கமானது நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டமொன்றுக்கான கட்டுப்பாட்டின் கீழ் மீண்டும் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உ. இவற்றுக்கு இசைவாக, வட்டி வீதங்களும் படிப்படியாக மிதமான மட்டத்தினை சென்றடையுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

ஊ. வெளிநாட்டு நிதியிடல் ஊடாக பேரண்டப்பொருளாதார நம்பிக்கை மீளவும் நிறுவப்பட்டு, வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் நிறைவாக்கப்பட்டமையுடன் செலாவணி வீதம் மீதான பாதகமான அழுத்தமும் குறைவடையுமென எதிபார்க்கப்படுகின்றது.

ஊ. தொடர்ச்சியான வளர்ச்சியை அதிகரிக்கின்ற கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சியானது நடுத்தர காலத்தில் 5 சதவீதத்தை நோக்கி திரும்பலடையுமெனவும் அதன் பின்னர் உயர்வான மட்டமொன்றுக்கு துரிதமடையுமெனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

### வர்த்தகம் மற்றும் முதலீடு

## 5. வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு முகவராண்மை

**5.1** நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல் தொடர்பான செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். ஏற்றுமதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் வகையில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தனித்தனியாக செயற்படுவதனால் நிறுவனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளி ஏற்றுமதியாளர்களை மிகவும் பாதித்துள்ளது. அதே போன்று முதலீடு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான பல நிக ழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும்.

இதனால் வசதிகளை அதிகரிப்பது போன்று முதலீட்டு நட்பு சூழலொன்றினை உருவாக்குவதற்கு ஏற்றமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பாக மத்தியப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றினை தாபித்தல் அவசியமாகும். இதனடிப்படையில், தற்பொழுது செயற்பட்டு வருகின்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுதாபனம், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் பதிலாக புதிய சட்டமொன்றினை உருவாக்கி ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான விசேட நிறுவனமொன்றினை




தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்த முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

## 6. புதிய பொருளாதார வலயங்கள்

**6.1** வெளிநாட்டு முதலீட்டினை கவருவதற்காக தற்பொழுது இனம் காணப்பட்டுள்ள மேல் மாகாணம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை சூழலினை அண்டிய பொருளாதார வலயங்களை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக முதலீட்டாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று தற்போது பல்வேறு நிறுவனங்களின் கீழ் செயற்படுகின்ற முதலீட்டு மற்றும் கைத்தொழில் வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்படும் விசேட புதிய சட்ட ஏற்பாடொன்றின் கீழ் இந்த பொருளாதார வலயங்கள் தாபிக்கப்படும். வரிச் சலுகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருகின்ற செயற்பாடுகளுக்குப் பதிலாக மாற்று உபாயங்களையும் கவனத்தில் கொள்தல் வேண்டும். இதற்காக ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

## 7. தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவைத் தாபித்தல்

**7.1** கைத்தொழிற் துறைகளுடன் தொடர்பான இறக்குமதி வரி மற்றும் போட்டித் தன்மையுடன் தொடர்பான பிரச்சினைகளை கவனத்திற் கொண்டு முனைப்பழிவுள்ள மற்றும் தரமான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட விசாரணை /ஆய்வுகளை மேற் கொண்டு தொழில்துறைக்குப் பொருத்தமான விற்பனையினை சிபாரிசு செய்தல், கைத்தொழில், வாணிப மற்றும் வியாபார துறைகளுடன் தொடர்பான நுண்பொருளாதார கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், சமூக மற்றும் சுற்றாடல் பிணக்குகள் தொடர்பான தற்பொழுது காணப்படும் ஒழுங்கு விதிகளை மதிப்பாய்வு செய்து திருத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் சிபாரிசு செய்தல், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் புதிய தொழில்நுட்பத்திற்கும் இணங்குவதற்கு முடியாத காரணத்தினால் மூடப்படுகின்ற தொழிற்றுறைகளில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் அவர்களை பயிற்றுவித்து அவற்றில் ஈடுபடுத்துதல், அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு நட்டஈட்டு முறைமையினை முன்மொழிதல் போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுயாதீனமான நிறுவனமொன்றாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதன்போது தற்பொழுது செயற்பட்டு வருகின்ற தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்குப் பதிலாக அவற்றின் செயற்பாடுகளும் உத்தேச ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும். இந்த முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

## 8. உலக சந்தைக்கான அடைவினை அதிகரித்தல்

**8.1** உள்நாட்டு வழங்கல் ஆற்றலினை அபிவிருத்திசெய்கின்ற அதேவேளை, இலங்கை அதன் சந்தை அடைவுகளை விரிவாக்குவது அத்தியாவசியமானதாகும். உலக வர்த்தகமானது இன்று ஆசியா போன்ற பிராந்திய மற்றும் உலக உற்பத்தி வலையமைப்புக்களினால் மேற் கொள்ளப்படுவதுடன் இலங்கை அவற்றிலிருந்து முழுமையாக விலகியிருக்கின்றது. புத்தாக்கம், வினைத்திறன் மற்றும் தரம் என்பவற்றினூடாக உலகச் சந்தையில் போட்டியிடுவதற்கான இயலாமையினைக் கருத்திற் கொண்டு கொள்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

**8.2** இதன் விளைவாக இலங்கை இந்தியா மற்றும் சீனா போன்ற பிரதான சந்தைகளுடன் ஒன்றிணைவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. இரண்டு நாடுகளுடனான வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் 2019 இலிருந்து தடைப்பட்டதுடன் தற்பொழுது நாம் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இலங்கை தாய்லாந்துடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதுடன் சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் பிராந்திய விரிவான பொருளாதார பங்குடமை *(Regional Comprehensive Economic Partnership RCEP)* போன்ற இயக்கவாற்றல்மிக்க பிராந்திய வர்த்தக ஏற்பாடுகளில் ஈடுப டுவதற்கான படிக்கல்லாக அமைகின்றது.

**8.3** சர்வ தேச வர்த்தக உடன்படிக்கைகள் அனைத்தையும் கையாள்வதற்கான சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றினைத் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இது ஆரம்பத்தில் நிதி அமைச்சின் கீழ் தாபிக்கப்படுவதுடன் அது மீள் கட்டமைப்புச் செய்யப்படுகின்றபொழுது இது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைக்கப்படுவதுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு என பெயர் மாற்றம் செய்யப்படும்.

## 9. ஏற்பாட்டுச் சேவை உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

**9.1** ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான மற்றுமொரு தடையாக ஏற்பாட்டுச் சேவைகள் உட்கட்டமைப்பு செயலாற்றுகை காணப்படுகின்றது. எனவே, முதல் 70 நாடுகளுக்கிடையில் இலங்கையின் ஏற்பாட்டுச் சேவை செயலாற்றுகையினை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டு 2023 இலிருந்து 2027 வரையான காலப்பகுதியில் மூன்று வருட ஏற்பாட்டுச் சேவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 10. முதலீட்டு நட்புச் சூழல்

**10.1** மிக அதிகமான வியாபார நட்புச் சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு இலகுபடுத்தப்பட்ட மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற ஏற்பாடுளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கமைவாக, ஆரோக்கியமான வியாபார சூழலொன்றினை உருவாக்குவதற்கு இயலுமான வகையில் செலவினம், செயற்படும் முறைகள் மற்றும் நேரத்தைக் குறைத்தல் என்பதுடன் வெளிப்டைத் தன்மையினை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வகையில் தேவையான மறுசீரமைப்புக்களை அறிமுகஞ் செய்வதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 11. புதிய தொழிற் கொள்கைகள்

**11.1** உற்பத்தித்திறன்வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளை வினைத்திறனுடன் கொண்டுநடாத்தும் விதத்தில் தொழிலாளர், தொழில்தருநர் ஆகிய இருவரும் பாதுகாக்கப்பட வேண்டிய தொழிலாளர் துறையின் மறுசீரமைப்புக்கள் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ளன. போட்டிமிக்க ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட பொருளாதாரமொன்றில் நாட்டின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் இருதரப்பினர்களும் உற்பத்தித் திறன்மிக்க விதத்தில் பங்கேற்க வேண்டும். துறையில் காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிறுவனசார் ஏற்பாடுகள் என்பன தொழில்முயற்சியாளர் இயலுமைகளையும் வியாபார அபிவிருத்திகளையும் நிறுத்தக்கூடாது. தனிப்பட்டவர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அனைத்து சூழலும் ஆக்கபூர்வமாக இருக்கவேண்டிய அதேவேளை, தொழில்முயற்சியாளர்களின் இடர் நேர்வை எடுத்துக்கொள்கின்ற நடத்தையும்கூட முறையாகவும் வெகுமதியளிக்கப்பட வேண்டும். நாட்டின் தொழிற் சட்டங்கள் காலம் கடந்துள்ளன என்பதுடன் கூறுகளாக ஆக்கப்பட்டுள்ளமையினால் தொழில் தருநர் – தொழிலாளர் வகுப்பிற்கும் பொருளாதாரத்திற்கும் நன்மைபயக்கக்கும் விதத்தில் புதிய, இற்றைப்படுத்தப்பட்ட அத்துடன் ஒன்றுசேர்க்கப்பட்ட தொழிற்சட்டமொன்றை இயற்றுவதற்கு முன்மொழிகின்றேன்.

## 12. வேளாண்மை ஏற்றுமதிக்கான காணிகள்

**12.1** பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அதாவது சட்டச் சிக்கல்கள், நிறுவனசார் முரண்பாடுகள், மூலதனம் போதாமை போன்ற காரணத்தினால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் காணி மீட்டல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உரித்தான பாரியளவிலான காணிகள் நீண்டகாலமாக பயிரிடப்படாது அல்லது உற்பத்தித்திறனற்றுக் காணப்படுகின்றன. அத்தகைய காணிகளை பொருளாதாரத்தின் நன்மைக்காக உற்பத்தித்திறனுடன் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அதற்கமைய, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் இரண்டையும் அதிகரிக்கக்கூடிய விதத்தில் அவற்றை உற்பத்தித்திறன் மிக்கவாறு உபயோகிப்பதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்கின்ற திட்டமொன்று உருவாக்கப்படும். ஆகையினால், பாரியளவிலான உபயோகப்படுத்தப்படாத / உற்பத்தித் திறனின்றி பயன்படுத்தப்படுகின்ற காணிகள் ஏற்றுமதிப் பயிர்களை பயிரிடுவதற்காக நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்படும். மேலும், முன்மொழியப்பட்ட வேளாண்மைக் காணி குத்தகை நிகழ்ச்சித்திட்டத்தை வசதிப்படுத்துவதற்கு புதிய சட்டமொன்றும் இச்சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

## 13. அரச காணிகளை உரிமை மாற்றல்

**13.1** அரச காணிகளை உரிமை மாற்றம் செய்வதுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் ஊடாக மாவட்டச் செயலாளர் /அரசாங்க அதிபர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதன், பின்னர் விசேட சந்தர்ப்பங்களுக்காக நிறுவப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் அப்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் காணி குறித்தொதுக்குதல் தொடர்பிலான பூர்வாங்க நடவடிக்கைகள் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் முரண்பாடுகள் மற்றும் முறைகேடாக இடம்பெறுகின்றமை பதிவாகியுள்ளது. ஆகையினால், மேலே குறிப்பிடப்பட்ட விசேட தேவைகள் தற்போது மேற்கொள்ளப்படவேண்டி ஏற்பட்டுள்ளமையினால் அவ்விரு நிறுவனங்கள் மூலமும் செய்யப்படுகின்ற அரச காணி கையுதிர்த்தல் உள்ளடங்கலாக அனைத்து காணி கையுதிர்த்தலுடனும் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்குமுறைமை எதிர்வரும் ஆண்டினுள் தயாரிக்கப்படும்.

## 14. டிஜிட்டல் தொழில்நுட்பம்

**14.1** பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளிலும் சேவை வழங்கும் முறைமைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் நன்மையை நாடு அனுபவித்துவருகின்றது. மின்சக்தி எரிசக்தி அமைச்சினால் பெற்றோலிய விநியோகத்திற்கு கியூஆர் (QR) முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமையின் நன்மைபயக்கத்தக்க விளைவுகள் அண்மையில் அவதானிக்கப்பட்டன. எனவே, தேவையான கொள்கைச் சூழல், சட்டங்கள், நிறுவனசார் ஆதரவு மற்றும் வசதிகள் உள்ளடங்களாக டிஜிட்டல் தொழில்நுட்பத் துறையை மேலும் மேம்படுத்துவது பற்றி ஆராய்வதற்கும் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தொழிற்றுறையிலுள்ள நிபுணர்களையும் தொடர்புடைய அலுவலர்களையும் ஈடுபடுத்தி குழுவொன்றினை நியமிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

## 15. இலங்கையின் கனிய வளங்களை தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்

*15.1* இலங்கையில் காணப்படும் பெரும்பாலான கனிய வளங்கள் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்காக பயன்படுத்தப்படுவது குறைந்த மட்டத்திலாகும். எனவே, அனைத்து கனிய வளங்களையும் தேசிய அபிவிருத்திக்கு வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு முடியுமான பொருத்தமான கொள்கையொன்றினை உருவாக்கி செயற்படுத்துவதற்கு கைத்தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், அரச தனியார் பங்களிப்பு தொடர்பான தேசிய முகவராண்மை (NAPP) மற்றும் உரிய நிறுவனங்களை உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிகின்றேன். இக்குழுவின் அறிக்கையானது மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 16. கறுவா தொழிற்றுறைக்கான புதிய திணைக்களம்

**16.1** கறுவா உற்பத்தி ஏற்றுமதியானது பாரம்பரியமாக முதலிடம் வகிப்பதன் காரணமாக இத்துறையின் முன்னேற்றம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இலங்கையின் கறுவா உற்பத்திக்கு வெளிநாட்டு சந்தையில் விசேட அடையாளமொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்ற வகையில், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனை மேலும் ஊக்குவித்தல் வேண்டும். இதனால் கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக திணைக்களமொன்றினை க றுவாச் செய்கை அதிகளவு இடம்பெறுகின்ற கரந்தெனிய பிரதேசத்தில் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

## 17. புதிய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடுசெய்தல் திட்டம்

**17.1** கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரும்பாலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உரிய வகையில் இனம் காணல் மற்றும் ஒழுங்குமுறையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாததினால் பெரும்பாலான கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட விளைவினை அடைந்துகொள்ள முடியாது போனது. இதன் காரணமாக பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்கு பெறப்பட்ட கடன் நிதியினை மீள் செலுத்துகையில் கருத்திட்டங்களினால் உரிய வருமானத்தினை ஈட்ட முடியாமை காரணமாக அரசாங்கம் வரியாக அறவிடுகின்ற வருமானத்திலிருந்து அதற்கான கொடுப்பனவினை செலுத்த வேண்டியுள்ளது. இது பொருளாதாரத்தினால் தாங்கிக்கொள்ள முடியாத நிலைக்குச் சென்றதன் காரணமாக கடன் முகாமைத்துவ நெருக்கடிகளுக்கும் தேசிய மட்டத்தில் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**17.2** இதனால், எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும் அனைத்து கருத்திட்டங்களும்/ நிகழ்ச்சித்திட்டங்களும் உரிய பொறிமுறையொன்றின் கீழ், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியில் பொருத்தமானவை என சாத்தியவள ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அவ்வாறு இனங்காணப்பட்ட கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டாய்வுக்குட்பட்டு, தேசிய அபிவிருத்தி குழுவுக்கு *(National Development Committee)* சமர்பித்தல் வேண்டும். தேசிய அபிவிருத்தி குழுவானது அரச மற்றும் தனியார் துறையினைச் சேர்ந்த ஐந்து விசேட நிபுணர்களைக் கொணடிருக்கும். இக்குழுவின் மூலம் அனைத்து கருத்திட்டங்களும் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு அவற்றை மீண்டும் சாத்தியவள ஆய்வுக்குட்படுத்தி பொருளாதார ரீதியில் வினைத்திறன் மிக்கது என உறுதிப்படுத்தியதன் பின்னர் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவதற்கு பொருத்தமான கருத்திட்டங்கள் மாத்திரம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்படும்.

### சுற்றுலாத்துறை

## 18. கடல்சார் சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல்

**18.1** சுற்றுலாப் பயணிகளை கவருவதை அதிகரிப்பதற்காக உலகில் அநேகமான நாடுகளின் பல்வேறு துறைகளின் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இலங்கையின் அமைவிடத்தைக் கருத்திற்கொண்டு கடல்சார் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்திற்காக இன்னும் போதுமான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகையினால், முதற் கட்டத்தில் கிழக்கு மாகாணம், தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களில் கடலுடன் தொடர்புபட்ட மூன்று பிராந்தியங்களை இணங்கண்டு அப் பிராந்தியம் தொடர்பில் செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட வலயங்களில் ஆழமற்ற கடல்களில் கடல்சார் செயற்பாடுகளுடன் தொடர்புற்ற சுற்றுலா

☞13

# வரவு செலவுத்திட்ட உரை - 2023

பயணிகளுக்கு பாதுகாப்பான வலயங்களை இனங்கண்டு அவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், அனைத்து சிறிய படகுகளை எடுத்து வருவதற்கும் அவற்றை நிறுத்துவதற்கும், சுழியோடுவதற்குமான உட்கட்டமைப்பு வசதிகளையும் நிவர்த்தி செய்தல், சுற்றுலா பயணிகளுக்காக கடற்கரைகளை அண்மித்து சுகாதாரமான உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் போன்றவற்றை வழங்குதல்.

**18.2** இச்செயற்பாடுகளுக்கு தேவையான நிதி சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வழங்கப்படவேண்டும். இச்செயன்முறையினை ஆரம்பிப்பதற்கு 2023 வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

## பொதுக் கல்வி

### 19. பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை வழங்குதல்

**19.1** நாட்டில் 10,155 பாடசாலைகளில் 1/3 பகுதி மாத்திரமே போதுமான அணுகுவழி மற்றும் வேகத்துடன் கூடிய இணைய வசதிகளைக் கொண்டுள்ளன. பிந்திய தொழில்நுட்பத்துடன் கூடிய கல்விமுறை முன்னேற்றத்திற்காக பாடசாலை முறைமைக்கு இணைய வசதிகளை வழங்குவது தவிர்க்க முடியாததாகும். குறிப்பாக, கிராமியப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை வழங்குவதற்கு அப்பிரதேசங்களில் காணப்படும் உட்கட்டமைப்பு தடைக் காரணியாக விளங்குகின்றது. ஆகையினால், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பங்களிப்புடன் இணைய வசதிகளையும் வழங்குகின்ற தனியார் நிறுவனங்களின் சமூகப்பொறுப்பு எண்ணக்கருவுடன் ஒருங்கிணைத்து தூரப்பிரதேசங்களில் அமைந்துள்ள 1000 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு இலவசமாக இணைய வசதிகளை வழங்குகின்ற சாத்தியப்பாடு ஆராயப்படும்.

### 20. கிராமிய பாடசாலைகளில் வசதிகளை மேம்படுத்தல்

**20.1** கிராமிய பாடசாலைகளில் காணப்படுகின்ற சுகாதார மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் போதுமானதாக இல்லை என்பது எமக்கு அறியக் கிடைத்துள்ளது. அதன் கீழ் அவ்வாறான சிறுவர்கள் கல்வி கற்கின்ற 139 மாகாணப் பாடசாலைகளும் 23 தேசிய பாடசலைகளையும் போன்று மிகக் குறைந்த வசதிகளைக் கொண்ட கிராமியப் பாடசாலைகளில் துப்பரவேற்பாட்டு வசதிகளை விசேடமாக முறையான நீர் வசதிகளைக் கொண்ட மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது தற்போது காணப்படுகின்ற மலசலகூடங்களுக்கு நீர் வசதிகளை வழங்குவதற்கு நிதி ரூபா 200 மில்லியன் ஏற்பாட்டை வழங்குகிறேன்.

## உயர் கல்வி

### 21. அரச பல்கலைக்கழக அனுமதியை திறமை அடிப்படையில் அதிகரித்தல்

**21.1** அரச பல்லைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது கலைத் துறைக்காக மாத்திரம் நாடு முழுவதற்குமான மட்டத்தில் திறமை அடிப்படையில் அனைத்து மாணவர்களினதும் தெரிவு இடம் பெறுகின்றது. இருந்தும் வணிக, தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் கணித பாடத் துறைகளுக்கான மாணவர்களை உட்சேர்க்கின்ற போது திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்கின்றவர்களின் தொகை 40 சதவீதம் மாத்திரமே ஆகும். இந்நிலைமையில், அதிக திறமையினைக் காண்பித்த ஏறாளமான மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவுக்கான சந்தர்ப்பம் கிடைக்காததனால், அவர்கள் கடுமையான இன்னல்களுக்கும் அநீதிக்கும் உட்படுகின்ற அதேவேளை, பொருளாதார அபிவிருத்திக்காக அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்பு இல்லாமல் போகின்றது. ஆகையினால், இந்நிலைமையினை சீரமைப்பதற்கு முறையான செயன்முறை ஒன்றினை அறிமுகப்படுத்துவது அவசியமாகியுள்ளது. அதற்கமைய, 2023/2024 தொடக்கம் மூன்று வருட காலப்பகுதியினுள் தற்போது திறமை அடிப்படையில் அரச பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களின் சதவீதத்தை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதம்வரை படிப்படியாக அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். கல்வி அமைச்சின் மூலம் அரச பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் முறைமையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மூன்று வருடங்களின் பின்னர், இம்முறைமை மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

### 22. வைத்தியர்களுக்கான பட்டப்பின்படிப்பு வசதிகள்

**22.1** கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியர்களுக்கான பட்டப்பின் படிப்பு கற்கை செயற்பாடுகளை அதிகளவான வைத்தியர்களுக்கு விரிவுபடுத்தும் வகையில் பயிற்சியினை வழங்கும் வகையில் விரிவுபடுத்தப்படல் வேண்டும். பேராதனை, உருகுனை, யாழ்ப்பாணம் போன்ற பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு நிறுவனங்களை தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். அதற்கான சட்டரீதியான ஏற்பாடு மற்றும் நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு இந்த பல்லைக்கழகங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய, இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக ரூபா 60 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன். அதேபோன்று, வைத்தியர்களுக்கு பட்டப்பின்படிப்பு கற்கைகளை உள்நாட்டிலேயே அறிமுகப்படுத்தும் பொருட்டு அதற்கான தேசிய கொள்கை ஒன்றினை தயாரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

### 23. தர உத்தரவாத மற்றும் சான்றுப்படுத்தல் சபை

**23.1** பல்கலைக்கழகங்களில் காணப்படும் பட்டப்படிப்பு கற்கைகளின் தரம் மற்றும் அங்கீகாரம் தொடர்பில் கண்டறிவதற்கு நிலைமை சான்றிதல் மற்றும் தர உத்தரவாத மற்றும் அங்கீகார சபையினை (Quality Assurance and Accreditation Board) தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். இதன்கீழ் அனைத்து பட்டப்படிப்பு கற்கை நெறிகளையும் சான்றுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதற்கு உயர் கல்விக்கு பொறுப்பான அமைச்சு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 24. உயர்தர தகைமைபெற்ற மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்

**24.1** இலங்கை சுதந்திரம்பெற்று 75 வருடங்கள் பூர்த்தியினைக் குறிக்கும் முகமாக 2022 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட 75 மாணவர்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு 75 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். அதற்கமைய, தொடர்புடைய வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை தெரிவுசெய்தல். அவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல், மாணவர்களைத் தெரிவு செய்தல், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற விடயங்கள் மீது அவதானம் செலுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்படும் செலவினம் சனாதிபதி நிதியத்தினால் மேற்கொள்ளப்படவேண்டுமென முன்மொழிகின்றேன்.

**24.2** இதற்கு மேலதிகமாக, அரசாங்க பல்கலைக்கழகங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடநெறிகளில் சிறந்த செயலாற்றுகையினைக் கொண்ட 75 பட்டதாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பு கற்கைகளை தொடர்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் தமது பட்டப்பின் படிப்புக் கற்கை களை நிறைவுசெய்ததன் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும்.

### 25. புதிய மருத்துவ பீடத்தினை தாபித்தல்

**25.1** தற்போது இலங்கையின் 11 பல்கலைக்கழகங்கள் மருத்துவ பீடங்களைக் கொண்டுள்ள அதேவேளை அப்பீட ங்களுக்காக 2020 – 2021 கல்வி ஆண்டுகளுக்காக 2001 மருத்துவ மாணவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு ஊவ வெல்லஸ்ஸ பல்கலையில் மருத்துவ பீடத்தினை புதிதாக நிறுவுவதற்கு முன்மொழிகின்றேன். இந்த மருத்துவ பீடத்தினை நிறுவுவதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

### 26. இலங்கை வரலாற்றைக் கற்பதற்கு தனியான நிறுவனத்தினை தாபித்தல்

**26.1** இலங்கையின் வரலாறு தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

## மறுசீரமைத்தல்

### 27. அரசாங்க சேவையை மறுசீரமைத்தல்

**27.1** தற்பொழுது பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் 1,450,000 அரச ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த வகையில் அவர்களது சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காக அரசாங்க வருமானத்தில் பெரும்பகுதி செலவிடப்படுகின்றது. எனவே, அபிவிருத்தி நோக்கங்கள் உள்ளடங்கலாக ஏனைய பொது நோக்கங்களுக்கு அரச வளங்களை ஒதுக்கீடு செய்வது சவாலான ஒரு விடயமாக மாறியுள்ளது. எனவே, தற்பொழுது காணப்படும் தேவை உள்ளடங்கலாக அரசாங்க சேவையின் அனைத்து விதமான நோக்கங்களையும் மீளாய்வு செய்வதுடன் தேவையான மறுசீரமைப்புகள் உள்ளடங்களாக பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 28. வரி விதிப்பனவு மீதான ஜனாதிபதி ஆணைக்குழு

**28.1** ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது அரச வருவாயாக வரியூடாக ஈட்டப்படும் வருமானம் மிகவும் குறைவான வீதத்தில் அறவிடப்படுவதனால் சுகாதாரம், கல்வி மற்றும் வேறு முக்கிய துறைகளுக்காக மூலவளங்களை ஒதுக்கீடு செய்வது இன்னல்களுக்குள்ளாகியுள்ளது. அதற்கமைய எதிர்வரவுள்ள சில ஆண்டுகளில் அரச வருவாயை படிப்படியாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய தற்போது அரசாங்க வருவாயினை சேகரிக்கின்ற நிறுவனங்கள் மத்தியில் செயலாற்றுகை, ஒருங்கிணைத்தல் மற்றும் வரிக்கட்டமைப்பு என்பவற்றில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து பரிந்துறைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வரி விதிப்பு தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவினை தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். ஆணைக்குழுவானது அரசாங்க வருமானத்தை முகாமைசெய்வதற்கான மத்திய நிறுவனமொன்றினை உருவாக்குவதற்கான தேவையினை பரிசீலனைசெய்யும்.

### 29. இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை

**29.1** அரசாங்க சேவை நிறுவனங்களினூடாக சேவைகளை வழங்குகின்ற போது சேவையைப் பெற்றுக் கொள்பவர்கள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத்தகைய அனைத்து கொடுப்பனவுகளையும், பயன்பெறுநர்களுக்கு நிதியை மாற்றல் செய்யும்போது இலத்திரனியல் ஊடாக அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதை 2024.03.01 ஆந் திகதி தொடக்கம் கட்டாயமாக்குவதற்கு முன்மொழிகின்றேன். அதற்கமைய சகல அரச நிறுவனங்கள் மூலமும் இணைய வழி மூலமாக அத்தகைய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முறைமையொன்றினை தயாரிப்பதற்கும், தேவையான சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்நோக்கில் தற்போது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சேவை ஆற்றுகின்ற தகவல் தொழில்நுட்ப அலுவலர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இக் கொள்கையினை செயற்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்கின்றேன்.

### 30. தரவுப்பாதுகாப்பு அதிகார சபையினை உருவாக்குதல்

**30.1** எமது டிஜிட்டல் பொருளாதாரத்தினை நாம் அபிவிருத்தி செய்கின்றோம் என்ற வகையில் டிஜிட்டல் மயப்படுத்தலின் மோசமான தாக்கத்திலிருந்து எமது மக்களின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாக்கும் வகையில் தனிப்பட்ட தரவுகளை பயன்படுத்துவதனை ஒழுங்குபடுத்த வேண்டிய கட்டாயத் தேவை காணப்படுகின்றது.

அரசாங்கம் 2022 இன் 09 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு கடமைப்பட்டு உள்ளதுடன் 2023 இல் தரவுப் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தனிப்பட்ட தரவுகளின் முறையான முகாமையினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் என்பவற்றுடன் இணைந்து புதிய ஒழுங்குபடுத்துநர் நிறுவனம் செயற்படும்.




## தனியார்துறை ஊழியர்களுக்கான காப்புறுதித்திட்டம்

### 31. தனியார்துறை ஊழியர்களுக்கு காப்புறுதி காப்பீட்டைப் பெற்றுக் கொடுத்தல்

**31.1** தனியார் துறையில் தொழில் புரிந்து பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தொழிலினை இழக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளுடன் இது மிகவும் மோசமான சமூகப் பிரச்சினையொன்றாக உருவெடுத்துள்ளதனால் தொழிலினை இழந்து மீண்டும் தொழில் ஒன்றுக்கு செல்லும் வரையான காலப் பகுதிக்கு உயர்ந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றினைப் பெற்றுக்கொடுக்க இயலுமான விதத்தில் காப்புறுதி காப்பீட்டினை பெற்றுக் கொடுப்பதற்கும் அதற்கென காப்புறுதி நிதியமொன்றினை நிறுவுவதற்கும் முன்மொழிகின்றேன்.

**31.2** அதேபோன்று, அரசாங்க ஊழியர்களுக்காக வழங்கப்படுகின்ற அக்ரஹார மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் கீழ் அதிகமானோர் நன்மை அடைகின்ற அதேவேளை தனியார் துறையில் வேலைசெய்கின்ற ஊழியர்களுக்கும் சுகாதார மருத்துவக் காப்புறுதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

**31.3** தனியார் துறை ஊழியர்களுக்காக தொழில்தருநர்கள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குகின்றனர் ஆதலினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் எவையேனும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பது கட்டாயமான பொறுப்புமாகும். அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினரால் முன்மொழியப்பட்ட சுகாதார மருத்துவ மற்றும் காப்பீட்டுக்கு ஒதுக்கீடொன்றினை மேற்கொள்வது உசிதமானதாகும்.

**31.4** அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் இப்புதிய முறைகள் இரண்டையும் உள்ளடக்கும் ஊழியர் பொறுப்பு நிதிய சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும்.

## உணவுப் பாதுகாப்பு

### 32. உணவுப் பாதுகாப்புக்கான இலத்திரனியல் முறைமை

**32.1** உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையினை பேணுவது அத்தியாவசியமாகும். அதற்கமைய வீட்டு அலகுகளுடன் தொடர்புடைய விவசாய மற்றும் உற்பத்தி பற்றிய தகவல்களை இணைய வழி ஊடாகப் பெற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு தேசிய உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட வேண்டும். இந் நிகழ்ச்சித் திட்டமானது உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான பிரிவினூடாக செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

### 33. உள்நாட்டு மீன்பிடித் துறையினை விருத்திசெய்தல்

**33.1** பொது மக்களின் ஊட்டச்சத்து அளவினை மேம்படுத்தும் பொருட்டு அதிகரித்த மீன் உற்பத்தியினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை விரிவுபடுத்தல் வேண்டும். இதன் கீழ் உள் நாட்டு நீர் நிலைகளில் நன்னீர் நீர் உற்பத்திக்காக வசதிப்படுத்துவதன் கீழ் தற்போது கிடைக்கப்பெறுகின்ற மீன் குஞ்சி உற்பத்தி நிலையங்களின் இயலளவினை விருத்தி செய்வதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்கின்றேன்.

## அரசாங்க வருமானத்தினை அதிகரித்தல்

### 34. வரிக் கொள்கை முன்னெடுப்புகள்

**34.1** அரசாங்கத்தின் வருமானப் பற்றாக்குறை காரணமாக இன்று நாம் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றோம்என்றவகையில்,அரசாங்க வருமானத்தினை அதிகரிக்க வேண்டிய அவசியத்தினை தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்காது. 2021 இல் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இது உலகில் ஆகக் குறைந்த வருமானங்களில் ஒன்றாகும். 2019 இன் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி விலக்களிப்புகளை திருத்துகின்ற அதேவேளை, இன்று காணப்படும் நிலைமையினை சீர்படுத்தும் வகையில் 2022 மே 30 ஆந் திகதி, 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி மற்றும் 2022 ஒக்டோபரில் உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஆகிய மூன்று சந்தர்ப்பங்களில் அரசாங்கம் வருமான முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியது. வருமான முன்மொழிவானது, வரிக் கொள்கை இடைவெளி மற்றும் வரிச் சலுகைகளைக் குறைத்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் அதேவேளை வருமானவரி மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றில் முக்கிய மாற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது.

**34.2** இந்த வரி மறுசீரமைப்பினை செயற்படுத்தலானது, 2023 இல் வருமானத்தினை அதிகரிப்பதற்கு உதவுவதுடன் எதிர்காலத்தில் அரசாங்கச் செலவினத்தினை அதிகளவு குறைக்கும் வகையில் செலவு மிக்க நாணய நிதியளிப்பு (பணம் அச்சிடுதல்) என்பதிலிருந்து அப்பால் நகர்த்த முடியுமாக இருக்கும். அத்துடன் அரசாங்க செலவிடல் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் வரிக்கொள்கை நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

**34.3** மின்சாரம், போக்குவரத்து மற்றும் எரிபொருள் உள்ளடங்களாக பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரி விலக்களிப்பு காரணமாக இழக்கப்பட்ட வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதத்திற்கு அதிகமானது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் மீளாய்வின் பின்னர் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. சில விலக்களிப்பு களை நீக்குவதற்கு 2023 ஏப்பரல் 01 ஆந் திகதியிலிருந்து பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கான திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**34.4** சில அரச தொழில்முயற்சிகள் தமது ஊழியர்களது உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் முன்கூட்டிய தனியாள் வருமான வரி (APIT) பொறுப்புக்களை தொடர்ந்து செலுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ் விவகாரம் பொது தொழில் முயற்சிகள் குழுவிலும் அதேபோன்று கணக்காய்வாளர் நாயகத்தினாலும் கேள்விக்குட்படுத்தப்பட்டது. இந்தவகையில் அத்தகைய வரியானது, நிறுவனத்தின் செலவினமாக இருக்க முடியாது என்பதுடன் தனிப்பட்ட வேதனாதிகள் கூட்டு உடன்படிக்கைகளின் கீழ் செலுத்தப்பட்டுள்ளன என்ற வகையில் 2023 சனவரி 01 முதல் அத்தகைய கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**34.5** பீடி மீதான வரி

அ. பீடி தொழிற்றுறையினை ஒழுங்குபடுத்துவதற்கும் பீடி பாவனையிலிருந்து மக்களை தூரமாக்குவதற்கும், பீடி ஒன்றுக்கு 2 ரூபாவினை வரியாக விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்கு மேலதிகமாக சான்றிதழ் மற்றும் உரிமங்களை பெறுவதற்கான ஏனைய செலுத்தவேண்டிய கட்டணங்களும் அதிகரிக்கப்படும்.

**34.6** துணைத் தீர்வைகளை (Para tariffs) இல்லாதொழித்தல்

அ. தயாரிப்பு தொழிற்றுறையினை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கும் விவசாயம் உட்பட உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவையான ஊக்கிவிப்பு மற்றும் வசதிகளை வழங்குவதற்கு, முலப்பொருட்கள் இடைநிலைப் பொருட்கள், சில விவசாய அடிப்படைப் பொருட்கள் தவிர்ந்த மூலதனப் பொருட்களுக்கு ஏற்புடைய செஸ் வரியானது 2023 சனவரி 01 இலிருந்து மூன்று (03) வருடங்களில் நீக்கப்படும். துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு 5 வருட தவணை அடிப்படையில் கட்டம் கட்டமாக இல்லாதாக்கப்படும். அதற்கமைய முன் மொழியப்பட்ட வரியினை நீக்குவது கட்டம் கட்டமாக சரி செய்யப்படுவதற்காக 2023 சனவரி 01 இலிருந்து தற்போது அறவிடப்படும் சுங்கத் தீர்வை வீதமான 0%, 10% மற்றும் 15% ஆகிய தீர்வை வீதங்களை 0%, 15% மற்றும் 20% ஆக திருத்தம் செய்கின்றேன். இதற்கு சமாந்தரமாக வர்த்தக சரிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்ட (Trade adjustment programs) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. எவ்வாறாயினும், விவசாயத்தின் அடிப்படையில் கொண்ட பெறுமதி சேர்த்தல்களின் அடிப்படையிலான கைத்தொழிலாளர்களுக்கு தொடர்புடைய செஸ் வரிகளுக்கு தடைகள் இல்லாத விதத்தில் வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

### 35. வரியல்லா வருமானம்

**35.1** அரசிறை திரட்சிப்படுத்தல் செயன்முறையில் வரியல்லா வருவாயின் அதிகரிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகையினால், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். எனினும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் இம்முன்மொழிவு மூலம் திருத்தம் செய்யப்படாது.

**35.2** இதே தொணியில், கடவுச்சீட்டு, வீசா மற்றும் ஏனைய அறவீடுகள் மீது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**35.3** அரசாங்க நிறுவனங்களினால் அறவிடப்படுகின்ற மற்றும் சேகரிக்கப்படுகின்ற உரிமத் தொகை, வாடகை மற்றும் ஏனைய வரியல்லா வருவாய்கள் பற்றி ஆராய்ந்து பொதுத் திறைசேரிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்றினை நியமிப்பதற்கு நான் மேலும் முன்மொழிகின்றேன்.

**35.4** வருவாய் சேகரிப்பை திரட்டு நிதியத்திற்கு அனுப்புவதில் தாமதம் காரணமாக ஏற்படும் கணிசமான நிதிச் செலவினைக் குறைப்பதற்கான 2023 சனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மூலமான அனைத்து வருவாய் மற்றும் கிடைப்பனவு சேகரிப்புகளை பொதுத் திறைசேரிக்கு நேரடியாக நாளாந்தம் மாற்றல் செய்வதற்கு முன்மொழிகின்றேன். இது தொடர்பில், பொதுத் திறைசேரியானது காலக்கிரமத்தில் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்.

### 36. வரி நிர்வாகம்

**36.1** வரிக் கொள்கை வழிமுறைகள் பற்றிய அண்மைய அறிவிப்புகளானவை பரந்த வரித்தளம், சிறந்த இணங்குவிப்பு மற்றும் கடுமையான அமுலாக்கம் என்பனவூடாக வரி நிர்வாக வழிமுறைகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்ல வேண்டும். அதற்கமைய, தொழில்நுட்பத்தில் மேம்பாடுகள் ஒழுங்குமுறைப்படுத்தல்கள், செயன்முறை மேம்படுத்தல்கள் மற்றும் இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன தொடர்புபட்ட மனித வளங்களில் முதலிடுதல் என்பன வூடாக வரி நிர்வாக வழிமுறைகள் மேம்படுத்தப்படும்.

**36.2** ஒவ்வொரு 18 வயதுக்கு மேற்பட்டவரும் வரிக் கோவையொன்றினை ஆரம்பிப்பது முதற்படியொன்றாக இருக்கின்ற அதேவேளை கோவைகளை ஆரம்பித்தவர்களில் பலர் வரியற்ற அடிப்படைஅளவுக்கு கீழே இருப்பர். ஆகையினால், உயர் வருமானம் உழைக்கின்றவர்களை குறிப்பாக இனங்கண்டு அவர்களை வரி செலுத்தச் செய்கின்ற வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது முக்கியமானதாகும். இது தொடர்பில் வரி நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கு இணைப்பு VI இல் முன்மொழிவுகளை ஆக்குகின்றேன்.

## செலவின முகாமைத்துவம்

### 37. செலவினத்தை வினைத்திறன்மிக்கதாக முகாமைசெய்வதற்கான பொறுப்பு

**37.1** அரசிறை திரட்சிப்படுத்தல் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு முறையான செலவின முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்க வேண்டி அவசியமில்லை. அது வருவாயினை அதிகரிப்பதற்கான முயற்சிகளுடனும் இசைந்ததாக இருக்க வேண்டும்.

**37.2** இடைக்கால வரவுசெலவுத் திட்டமானது பிணிக்கின்ற அரசிறை விதிகளையும் அத்துடன் செலவினங்களை பரிசோதனை செய்வதற்கான பரிசோதனை நாயகம் ஒருவரின் நியமனத்தையும் கூட்டிணைக்கின்ற புதிய அரசாங்க நிதி முகாமைத்துவ சட்டத்தை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக பல முன்மொழிவுகளை அறிமுகப்படுத்தியது, இது அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, அரசாங்கச் செலவினத்தின் கண்டிப்பான கட்டுப்பாட்டினை உறுதிசெய்வதற்கு பல எண்ணிக்கையான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

### 38. தேசிய தொழிற்பாடுகள் நிலையமொன்றினைத் தாபித்தல்

**38.1** நாட்டின் அனைத்து அபிவிருத்தி தலையீடுகள் பற்றிய நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளை கண்டறிந்து, தோன்றுகின்ற பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பதற்காக நிதி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் கீழ் தேசிய தொழிற்பாடுகள் நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கு இது பொருத்தமான நேரமாகும்.

☞14

# வரவு செலவுத்திட்ட உரை - 2023

**38.2** தேசிய தொழிற்பாடுகள் நிலையத்தின் வினைத்திறனமிக்க மற்றும் செயற்றிறன்வாய்ந்த தொழிற்பாட்டுக்கு ஆதரவளிப்பதில் தீர்மானம் மேற்கொள்வதற்காக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் பெற்றுக்கொள்வதற்கு துணையளிக்கும் கருவியாக தேசிய தொழிற்பாடுகள் நிலையத்தினுள் அனைத்தையும் உள்ளடக்கிய இணையத்தளம் அடிப்படையிலமைந்த தேசிய அபிவிருத்தித் தகவல் முறைமையொன்றினை தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 39. ஆயுதப்படை ஆளணி முன்கூட்டியே ஓய்வுபெறுவதற்கு அனுமதித்தல்

**39.1** அவ்வாறு செய்வதற்கு அவர்கள் விரும்புவார்களாயின், விசேட வகை தவிர்ந்த ஆயுதப்படை ஆளணியை 18 வருட சேவையின் பின்னர் ஓய்வுபெற அனுமதிப்பதற்கு முன்மொழிகின்றேன். உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச்செய்யும் விதத்தில் தேவையான பயிற்சியை அவர்களுக்கு வழங்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்படும்.

### 40. அரச ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள்

**40.1** அதிகரித்த போக்குவரத்துச் செலவு, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் அத்துடன் உயர்வான பணவீக்கம் என்பன காரணமாக மாதாந்தக் கொடுப்பனவு மீதான தமது செலவினத்தை முகாமைசெய்வதற்கு அரசாங்க ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவோரும் இக்கட்டான நிலைமையில் இருக்கின்றனர் என்பதை நான் நன்கு அறிவேன்.

**40.2** மேலும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் விளைவாக பொருளாதார மீட்சி காரணமாக சுமார் ஒரு வருடத்தில் அரசாங்க வருவாய் அதிகரிக்குமென எதிர்பார்க்கின்றேன். அதே சந்தர்ப்பத்தில் அரசாங்க துறையினை உகப்பான மட்டத்திற்கு மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமாகவிருக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி மறுசீரமைப்புகள்

### 41. அரச தொழில்முயற்சிகளை மீள்கட்டமைத்தல்

**41.1** நிதியியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைப்பதற்கான அவசியம் கடந்த 6 மாத காலப்பகுதியில் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டன. இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் பொறுப்பளிக்கப்பட்டவாறு அரசக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கின்ற குறிப்பான பணியுடன் நிதி அமைச்சில் தற்போது பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது.

**41.2** தொடக்கத்தில், ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ், ஸ்ரீ லங்கா ரெலிகொம், கொழும்பு ஹில்டன், வோட்டேர்ஸ் எட்ஜ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுடன் சேர்த்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உரிமமாற்றம் செய்வதற்கு வழிமறைகள் எடுக்கப்படும். இதன் பெறுகைகள் நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

**41.3** அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் தொழில் அளவுசார் ஆதாயத்தையும் தொழில் பன்முகப்படுத்தல் வினைத்திறனையும் அத்துடன் ஏனைய நிதியிடல் நன்மைகளையும் அடைந்துகொள்ளும் எதிர்பார்க்கையுடன் உபாய ரீதியான தலையீடுகள் மேற்கொள்ளப்படும். ஆகையினால் பின்னோக்கிய, முன்னோக்கிய அல்லது கிடையான ஒருங்கிணைப்பின் வாயிலாக ஒரே தன்மையுள்ள வியாபாரங்களை ஒரு நோக்காக நிரைப்படுத்த முன்மொழிகின்றேன்.

**41.4** பாரிய ஏற்றுமதி வருவாய்களை கொண்டுவருகின்ற இரத்தினக்கல் தொடர்புபட்ட கைவினைஞர்களுக்கு சிறந்த தரத்திலான சேவைகளையும் வினைத்திறனையும் வழங்கும் பொருட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைக்கப்படும். தொழிற்றுறை பங்குபற்றுநர்களின் நன்மைக்காக இரத்தினக்கல் விற்பனை நிலையம் (Gem Zone) ஒன்றினை உருவாக்குவதற்கான சாத்தியப்பாடுகளை அரசாங்கம் ஆராயும்.

## படுகடன் முகாமைத்துவம்

### 42. தெரிவுசெய்யப்பட்ட அரச தொழில்முயற்சி படுகடனை அரசாங்க ஐந்தொகைக்கு எடுத்துச் செல்லல்

**42.1** தெரிவுசெய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளை வலுப்படுத்துவதன் பாகமாக, இலங்கை மின்சார சபை இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா கம்பனி) என்பவற்றின் படுகடன்களாக முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த அரசாங்கத்திற்கான சீன எக்சிம் வங்கியிடமிருந்து கிடைத்த கடன்கள் 2022 டிசெம்பர் இறுதியளவில் மத்திய அரசாங்க படுகடன்களாக இனங்காணப்படும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி படுகடனும் 2022 டிசெம்பர் இறுதியளவில் மத்திய அரசாங்கப் படுகடனாக இனங்காணப்படும்.

## நிதியியல் துறை

### 43. புதிய நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டம்

**43.1** வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் அவற்றின் செயலாற்றமற்ற பெறுமதியிழந்த சொத்துக்களை வேறுபடுத்தி, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவப்படுகின்ற சொத்து முகாமைத்துவ கம்பனியொன்றுக்கு கைமாற்றுவதற்கு அவற்றை இயலச்செய்வதற்கு நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டத்தின் கீழ் புதிய சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது பாதிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வராக்கடன்களின் விரைவான அகற்றலினை உருவாக்குவதன் மூலம் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானச் செயன்முறையினை சுமூகமாக்கும்.

### 44. நுண்நிதி, கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினைத் தாபித்தல்

**44.1** முறைசாரா பணம் கடன் வழங்குநர்கள், இலங்கையில் உள்ள ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுதோ அல்லது மேற்பார்வை செய்யப்படுவதோ அல்ல. ஆகையால், நிதி அமைச்சிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கிகளிலிருந்தும் பதவிவழி பிரதிநிதித்துவத்துடன் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை ஒன்றைத் தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். முன்மொழியப்பட்ட அதிகாரசபையானது முன்பாகநிதி வாடிக்கையாளர்களினதும் பணம் கடன் வழங்கல் தொழில்களினதும் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதேவேளை ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் மூலம் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடும் தேவைப்பாட்டை அவசியப்படுத்தும்.

### 45. நீல மற்றும் பசுமை நிதியிடல் இடவசதி

**45.1** கௌரவ சபாநாயகர் அவர்களே, சுற்றாடல் நட்புமிக்க பல சொத்துக்களை கடந்த காலத்தில் நாடு உருவாக்கியுள்ளதுடன் வளர்ச்சியடைகின்ற நீல மற்றும் பசுமை நிதியிடல் வசதிக்கான பெறுவழிக்கு சட்டரீதியான பெறுமதியினை உருவாக்குவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. இலங்கை, பல எண்ணிக்கையான சர்வதேச உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட நாடொன்றாக இருப்பதுடன் 30 அளவில் 30 என்ற முன்முயற்சியின் பாகம் ஒன்றாக இருப்பதற்கும் இணங்கியுள்ளது. இந்நோக்கில் நீல, பசுமை மற்றும் நிலைபேறான நிதியிடல் உள்ளடங்கலாக நிலைபேறான முதலீடுகளை கவருகின்ற அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான அதன் நிகழ்ச்சித்திட்டத்தின் மீது நாடு முன்னேறுவதற்கும் வழியமைக்கின்ற கடல் இடம்சார் திட்டம் மீதான பணியைத் தொடங்குவதற்கு பிரத்தியேகமான பொருளாதார வலயங்களை இனங்கண்டு பிரகடனப்படுத்துவதற்கும் முன்மொழிகின்றேன்.

## சமூகப் பாதுகாப்பு

### 46. நலன்புரி அனுகூலங்கள் கொள்கை

**46.1** கௌரவ சபாநாயகர் அவர்களே, என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுத் (திருத்தம்) சட்டத்தின் திருத்தத்தின் வரவுசெலவுத்திட்ட உரையின் 19 ஆம் பந்தியின்பால் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன். 2002 இன் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் பிரகாரம் சமூகப் பதிவகத்தைத் தயாரித்தல் நலன்புரி அனுகூலச் சபையினால் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பயன்பெறுநர் விண்ணப்பங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு தரவு முறைமைகள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சரிபார்க்கத்தக்க தகைமைப் பிரமாணத்தின் அடிப்படையில் பயன்பெறுநர்களை இனங்காண் பதற்கான சட்டரீதியான ஒழுங்குவிதிகள் 2022 ஒக்ரோபர் 20 அன்று ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

**46.2** இச்செயன்முறையின் அடுத்த கட்டமாக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சட்டத்திற்கமைவாக அதனுடன் தொடர்புடைய பிரகடனத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களது தகைமையினைச் சரிபார்ப்பதற்கு ஏற்கனவே பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளின் இல்லங்களுக்குச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய தகைமைப் பிரமாணத்தைப் பயன்படுத்தி பயன்பெறுநர்களைத் தெரிவுசெய்யும் செயன்முறை 2023 சனவரியில் தொடங்கும் என்பதுடன் தகைமையுடையோர் அட்டவணை வெளியிடப்படும். 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலச் சட்டத்திற்கமைவாக அனைத்து நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுத் திட்டங்களும் அச்சமூகப் பதிவக முறைமையின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**46.3** நலன்புரி அனுகூலச் சபையானது அனைத்து நலன்புரி அனுகூலங்களையும் கொடுப்பனவுகளையும் ஒருங்கிணைக்கும். அதன் கீழ் கட்டமைக்கப்படும் இச்சமூகப் பதிவகத்தின் கீழ் அனுகூலங்களின் இலத்திரனியல் கொடுப்பனவுகளும் அனைத்து நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுத்திட்டங்களும் தகைமையுடைய பயன்பெறுநர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வசதிப்படுத்தப்படுகின்றது. புதிய நலன்புரி அனுகூல கொடுப்பனவு திட்டங்களின் கீழான கொடுப்பனவு 2023 ஏப்ரல் அளவில் தொடங்குமென




எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவரை ஏற்கனவே காணப்படுகின்ற நலன்புரி அனுகூலத்திட்டங்கள் பேணப்படும்.

### 47. சமூர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவி வழங்கப்படுகின்ற பயனாளிகளின் கொடுப்பனவுகளை மேலும் அதிகரித்தல்

**47.1** கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்போது தொழிற்படுகின்ற சமூர்த்தி, முதியோர் அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவியை எதிர்பார்த்து குறிப்பிடத்தக்க அளவினர் காத்திருப்பு பட்டியல்களில் தங்கியுள்ளனர். அவர்கள் உண்மையில் நிவாரணம் பெற வேண்டியவர்களாக இருக்கின்ற படியினால், அவர்களுக்கும் கொடுப்பனவுகள் கிடைக்கக்கூடிய வாறு வரவசெலவு திட்டத்தின் மூலம் ஏற்பாடுகளை ஒதுக்குமாறு திறைசேரிக்கு ஆலோசனை வழங்கினேன். அதற்கு அமைவாக இது வரை சமூர்த்தி, முதியோர் அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவியை பெறும் எதிர்பார்ப்புடன் நீண்ட காலமாக காத்திருப்பு பட்டியலில் இருக்கின்ற அத்தியாவசியமாக பயன்களை பெறவேண்டியவர்களுக்கு அந்த நன்மைகளை 2023 ஆம் ஆண்டு முழுவதும் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே வரவசெலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**47.2** தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஆபத்திற்கு உள்ளாக கூடிய மக்கள் முகங்கொடுக்கின்ற சிரமங்களை குறைப்பதற்கு அரசாங்கம் அதிக கவனத்தை செலுத்தியுள்ளது. அதன் கீழ் ஏற்கனவே சமூர்த்தி, முதியோர் அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவி வழங்கப்படுகின்ற பயனாளிகளுக்கும் பொருளாதார தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள 726,000 குடும்பங்களை சேர்ந்த 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு அதிகரிக்கப்பட்ட நிவாரணத்தை மேலும் நான்கு மாதங்களுக்கு வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

**47.3** இவை அனைத்திறகும் தற்போது வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கு மேலதிகமாக மேலும் ரூபா 43 பில்லியன் மேலதிக நிதி ஏற்பாட்டை வழங்குகிறேன்.

### 48. முதியோர் / மாற்றுத் திறனாளிகள் / விதவைகள் / வீட்டலகு தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தல்

**48.1** முதியோர் / மாற்றுத்திறனாளிகள் /குறைந்த வருமானம் பெறுவோர்/ விதவைகள், பொருளாதார ரீதியாக அதிக கவனம்செலுத்தப்படுகின்ற வகுப்பினராவர். அவர்களது திறன்கள் மற்றும் ஊழியம் என்பவற்றைப் பயன்படுத்துவதன் வாயிலாக இச்சமூகத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கு சாத்தியம் காணப்படுவதுடன், இதனூடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அவர்களது பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இந்நோக்கில், மகளிர் விவகார அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு மூலம் ஒவ்வொன்றுமிணைந்த ஒத்துழைப்பு வாயிலாக நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று முன்மொழிகின்றேன். இது தொடர்பில், 2023 ஆம் ஆண்டுக்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும், சந்தையில் அவ்வாறான உற்பத்திகளை ஊக்குவித்து விளம்பரப்படுத்துவதற்கு அரசாங்க – தனியார் பங்குடமையின் கீழ் தனியார் துறையின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 49. சிறுவர்போஷாக்கினை மேம்படுத்தல்

**49.1** தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் அதிகூடிய மந்தபோசனை நிலைமை அதிகரிப்பினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதன் விளைவாக ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சினைகளை குறைப்பதற்காக தற்போது செயற்படுத்தப்படுகின்ற மேலதிக ஊட்டச்சத்து நிகழ்ச்சி திட்டங்களை மேலும் வலுவூட்டுவதற்கு ரூபா 500 மில்லியனை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

## விவசாயம்

### 50. தெங்குப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தல்

**50.1** தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதன் மூலம் உருவாக்கப்படவிருக்கும் அந்நிய செலாவனியை உருவாக்குவதற்கு புதிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றபடியினால் தெங்கின் பெறுமதி சேர் ஏற்றுமதிகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்காக வசதிகள் வழங்கப்பட வேண்டும். அண்மைக் காலங்களில் தெங்குக் காணிகள் துண்டு துண்டாக ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றமை உண்மையானதாகும். எனவே, தற்போதைய தென்னங் காணிகளை பாதுகாப்பதற்கும், அதேபோன்று தென்னை மரங்களை மீள்நடுகை செய்வதை ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**50.2** வருடாந்தம் தெங்கு உற்பத்தியின் மீது கடுமையாக தாக்கம் செலுத்தியுள்ள பல செழிப்பான தென்னங்காணிகளை துண்டாக்கம் செய்வதன் விளைவாக 4 ஹெக்ரேயருக்கு குறைவான தென்னங் காணிகளை துண்டாக்குவதற்கு தற்போதையசட்ட ஏற்பாடுகள்அனுமதியளிக்கிறது. எனவே தற்போதிருக்கும் சட்ட ஏற்பாடுகளை திருத்துவதற்கும் ஒரு ஏக்கருக்கும் குறைவான விஸ்தீரணத்தைக் கொண்ட தென்னங் காணிகளை துண்டாடுவதை வரையறுப்பதற்கும் நான் முன்மொழிகிறேன்.

### 51. பத்து விவசாய தொழில்முயற்சியாண்மை கிராமங்களை நிறுவுதல்

**51.1** விவசாயக் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை விவசாய தொழில்முயற்சியாளர்களாக மாறுதலடையச் செய்வதற்கும் அதனூடாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நோக்கத்திற்காக, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதுடன் கூடிய ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 10 விவசாய தொழில்முயற்சியாண்மைக் கிராமங்களை நிறுவுவதற்கு முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிகின்றேன்.

### 52. தைலோக விஜேபத்ர பயிரை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி

**52.1** தைலோக விஜேபத்ர பயிரை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி ஏற்றுமதி செய்வதற்கான ஆற்றல்களை தேடிப்பார்த்தல் வேண்டுமென நான் முன்மொழிகின்றேன். இதற்காக நிபுணத்துவ குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

### 53. அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தலும் களஞ்சியப்படுத்தலை மேம்படுத்தலும்

**53.1** வேளாண்மை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நாம் கடுமையாக உழைத்தாலும்கூட, முறையற்ற களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து பிரச்சனைகள் போன்ற பல பிரச்சினைகளின் காரணமாக எமது உற்பத்தியில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவை இழக்கப்படுகின்றது. ஆகையினால், அத்தகைய அறுவடைக்குப் பிந்திய சேதங்களை குறைப்பதற்கு தேவையான அறிவு, தொழில் நுட்பம் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை விருத்திசெய்வதற்கு அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திலிருந்து ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## நீர்ப்பாசனம்

### 54. வெள்ளப்பாதுகாப்பு முறைமையினை மேம்படுத்தல்

**54.1** மா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் பெந்தர கங்கையினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன அமைப்புகளுக்கு 500 மில்லியன் வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

## பாற்பொருட் துறை

### 55. திரவப் பால் உற்பத்தியினை அதிகரித்தல்

